வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12

புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 தைத் திங்கள் 4-ம் நாள் (17—1—1965) ஞாயிற்றுக்கிழமை றம்ழான் 13 | இதழ் 34

மில்க்வைற் நீலசோப்
பிரகாசமாய் சலவை செய்கிறது!
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்



## புதிய நம்பிக்கை பொங்கட்டும்!

தமிழ் பேசும் இனத்தின் வரலாற்றில் இருள் சூழ்ந்த ஆண்டு கடந்த மார்கழித் திங்களுடன் முடிவடைந்தது. தமிழ் பேசும் இனத்தின் உரிமைகளைப புறக்கணித்த அரசாங்கம், தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளின் ஒன்று பட்ட எதிர்ப்பினாலும் சனநாயக சக்திகளினுடைய எதிர்ப்பினாலும் வீழ்ச்சியடைந்தது.

இந்தச் சூழ்நிலையில் பிறக்கப்போகும் தைமாதம் 'தை பிறந்தால வழி பிறக்கும்' என்ற முதுமொழிக்கேற்ப ஒரு புது வழியைத் தவிக்கும் தமிழ் பேசும் இனத்திற்குக் காட்டுமென்றே நம்புகிறேன்.

தமிழ் நாட்டில் இந்தியை எதிர்த்துப் போர்க் குரல் எழுப்பப்பட்டுவிட்டது. தென்னக மக்கள் தைத் திங்களில் பெரிய அறப்போர் ஒன்றை நடாத்தப் போகிறார்கள் என்று அறிகிறோம். ஓராண்டு காலமாகத் தமிழ் நாட்டில் ஆங்காங்கே நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் தைத் திங்கள் 14ம் நாளிலிருந்து பெரிய அளவில் நடைபெறப் போகிறது. புத்தாண்டுடன் ஆரம்பமாகும் இவ்வுரிமைப் போர் நிச்சயம் வெற்றி பெற்றே தீரும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களிற் புதிய நம்பிக்கை பொங்க, உரிமை பெறுவோம் என்ற ஆர்வம் பொங்க, இல்லங்கள் தோறும் பால் பொங்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ. அமிர்தலிங்கம்,**

*பொதுச் செயலாளர்,*
*இலங்கைத் தமிழரசுக் கட்சி,*
*14—1—1965.*

அனைவருக்கும் ... பொங்கல் வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"எந்த ஒரு இரகசியத்தையும் மறைத்து வைத்தல் பாவம் என்பது என் கொள்கை!"

—மகாத்மா காந்தி.

## முகவுரை

'நீலவேணி' என்ற தொடர் நவீனத்தைச் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்னம் 'சுதந்திர'னுக்காக நான் எழுத முற்பட்ட சமயம், இரண்டு பெரிய நெருக்கடிகள் தோன்றி என் 'நீலவேணி'யை நிலை கலங்கச் செய்தன!

ஒரு நெருக்கடி இயற்கையினாலும், இன்னொரு நெருக்கடி இன வெறியாலும் தோன்றி 'நீலவேணி'யைப் பிய்த்தெறியப் பார்த்தன.

1957-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில 'நீலவேணி'யை எழுதுவதற்காக நான் பிள்ளையார் சுழி போட்ட போது அண்ட சராசரம் நடுங்கிப் பீதியுறும் வண்ணம் இயற்கை திமிறி எழுந்து இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளை வெள்ளத்தாலும், புயலாலும் கபளீகரம் செய்வதற்கு வாயைப் பிளந்தது.

இந்த இயற்கையின் சீற்றத்தால் தன் மென்னுடல் நடுங்கித் துவண்ட 'நீலவேணி', தன் தைரியத்தினாலும், மன உறுதியினாலும் அடுத்த ஆண்டிலிருந்து 'சுதந்திர'னில் கம்பீரமாகப் பவனிவரத் தொடங்கினாள்.

அப்போ கூட அவளைப் பிடித்த அபாயம் முற்றாக நீங்கியதாயில்லை. தன்னிச்சையாய்ச் சுதந்திர உணர்வோடு குதித்துக் கொம்மாளமிட்டு வந்த அவளைக் குற்றுயிரும், குலையுயிருமாக்கிக் கழுத்தை நெரிப்பதற்குப் படையெடுத்தது இனக்கலவரம்!

1958-ம் ஆண்டு இலங்கைத் தமிழினத்தை நோக்கிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவெறிப் பசாசு தன் கைவரிசையைச் 'சுதந்திரன்' மீதும் காட்டியது!

'சுதந்திரனு'க்கு வாய்ப்பூட்டுப் போட்டு அதன் மூலம் தமிழினத்தின் விடுதலை வேட்கைக்குத் தடைபோட்டது இலங்கை அரசு. இதன்காரணமாக, தெளிந்த நீரோடைபோல் ஓடி வந்த 'நீலவேணி'யும் சிலகாலங்கள் அஞ்ஞாத வாசத்தை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தைப் பெற்றாள். பின்னர் 'சுதந்திர'னின் வாய்ப்பூட்டு நொறுங்கியதும், தொடர்ந்து 'நீலவேணி' வெளிவந்து முழுமை பெற்றதும் வாசக நேயர்கள் அறிந்ததே!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் இதைக் குறிப்பிட நேர்ந்தது என்றால், அன்று 'நீலவேணி' உருப்பெற்ற சூழலுக்கும், இன்று நம்முடைய இந்த 'அழகு சுடும்' என்ற புது நவீனம் உருப்பெற்ற சூழலுக்கும் அசாத்தியமான ஓர் ஒற்றுமை இருந்ததுதான்!

துயரம் செறிந்த சூழலில் உருவாகியிருக்கும் இந்த நெடுங்கதைக்கு, 'நீலவேணி'க்கு ஏற்பட்டது போல் இரண்டாவது தடவையாகவும் 'விபத்து' ஏற்படுமோ என்ற அச்சம் மேலிடுகின்றது!

இன்று நகர்ந்து கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலையைப் பார்த்தால் எதுவும் நடைபெறலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படி இருந்தாலும், ஊழிக்கூத்தை ஆடி தமிழர்களை வஞ்சம் தீர்த்து ஏப்பம் விட்டிருக்கும் பயங்கரச் சூறாவளியை அடுத்து நெருங்கிக் கொண்டிருக்கும் தேர்தல் சூறாவளி நம் செந்தமிழர் குலத்துக்கு நல்ல தொரு பாதையை வகுத்துத் தரும் என்று பரிபூரணமாக நம்புவோம்!

பயங்கர வேகத்தோடு வீசிய புயலை அடுத்துப் பிறந்திருக்கும் 'அழகு சுடும்' என்ற இந்த நெடுங்கதையிலும் புயலின் வீச்சையும், சண்டமாருதத்தின் சன்னதத்தையும் தாம் நாம் காணப் போகின்றோம்.

ஆனால் அங்கு அடிப்பது வாழ்க்கைப் புயல்!

சமீபத்தில் வீசிய சூறைக் காற்றினால் உயிர்கள் சூறையாடப்பெற்ற அமராத்மாக்களின் புனித பாதங்களில் நம்முடைய 'அழகு சுடும்' என்ற இந்த நவீனத்தைப் பக்தி சிரத்தையோடு சமர்ப்பணம் செய்து ஒற்றைகளைப் புரட்டுவோம்...

## 1. என் கணவர்

என் கணவரை ஓர் அமரத்மாவாகவும், மகாத்மாவாகவும் எண்ணி நான் பூசித்து வருவதற்கு, அவர் என் கணவராக இருந்ததோ; அல்லது அவர் அமரத்துவம் பெற்றுவிட்டதோ காரணமல்ல! மற்ற ஆண்களிடம் இல்லாத ஒருசிறப்பு அவரிடம் இருந்தது. இந்தச் சிறப்பினை துணிச்சல் என்பதா? சத்தியம் என்பதா? என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அவரிடம் குடிகொண்டிருந்த அந்தத் துணிச்சல் அல்லது சத்தியம் என்னை மிகவும் கவர்ந்தது. அந்த ஒன்றினுக்காகவே இன்றுவரை அவரை என் இதய பீடத்தில் பிரதிஷ்டை செய்து மகாத்மாவாக வணங்கி வருகின்றேன்.

சமுகத்தின் மொழிப்படி என் கணவர் ஒரு காமாந்தகாரர்! சமுகத்தினால் தரப்பட்ட இந்தப் பட்டத்திற்காக அவர் குன்றிவிடவோ, குறுகிவிடவோ இல்லை. சமுதாயத்தில் நடமாடுவதற்கு வெட்கமுற்று வீட்டில் முடங்கிக்கொள்ளவும் இல்லை. நிமிர்ந்த நெஞ்சோடு, நேர்கொண்ட பார்வையொடு இரு கைகளையும் வீசிக்கொண்டு நிறைவோடு பவனி வந்தார். தன்னைப் பார்த்துச் சிரித்த மனுக்கும்பலைப் பார்த்து அவர் சிரித்தார்! அவருடைய பார்வையில் மனிதர்களெல்லாம் கோழைகளாகவும், நடிகர்களாகவுமே பட்டார்கள். உலகம் அவரை ஒதுக்க ஒதுக்க, உலகத்தைப்பற்றி அவர்கொண்டிருந்த இத்தகைய கருத்துக்கள் மலைபோல உயர்ந்தன.

உணர்ச்சிக்கு அவர் கொடுத்த இடம் மிக உன்னதமானது. 'கற்பு, கற்பு' என்று போற்றப்படுகின்ற சக்தியை உடைத்தெறிய வல்ல மகாசக்தியாகக் கருதினார் உணர்ச்சியை! 'உணர்ச்சியின் கூட்டு; உணர்ச்சியின் திரட்சி மனிதன்' என்பது அவர் சித்தாந்தம். எந்த ஏடும், எந்த நூலும் இந்த உண்மையை அவருக்கு உணர்த்தவில்லை. அத்தனையும் அனுபவம் போதித்த உண்மை.

உலகம் அநித்தியம்; உலகத்தில் நாம் காணுகின்ற அத்தனையும் பொய்த்தோற்றம் என்ற 'மெய்ஞானத்தை' முற்ற முடிவுற உணர்ந்தவர்கள் கணிகையர்களும், பைத்தியக்காரர்களும் என்பதும் என் கணவர் கொண்டிருந்த இன்னுமொரு கருத்து!

அவருடையவாழ்க்கையில் குறுக்கிட்டு இத்தகைய கருத்துக்களையெல்லாம் செருகிய கணிகையர்களும், பைத்தியக்காரர்களும் சென்றுவிட்டார்கள். அந்தக் கருத்துக்களின் துணைகொண்டு சமுகத்தில் எதிர்நீச்சல் போட்டு 'காமுகர்' என்ற பட்டத்தைப் பெற்ற என் தெய்வமும் தெய்வமாகிவிட்டது.

இன்று என் முன்னையில் தலைநீட்டி நிற்கும் அதி முக்கிய பிரச்சினைக்கு அதிவிரைவில் முடிவுகாணும் நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டிருக்கும் நான், என் கணவரின் கடந்த கால வாழ்க்கைமுறையைப் பற்றியும், அவருடைய தனித்துவத்தைப்பற்றியும் சற்று நிதானமாக அசைமீட்பது புதிய பலத்தையும், தெம்பையும் எனக்குத் தந்து என்னை வழிநடத்தும் என்று நம்புகின்றேன்.

என் கணவரின் கடந்த கால வாழ்க்கை ஏட்டைப் புரட்டும்போது அதில்காணுகின்ற அத்தியாயங்கள், பக்குவம் கொள்ளா நிலையிலுள்ளவர்களை நடுநடுங்கவைக்கும் திகில் மிக்கவை.

அவர் வாழ்ந்த வாழ்வு; அவரை எதிர்நோக்கிய சோதனை மிக்க சம்பவங்கள்; அந்தச் சம்பவங்களால் சற்றேனும் நிலை குலையாதிருந்த திரம்; இரகசியங்களை மறைக்கவேண்டிய தன்மனைவியிடமே தன்னுடைய அத்தனை இரகசியங்களையும் ஒன்றுவிடாமல் சொல்லிய சத்திய நிலை, இவை அனைத்துமே கேட்கக் கேட்க, நினைக்க நினைக்க ஆபாசம் போல் சுவையும், வெறியும் தரும் சம்பவங்கள்!

மேல்வெட்டில் நோக்கும்போது என் கணவரின் செயல்கள் யாவும் அசாதாரணமாகவும், என் கணவரே உலகத்துக்கு ஆகாத ஒருவராகவும் தோன்றக் கூடும். என் கணவரிடம் கேட்டால் பதில் வேறுமாதிரியாக வெடிக்கும்.

'இவை அப்படியொன்றும் அருவருக்கத்தக்க அசாதாரண நிகழ்ச்சிகள் அல்ல; ஒவ்வொருத்தனும் தனக்குள் இரகசியமாக ரசிக்கும்சாதாரண நிகழ்ச்சிகள்தாம். இந்த இயல் பூக்கத்தை நான் விண்டு சொல்லுகின்றேன்; மற்றவன் அஞ்சுகின்றான்! கோழை— நடிகன்!'

என் கணவரைப்பற்றி எண்ணும்போது எனக்கு [illegible] பெருமிதம் தோன்[illegible] போல், சிற்சில சமயங்களில் அச்சமும் ஏற்படவே செய்கின்றது. அகால ஆயுள்வரத்தோடு அவர் பிறந்ததற்கு அபரிமிதமாக அவரிடத்திலே ஊறியிருந்த அழகுணர்ச்சியும் ஒரு காரணம் என்று சொல்லவேண்டும். ஒரு காரணம் என்ன; அவர் உயிரைக் குடிக்க அதுவே முதற் காரணமாகவும் இருந்திருக்க வேண்டும்!

அழகை அவர் உபாசித்த வேகம்; அந்த அழகோடு அவர் கலந்து கரைந்த ஆவேசம் அம்மம்மா! அதையாராலும் வர்ணிக்க முடியாது.

இரு முனைக் கோணங்களாகக் களம் அமைத்துக் கொண்டு அழகு என் கணவரைச் சாடி வெற்றிகண்டது.

ஒரு முனையில் இணக்கம், மறுமுனையில் பிணக்கம்!

என் கணவரைக் கவர்ந்[illegible] இணங்கி இழுபட்டு, விரிந்து, விட்டுக்கொடுத்து அவரை உறிஞ்சியது.

என் கணவரை ஈர்த்திழுத்த இன்னுமோர் அழகோ பிணங்கிப் பிணங்கியே அவரை வதைத்தது! எட்டுவதுபோல் நளினம் செய்து; 'தொட்டும்சுவைக்கலாம்' என்ற நம்பிக்கையையும் ஊட்டி அது என் கணவரை உறிஞ்சியது! ஆக இரண்டு அழகுகளாலும் என் கணவருக்கு நட்டம் தான்!

இந்த இரு அழகுகளையும் தவிர்த்து இன்னும் எத்தனை எத்தனையோ அழகுகளெல்லாம் என் கணவரின் வாழ்வில் குறுக்கிட்டுவிளையாடின. அவைகள் தாமாகத்தான் சென்று குறுக்கிட்டனவா? அன்றி அவராகவே சென்று குறுக்கிட்டாரா? என்ற சந்தேகங்களெல்லாம் நமக்குத் தேவையில்லை. அவரைப் பற்றி அப்படியாக நாம் சந்தேகப்படக்கூடாது என்பதற்காகவே எல்லாவற்றையும் இதோ என்னிடம் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார். கிட்டத்தட்ட என்னை அவர் ஒரு நாட்குறிப்புப் புத்தகமாகவே பாவித்து தம்மைப் பற்றிய எல்லா உண்மைகளையும் பதிவு செய்துவிட்டுச் சென்றிருக்கின்றார். அவர் பதிவுசெய்த இந்தக் குறிப்புகளையெல்லாம் கோவைப்படுத்தி—திரல் செய்து வெளியிடுவதன் மூலம் என்னைப் பற்றிய பிரச்சினைக்கு ஒரு முடிவு பிறக்கலாம் என்பதோடு, அவரைத் தூற்றிய சமுகத்துக்கும் ஓர் அடி அடிக்கலாம் என்ற நம்பிக்கையும் பிறக்கின்றது.

என் கணவர் என்னைக் கைப்பிடித்த அன்று என்னிடம் திடீரென்று ஒரு கேள்வியைக் கேட்டார். அந்தக் கேள்வியும், அதற்குப் பதிலும், அதிலிருந்து வெடித்த பல உண்மைகளும் என் கணவரின் மனப்பெட்டகத்தைத் திறந்துவிடும் 'சாவி'யாக மாறியது.

'சரோ! என்னைப்பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?'

திடீரென்று பிறந்த இந்தக் கேள்வியால் தடுமாற்றமுற்று நாணித் தலைகவிழ்த்த என் நாடியைத் தம் இரு கரங்களாலும் தாங்கி நிமிர்த்தி மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார் என் கணவர்.

'சொல்லு சரோ! என்னைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்?'

சொல்லாவிட்டால் தப்ப முடியாது எனக் கண்டு, ஏதோ சொல்லிவைப்போம் என எண்ணிச் சொன்னேன்:

'நான் கனவுகண்டு பெருமூச்சுவிட்டது வீண்போகவில்லை!'

'நல்ல பெண் நீ! நான் எதிர்பார்த்த பதிலைத்தான் சொல்லியிருக்கின்றாய்.'

நான் அடைந்த பெருமிதத்தை என் கண்கள் காட்டிவிட்டன.

என் கண்களில் பனித்த நீர் முத்துக்களைத் தன் பட்டுச் சால்வையால் ஒற்றிவிட்டு அவர் சொன்னார்:

'உண்மைதான் சரோ. மனிதனின் கதையே இந்தப் பெருமூச்சுகளும், கனவுகளும்தாம்! மனிதனின் எந்தப் பருவத்தை எடுத்துக்கொண்டாலும் அங்கேபெருமூச்சுகளும், கனவுகளும்கலந்திருப்பதைக் காணலாம். ஆனால்...'

'ஆனால்?'

'உண்மை அப்படி இருக்க இந்தச் சமுகமானது ஒருவனுக்கு ஒருத்தி என்றும், ஒருத்திக்கு ஒருவனென்றும் சட்டமியற்றி வைத்திருக்கும் கூத்தை நினைக்கும்போதுதான் சிரிப்பு வருகின்றது!'

என் உடலில் மின் பாய்கின்றதா? துணுக்குற்று விடுகின்றேன் நான்.

'நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?'

மிகவும் அழுத்தலாகச் சிரித்துக்கொண்டு என் கணவர் கூறினார்:

'பயந்துபோனாயா சரோ? சமுகக் கோட்பாடு என்ற வட்டத்துள் நில்லாது சற்றுத் தள்ளி நின்று கொஞ்சமும் கூச்சமடையாமல் நம் மனச்சாட்சியைக் கேட்டால், அங்கிருந்து நமக்கு நல்ல தெம்பான பதில் கிடைக்கும்.'

என் கணவர் கூறியது விளங்குவதுபோலவும் இருந்தது; விளங்காதது போலவும் இருந்தது எனக்கு.

என்னுடைய அந்தத் திரிசங்கு சொர்க்க நிலையைப் புரிந்துகொண்டு என் கணவர் சொன்னார்!

'சரோ! நீ மிகவும் நல்ல பெண். நான் சொல்லுவதைப் புரிந்துகொள்ளும் திறன் உனக்கு இருக்கின்றது. சற்று முன்னால், மனச்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'மலைமகள்', திருகோணமலை.

கே: எங்கள் தமிழ் மண்ணில் தான்தோன்றியாக சில காளான்கள் முளைத்து பயிரை நாசம் செய்கின்றன. இக் காளான்களை பூண்டோடு ஒழிப்பதற்கு நாம் உபயோகிக்க வேண்டிய மருந்து யாது என்று கூறுவீராக.

ப: தேர்தல் மழையில் குடை விரிக்கும் காளான்களைப் பூண்டோடு அழிப்பதற்குதான் உங்கள் கைவசம் மருந்து இருக்கிறதே அது தான் வாக்குரிமை அதனை மார்ச் 22ந் திகதி உபயோகித்து காளான்களை அடியோடு பிடுங்கி எறிந்துவிடுங்கள்.

ஃ

ஆர் எம். சின்னையா,
கொழும்பு-11.

கே: அண்ணாவின் இந்தி எதிர்ப்புப் போராட்டமும் தமிழரசுத் தந்தையின் சிங்கள எதிர்ப்புப் போராட்டமும் எதில்போய் நிற்கும்?

ப: வெற்றியில்...அது வரை தொடர்ந்து நடைபெறும்.

ஃ

ச. சிவநடராசா, பருத்தித்துறை.

கே: அனாமந்திரியாக இருந்த வர்களும் அரசாங்கத்தின் அணையிலே அகப்பட்டவர்களும் ஆலைபந்தி காங்கிரஸில் சேர்ந்ததன் நோக்கமென்ன?

ப: மீண்டும் அரை, கால் கிடைக்காதா என்ற நப்பாசை!

ஃ

ஐ. சண்முகராசா, கொழும்பு.

கே: இலங்கைப் பிரதமர் திருமதி பண்டா மீண்டும் பிரதமர் பதவியை அடையலாம் என்று கனவு காண்கிறாராம். அது பலிக்குமா?

ப: இக் கனவு பலிப்பது கடினமே. 1960 மார்ச் தேர்தலின்போது ஏற்பட்ட நிலைமை இத் தேர்தலிலும் ஏற்படலாமென்பது சிலரின் கருத்து.

ஃ

மூ. கந்தையா, வடலியடைப்பு.

கே: சாவகச்சேரியில் போட்டியிடும் திரு சிவானந்தம் பாராளுமன்றத்துக்குத் தியாகிகளை அனுப்பவேண்டும் என்கிறாராம். தமிழ் உரிமைபெற தன் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறாராம் அப்படியானால் அவரை அனுப்பினால் என்ன?

ப: அப்படியானால் தியாகிகளின் ஸ்தாபனமான தமிழரசுக்கட்சியிலல்லவா அவர் சேர்ந்திருக்க வேண்டும்? தியாக நெருப்பாற்றில் எதிர் நீச்சு நீந்திய தியாகமூர்த்திகளின் குழுவில் சேராமல் வெளியே இருந்துகொண்டு 'தியாகத்தை'ப் பற்றி பேசினால் மக்கள் எப்படி நம்ப முடியும்?

ஃ

ந. எழில், பதுளை.

கே: பாரதி 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்' என்று இலங்கையைக் குறிப்பிடுகிறாரே, அப்படியானால் இங்கு தமிழர்கள் இல்லை என்றல்லவா தெரிகிறது. அப்படித்தானே!

ப: தமிழர்கள்வதியும் வடகிழக்குப் பகுதிகளைத் தமிழகத்தின் பகுதிகளாகக் கருதி எஞ்சிய பகுதியை அவ்வாறு அவர் குறிப்பிட்டிருக்கலாம்.

கே: இ. த. அ. கட்சிக்கு அடுத்த தேர்தலில் சென்றமுறையை விடக்கூடிய ஸ்தானங்கள் கிடைக்குமா?

ப: கைப்புண்ணுக்குக் கண்ணாடியா வேண்டும்? தமிழரசுக்கட்சி இன்னும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் சக்தியுடன் மீண்டும் வெளிவரப் போகிறதென்பதுதான் சர்வ நிச்சயமாகி விட்டதே!

ஃ

ஆர். பி. கண்ணன்,
புது வட்டகொடை.

கே: பணத்தால் பெறமுடியாதது எது?

ப: தமிழ்பேசும் மக்களின் ஆதரவு.

கே: துணிவு என்பது என்ன?

ப: வாக்குச் சீட்டுகளைக் கொண்டு எட்டப்பர் கூட்டத்தை அரசியலிலிருந்தே விரட்டியடிப்பது.

ஃ

மு. கந்தையா, வடலியடைப்பு.

கே: கிளிநொச்சி சிவசுந்தரம் ஒரு புதிய கட்சி தொடங்கி, அதைக் கைவிட்டு இப்பொழுது வேறு கட்சியுடன் சேர்ந்து உள்ளார். இவர் முடிவில் எந்தக் கட்சியை கட்டிப் பிடிப்பாரோ?

ப: தானும் ஒரு தலைவராக லாமென நினைத்து ஒரு கட்சி அமைத்தார். முடியவில்லை. அடுத்து அரசியல் அஞ்ஞாதவாசம் செய்யத் தன்னைத் தயார் படுத்திக்கொள்வதற்காக 'அஞ்ஞாதவாசக் கட்சி' என்று கூறப்படும் ஒன்றில் சேர்ந்திருக்கிறாராம்.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை

கே: உலகம் போற்றும் தமிழரசுத் தந்தையை, மூலையில் முடங்கும் சுந்தரப் பெருமான், அரசியல் தெரியாதவரென்று ஓர் குற்றச்சாட்டை அறிக்கையில் விடுத்தாரே பார்த்தீர்களா?

ப: இனத்தின் உரிமைகளை அடகுவைத்தாவது மந்திரிப் பதவியொன்றைப் பிச்சை கேட்டு வாங்குவது என்பது தான் சுந்தாருக்குத் தெரிந்த அரசியல். பாவம்! அவரது அரசியல் அறியாமைக்காக அனைவரும் அனுதாபப்படுவோம்!

ஃ

யூ. எல் எம் தாஹிர்,
சம்மாந்துறை

கே: பொத்துவில் தொகுதி முன்னைநாள் எம் பி மான பஜீத் அவர்களின் புகைப் படத்தைக் கொண்ட கலண்டர்களை இலவசமாக வழங்கி இருக்கிறார்களே, அதைப் பற்றியோ அல்லது அதன் மேல் எழுதப்பட்டிருக்கும் 'தனிப்பெருந் தலைவர்' என்ற வார்த்தையைப்பற்றியோ, நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: சபாஷ். பழைய தனிப் பெருந் தலைவருக்குப் போட்டியாகப் புதிய தனிப் பெருந் தலைவர் ஒருவர் முளைத்து விட்டாரா? படத்தைப் பார்த்து மக்கள் வாக்களித்த காலம் மலையேறிவிட்டது.

ஃ

என். எஸ். ஆர். நல்லையா,
கொழும்பு-13.

கே: சுந்தரிடம் சிறப்பான குணம் ஏதும் உண்டா?

ப: இல்லாமலென்ன? "நான் அதைச் செய்தேன்! நான் இதைச் செய்தேன்! நான்...நான்...நான்! எல்லாம் நான்!" என்று கூறிக் கொள்வது அவரது "சிறப்புக்" குணங்களிலொன்று. சிங்களக் கொடியைக் கொண்டுவந்தவரும், மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையைப் பறித்தவரும் கல்லோயாவில் சிங்களக் குடியேற்றத்தைத் தொடங்கிய வருமான பெரிய சேனநாயக்காவுக்குத் தொடர்ந்து புகழ் மாலை சூட்டிக் கொண்டிருப்பது அவரது மற்றொரு "சிறப்பு"க் குணம்.

ஃ

இ தயாநிதி, ஆனைக்கோட்டை.

கே: தேர்தற் காலத்தில் மட்டும் தலை காட்டுபவர்களை எப்படிச் சொல்வது?

ப: "கடைந்தெடுத்த சந்தர்ப்ப வாதிகள்" என்று கூறலாம்.

ஃ

முஹம்மது ஹுசைன்,
கொழும்பு.

கே: குயுக்தியாரே! தன்னைத் தானே அறிவாளி என்று புகழ்பவனை எப்படி அழைப்பது?

ப: 'அறிவிலி' என்று அழையுங்கள். தற்புகழ்ச்சிக்காரனின் அறிவு சூன்யமாகத் தான் இருக்கமுடியும்.

திருவாளர்
## குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

### இழுபடுமா?

சோவியத் யூனியனுக்கு இலங்கை 17,000 தொன் ரப்பர் விற்பனை செய்ய ஒப்பந்தம் ஒன்று கைச் சாத்தானது.

—செய்தி

ரப்பரைப் போன்று இந்த ஒப்பந்தம் இழுபடாமல் இருக்க வேண்டும் என்று சில முதலாளிகள் பிரார்த்திக்கின்றனர். ஏனென்றால், ருஷ்யர்கள் முதலாளித்துவத்தை வெறுப்பவர்கள் அல்லவா?

### வாய்ப்பூட்டு

பொதுத் தேர்தற் தினத்தன்று அரசியல் பேசக் கூடாது என்று இ. போ. ச சாரதிகளுக்கும் கண்டக்டர்களுக்கும் கட்டளை இடப்பட்டுள்ளது.

—செய்தி

இக்கட்டளைக்குக் கீழ்ப்படிவதைவிட தமது வேலைகளை இராஜினாமாச் செய்வதே மேல் என சாரதிகளும் கண்டக்டர்களும் கூறுகின்றனராம். அதே வேளையில் அரசியல் பேச வாய்ப்பளிக்காத பஸ்களில் பிரயாணம் செய்வதில்லை என்று பஸ் பிரயாணிகள் தங்கள் கிளர்ச்சி செய்யப்போகின்றனராம்.

### நம்பிக்கைத் துரோகம்

இந்நாட்டுக்கு சமதர்மத்தையும் சுபீட்ச வாழ்வையும் அளிக்க சிறிமாவோ பண்டாரநாயக்காவால் மட்டுமே முடியும்.

ரி. பி. சுபசிங்கா

மொஸ்கோவிலிருந்து வந்த சூடான செய்தி இது வாதலினால், இங்குள்ள ருஷ்ய சார்பு கொம்யூனிஸ்டுகள் பெருமிதப் படைந்துள்ளனர். தங்களைக் கையாலாகாதவர்கள் என்று மொஸ்கோ கருதி விட்டதாகவே இவர்கள் எண்ணுவதனால், உடனடியாக சிறுவைக்கார இக்கொம்யூனிஸ்டுகள் தீர்மானித்துள்ளனர்.



### எந்தசுரம்

கல்லோயாப் பள்ளத்தாக்கில் விஷசுரம் பரவுகிறது.

—செய்தி

அது தேர்தற் சுரமாகவும் இருக்கலாம் என்று ஒரு தேர்தல் தாசர் அபிப்பிராயப்படுகிறார்.

### இனிப்பான சம்பவம்

தைப்பொங்கலுக்காக, ஒருவருக்கு இரண்டு அவுன்சு சர்க்கரை வீதம் வழங்கப்படும்.

— செய்தி

இந்த இனிப்பான சமாச்சாரத்தை வெளியிட்டவர்களின் வாயில் ஒரு பிடி சீனியையாவது கொட்ட வேண்டாமா?

### விட்டு விட்டது

இந்நாட்டின் தலைவிதியை சுதந்திரமாக நிர்ணயிக்கும் பொறுப்பை உங்களிடம் விட்டு விடுகிறேன்.

பிரதமர் சிறிமாவோ

இந்த மட்டோடு விட்டு விட்டமை'[illegible] அதிசயம் என்று ஒரு விமர்சகர் கூறுகிறார்.

### யார் காரணம்?

இன்று தமிழர்களுக்கு ஒற்பட்டுள்ள இழிவான நிலை கண்டு அவர்களுக்குச் சேவை செய்யவே நான் தேர்தலில் போட்டியிட முன் வந்தேன்.

—வல்வெட்டித்துறையில்
திரு. பொன்னம்பலம்

தமிழர்களுக்கு இந்த இழிவான நிலை ஏற்படக் காரணம் என்ன என்பதை திரு பொன்னம்பலம் தனது வாயாலேயே கூறினால் நன்றாயிருக்கும், என்று ஒரு வாக்காளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### நல்ல யோசனை

கரையோரப் பகுதி பெண் ரயில் பிரயாணிகள் தங்களுக்கு ஆண் பிரயாணிகள் தொல்லை கொடுப்பதாக புகார் செய்துள்ளனர்

—செய்தி

இந்தப் புகாரைத் தொடர்ந்து கரையோரங்களிலுள்ள புகையிரதநிலையங்களில் விசேட நீதிஸ்தலங்களை அமைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

குறிப்பு:—விவாகரத்துக்களையும், விவாகப் பதிவுகளை சுலபமாக நடாத்துவதற்கு இந்த நீதிஸ்தலங்களுக்கு விசேட அதிகாரங்களும் வழங்கப்படுமாம்

### கரணமிடுவாரோ!

நான் மீண்டும் கல்வி அமைச்சராவேன்.

—கலுகல்ல

இவ்வளவு நிச்சயமாகச் சொல்லியிருப்பதனால் நிச்சயம் இவர் குத்துக்கரணங்கள் அடிப்பார் என்று [illegible]

## தேர்தல் காலப் பேச்சடா

—"ஆரையூர் அமரன்"—

தேர்தல் காலப் பேச்சடா—பதவி
தேடி விட்டால் போச்சடா
தேனின் வார்த்தைப் பூச்சடா—இத்தால்
தேசம பாழாய் போச்சடா

நாட்டு மன்னர் நாமடா—இதைக்
காட்டும் தேர்தல் தானடா
போட்டி வந்த போதடா இதைப்
புரிந்து கொள்வாய் நேரடா

காசும் பணமும் கண்டடா—கொள்கை
காற்றில் பறத்தல் உண்டடா
தாசி நேசம் போலடா—வாக்குத்
தட்டிப் பிடுங்கும் மட்டடா

வசையும் வம்பும் வந்தடா—மனம்
வருந்தும் வார்த்தை தந்தடா
பிசையும் மாவைப் போலடா—வாக்கு
பிடுங்கு மட்டும் தானடா

புதிய கட்சி முளைத்தடா வெறும்
'புருடா' விடுமே வலைத்தடா
பெரிய பதவி நின்றடா—பின்
பொந்தில் வாழும் சென்றடா

திக்குள் விரலை வைத்தடா—நாம்
தெரிந்த உண்மை உண்டடா
வாக்குப் பிச்சை கேட்டடா—உன்
வாசல் வந்தால் கூறடா

காலித் தலைகள் சேர்ந்தடா—வெறும்
பேலி வேடம் போட்டடா
கூலிப் படைகள வைத்தடா—இங்கு
நீலிக் கண்ணீர் விடுமடா

காக்கை வாயின் வடையடா—நரி
கவர்ந்த கதையைப் போலடா
வாக்கைக் கேட்பார் முன்னடா—அதால்
வயிறு வளர்ப்பார் பின்படா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிநுட்பம்: ஐக்கியம்: சர்வாதிகாரம்

# அடுத்த கோஷம் என்ன?

# தமிழ் காங்கிரசார்

# பதில் கூறுவார்களா?

அரசியற் கட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சில வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், அடிப்படைக் கொள்கைகள் உண்டு இவற்றைப் பொது மக்களுக்கு எடுத்து விளக்கி தேர்தற் காலத்தில் வாக்குப் பெறுவது சனநாயக முறை. இலங்கையில் நடைபெற விருக்கும் ஆருவது பொதுத் தேர்தலுக்கான பிரசார மேடைகளிலும் இந்த உண்மையை ஓரளவு பார்க்கமுடிகிறது.

பொதுத் தேர்தலிற் கலந்துகொள்ளும் அரசியற் கட்சிகள் ஒரு சில குறிப்பிட்ட இலட்சியங்களையும், கொள்கைகளையும் எடுத்துக் கூறுகிருர்கள். அக் கொள்கைகளுக்கும் நோக்கத்துக்கும் மாறுபட்ட கட்சிகளைக் கண்டிக்கிருர்கள். இது தேர்தற் காலத்தில் நடைபெறும் மிகச் சாதாரண சம்பவம். ஆனுல், தேர்தற் பிரசாரம் அரம்பமாகிய நாள் முதல் எந்த கொள்கைகளை எடுத்து விளக்க இக் கட்சிகள் முற்பட்டனவோ, அவற்றை தேர்தல் முடியும் வரையும் விடாது முழங்கி வருகின்றன.

இந்த மரபுக்கு மாறுபட்ட முறையில் ஒரு கட்சி தனது தேர்தற் பிரசாரத்தை நடாத்தி வருகிறது. தேர்தற் பிரசாரம் ஆரம்பமாகி முற்முக ஒரு திங்கள் தானும் பூர்த்தியாகவில்லை. இந்த இடைக் காலத்தில் இக் கட்சி தனது போக்கையும், கோஷங்களையும் நேரத்திற்கு நேரம், கூட்டத்திற்குக் கூட்டம் மாற்றிவருவது கண் கூடு.

நடிகர்கள் நிமிடத்திற்கு நிமிடம் வேடத்தை மாற்றுவது போன்றே இக் கட்சியும் கொள்கைகளை மாற்றி வருகிறது. இக்கட்சியின் கடந்த கால வரலாறு நாடறிந்தது. அவற்றை ஆராய்வது அவசியமற்றது.

## மதிநுட்பம்

தமிழ் காங்கிரஸ் கட்சி தேர்தற் பிரசாரமேடையில் அடியெடுத்து வைக்கும் பொழுது 'அறிவாளிகள் மதிநுட்பம் வாய்ந்தவர்கள்' என்ற குரலை எழுப்பியது. அறிவாளிகள், மதிநுட்பம் வாய்ந்தவர்கள் என்ற சொற்பதங்கள் மக்கள் மனதைக் கவரத் தவறியதை உணர்ந்ததும், தேர்தற் கோஷத்தை திடீர் என்று மாற்றிக் கொண்டார்கள் தமிழ் காங்கிரசார்.

அறிவாளிகளையும் மதிநுட்பம் வாய்ந்தவர்களையும் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள் என்று அரசியல் அஞ்ஞாதவாசமிருந்து வந்த தமிழ் காங்கிரசார் குரல் எழுப்புவதை தமிழ் பேசும் பொது மக்கள் ஏற்க மறுத்தார்கள். இக் கருத்தை எள்ளி நகையாடவும் முற்பட்டார்கள்.

இக் கருத்து பொது மக்களின் கவனத்தைக் கவரத் தவறியதை உணர்ந்த தமிழ்க்காங்கிரஸ் கட்சி 'ஒற்றுமை, ஐக்கிய முன்னணி' என்ற கோஷத்தை முன் வைத்து பொதுமக்கள் பார்வையைத் தன் பால் இழுக்க முற்பட்டது.

## ஐக்கிய முன்னணி

1956-ம் ஆண்டிலிருந்து தேர்தலுக்குத் தேர்தல் இக் கருத்தை காங்கிரஸ் முன் வைப்பதால், இக் கோஷமும் பொது மக்களின் கவனத்தை இவர்கள் பால் இழுக்கத் தவறியது. "ஐக்கிய முன்னணி" கோஷத்திற்குத் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் கொடுத்த பதில் பொதுமக்களின் கவனத்தை கவர்ந்ததுடன் ஐக்கிய முன்னணி என்ற தமிழ்க் காங்கிரசின் அரசியல் சூதாட்டத்திற்கும் முற்றுப் புள்ளி வைத்தது.

## சர்வாதிகாரம்

இப்பொழுது 'சர்வாதிகாரம் சனநாயகம்' என்ற கோஷத்தை தமிழ் காங்ரஸ் எழுப்பி வருகிறது. கடந்த வாரம் முதற் தமிழ் காங்கிரஸ் மேடையில் 'சனநாயக ஆட்சியில்தான் எங்கள் உரிமையைப் பெறலாம்' என்ற கோஷம் எழுப்பப்பட்டு வருகிறது. சனநாயகம் பற்றிய இப்பிரச்சினையைக் காங்கிரஸ் அணுகும் முறை பொது மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

தென்னிலங்கையிலுள்ள சனநாயக சக்திகளுடன் இணைந்து சர்வாதிகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமென்று கூறிவருகிருர்கள் தமிழ்க் காங்கிரசார்.

மேலும் தமிழரசுக் கட்சியினர், சர்வாதிகார முயற்சிக்கு துணை நிற்பது போன்றல்லவா அமைந்துள்ளது தமிழ்க் காங்கிரசாரின் பேச்சு?

## தமிழரசார் நிலை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கடந்த கால வரலாறு இப் பிரச்சினையில் சிறிதளவேனும் சந்தேகம் அற்ற முறையில் அவர்கள் நிலையைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. தமிழரசுக் கட்சியினர் நீதியின் வழி நடப்பவர்கள். சரியெனப்பட்டதை என்றுமே கூறத் தவறியதில்லை தமிழரசுக் கட்சியினர்.

## பூங்குன்றன்

கியூபா மீது அமெரிக்கா கை வைத்த பொழுது அது தவறு என்று கண்டித்தார்கள். இந்தியா மீது சீன ஆக்கிரமிப்பு நடாத்திய பொழுது சீனவைக் கண்டித்தார்கள். நடுநிலையில் நின்று, தவறு எங்கிருக்கிறதோ அதைக் கண்டிக்கத் தமிழரசார் என்றுமே தவறியது கிடையாது. இக் காலத்திலெல்லாம் காங்கிரசார் கண் மூடி மௌனியாக அரசியல் அஞ்ஞாதவாசம் இருந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த இரகசியம்.

இலங்கைப் பொறுத்த வரையில், கூட்டரசாங்கம் ஏற்பட்டவுடன் 'தமிழரசாரின் ஆதரவுடன் ஒரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த முயற்சிகள் நடப்பதாக' ஒரு வதந்தியை ஒரு சிலர் கட்டவிழ்த்துவிட்டார்கள். இச் சந்தர்ப்பத்தில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் ஒரு அறிக்கை மூலம் 'சனநாயக சுதந்திரம் முக்கியம் என்றும், அதற்கு தீங்கு நேரிடும் முயற்சிக்கு தமிழரசுக் கட்சி துணை போகமாட்டாது' என்றும் தெளிவுபடுத்தினுர்.

பத்திரிகைச் சுதந்திரம் சனநாயகத்திற்கு முக்கியமானதென்றும் அதை எதிர்க்க வேண்டியது அவசியமென்பதையும் உணர்ந்தவுடன் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து, ஆளவந்தாரின் இம் முயற்சியை முறியடித்தனர் தமிழரசுக் கட்சியினர்.

## விளக்கம் வேண்டும்

இந்த நிலையில் தமிழரசார் மீது சர்வாதிகாரத்திற்குத் துணைபோவதாகக் குற்றஞ் சாட்டுவதற்கு இடமில்லை. அக்குற்றச் சாட்டைப் பொதுமக்கள் ஏற்கப்போவதுமில்லை.

சனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பதற்குச் சனநாயக சக்திகளுடன் இணைந்து நின்றிருக்கிருர்கள் தமிழரசுக்கட்சியினர். இது நடைமுறை உண்மை. இதற்கு அத்தனை தூரம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய அவசியமெதுவுமில்லை.

தமிழ்காங்ரேசார் தென்னிலங்கையிலுள்ள சனநாயக சக்திகளுடன் இணைய வேண்டுமென்றும், சர்வாதிகார நடவடிக்கையை முறியடிக்க வேண்டுமென்றும் அழுத்திக் கூறிவருவதன் அர்த்தம் பொதுமக்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துவது இயற்கையே.

தமிழ்காங்கிரஸ் கட்சியினர் மீண்டும் தமது கடந்தகாலத்தைப் புரட்டிப் பார்க்கிருர்களா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது. தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தற் காற்றுடன் இவர்களும் இணைந்துவிடலாம், பின்னர் இழந்த பழையனவற்றை திருப்பிப் பெற்றுக்கொள்ளலாம் என்று தமிழ்காங்கிரஸ் வாதிகள் எண்ணுகிருர்களா? என்பதைப் பகிரங்கமாகத் தெளிவுப்படுத்துமாறு அவர்களுக்குச் சவால் விடுக்கின்றேம்!

தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி சரியாக ஒருமாதம்கூட முடியவில்லை. இந்த இடைவெளிக்குள் மூன்று விதகோஷங்களைஎழுப்பி விட்டதுதமிழ்காங்கிரஸ். தேர்தல் முடிவதற்கிடையில்இன்னும்எத்தனை விதமான கோஷங்களை எழுப்பப்போகிருர்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# 'அறிவாளர்' கட்சிக்கு மேலும் பலர் விண்ணப்பம்

அம்மான்

அப்பாக்குட்டி அம்மான் அமைக்கும் 'அறிவாளர் கட்சிக்கு நாடெங்கணுமிருந்து ஆதரவுக் குரல் கிளம்பியிருக்கிறது. நியமன தினம் அண்மிவிட்டதனுல் கடந்த 10-ம் திகதி வரை அம்மானின் தேர்தற் பணிமனையை ஆதரவாளர்கள் முட்டி மோதிக்கொண்டிருந்தனர்.

ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிந்துவிட்டமையினுல் அத்தனையையும் பரிசிலனை செய்து பார்க்க உடனடியாக பலமருமக்களின் உதவிகளை அம்மான் கோரினுர். கோரிய உதவிகளும் வீண் போகவில்லை. மருமக்கள் திரண்டு வந்து விண்ணப்பங்களைப் பரிசீலித்து உதவினுர்கள். அவர்களுக்கு முதற்கண் இத்தால் நன்றிதெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வடக்கிலிருந்து அறிவாளர் கட்சிக்கு விண்ணப்பித்துக் கொண்டுள்ள சிலரை முதலில் அவதானிப்போம்.

(அம்மானுக்கு தனிப்பட எழுதிய கடிதம்.)

"அம்மான்;

"கடந்தவாரம் குத்துக் கரண விரர்கள் என்று தங்களைத் தாங்களே கூறிக் கொண்ட பலருடைய விண்ணப்பங்களை வெளியிட்டிருந்திர்கள். நானும் அதே குத்துக் கரண விளையாட்டுகளில் சளைத்தவனல்ல என்பது சகலருக்கும் தெரிந்த விடயமாதலினுல் மீண்டும் நான் விண்ணப்பிக்காமலே நீங்கள் என்னையும் உங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

"குத்துக்கரண வீரரின் பிரதான சீடராக, அவருடைய கட்டளைகளைச் சிரமேற் கொண்டு பல்லாண்டுகள் நான் பணி புரிந்து வந்தேனே! என் குருநாதருடன் அப்போதிருந்த ஆட்சிக்கு நானும் வால் பிடித்துப் பதவி பெற்றேனே. கண்ணை விற்ருவது சித்திரம் வாங்க வேண்டும்' என்ற முதுமொழிக்கு இலக்கணமாகத் திகழ்ந்து எனது தொகுதியில் எத்தனை பாடசாலைகளைக் கட்டினேன்—எத்தனையெத்தனை ஆசுபத்திரிகளை அமைத்தேன்—இன்னும் என்னென்ன வெல்லாமோ செய்தேனே! அவற்றையெல்லாம் பெற்றும் நன்றி கெட்ட என் தொகுதி மக்கள் என்னைத் துரத்தியடித்து விட்டார்கள்.

"எனது தொகுதிப் பெண் வாக்காளர்களையாவது கவர்ந்துவிட அடுப்படி முன்னணி' ஒன்றையும் ஆரம்பித்துப் பார்த்தேன். அதிலும் [illegible] திருப்பப் போகிறேன்' என்று ஒரு குரலை எழுப்பிப் பார்த்தேன் அதுவாவது ஓரளவு எனது பண்டையப் பெருமையை நிலை நிறுத்தும் என்று எண்ணினேன். இதற்கிடையில் எனது மாஜிக் குருநாதர் உங்கள் அறிவாளர் கட்சியை நாடி ஓடி வந்துவிட்டமையினுல் என்னையும் விண்ணப்பிக்கக் கோரினுர்.

"எங்களை மக்கள் மத்தியிலிருந்து ஒதுக்கித் தள்ளிய கோடரிக் காம்புகள் (எங்களுடனிருந்து விட்டு பிரிந்து சென்று எங்களை மக்களிடம் காட்டிக் கொடுத்த துரோகிகள்") மத்தியில் இடம் பிடித்துக்கொண்டு தேர்தலில் நின்று வெற்றிபெற்றுவிட்டு, இடையில் குத்துக்கரண மடித்த ஒருவர் பின்னர் 'அக்கோடரிக் காம்புத் துரோகி'களைத் தூற்ற ஆரம்பித்தார். எங்கே அந்தக் குத்துக்கரண வீரர்' எனக்குப் போட்டியாக முளைத்து விடுவாரோ என்று பயந்தேன். பாவம் ஐந்து மாதக் குழந்தையைக் (ஒரு காளான் கட்சியை) கொலை செய்த குற்றம் சாட்டப்பட்டதனுல் தலைமறைவாகிவிட்டார்.

அவருடைய அரசியல் வானம் இருண்டு விட்டது. இனிமேல் அவர் உங்களை நச்சரிக்க மாட்டார் என்ற நம்பிக்கையின் பேரில் நான் எனது குருநாதரின் சிபார்சுடன் விண்ணப்பித் திருக்கிறேன். எனது மனுவை அங்கீகரித்தருளுங்கள்"

## ஒரு இரகசியம்

அறிவாளர் கட்சியில் சேர அனுமதிகோரும் சில குத்துக் கரணவிரர்கள் கட்டுப்பணச் சலுகையை உத்தேசித்தே விண்ணப்பிப்பதாக ஒரு அந்தரங்கத் தகவல்கிடைத்துள்ளது. ஆனுல், அதை அம்மான் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. ஏனெனில் பெரும் பாலும் எமது கட்சி வேட்பாளர்கள் நிச்சயமாக கட்டுப்பணத்தை இழந்து விடுவார்கள். சுயேச்சையாகத் தேர்தலில் நின்ருல் ரூ 1000 கட்டவேண்டும். ஏதாவது ஒருகட்சியில் சேர்ந்து கொண்டால் ஆக ரூபா 250 மட்டும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும். கட்டுப்பணம் கிடைக்காவிட்டால், ரூ 850 மீதப்படுத்திய வகையிலாவது நமது வேட்பாளர்களுக்குத் திருப்தி ஏற்படுமல்லவா?

இவ்வளவு தூரம் கெஞ்சிக் கூத்தாடும் குத்துக் கரண வீரரை எப்படி விட்டு வைப்பது என்று ஏற்றுக் கொண்டோம்.

இனிமேல் வரும் குத்துக் கரண வீரர்களின் வீரதீர பராக்கிரமச் செயல்களை சுருக்கமாகத் தருகிறேம். சந்தர்ப்பம் கிடைத்தால்

(5-ம் பக்கம் பார்க்க)

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது
மாயா ஜோதி
ஊது பத்திகளே
- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்ரீஸ்,
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாரும் ஏறி இளைத்த குதிரையிலே

## சக்கடத்தார் ஏறுகிறார்

## சறுக்கி விழ மாட்டாரா?

1952 ம் ஆண்டு முதல் திருகோணமலை தமிழரசுக் கோட்டையாகத்திகழ்ந்து வந்திருக்கிறது. தமிழ் காக்கும் பணியில் தயங்காது தன்னுயிரையும் ஈந்துதரக் கூடிய தியாகி நடராசன் போன்ற இளம் காளைகளின் கோட்டம் இத்திருமலை. இதே திருமலை நகரம் கோரப்புயலின் ஊழிக் கூத்திஞல் துவம்சம் செய்யப் பட்டாலும், தமிழ் காக்கும் பணியில் எக்காலும் பின் செல்லாது என்பது உறுதி.

1952 ம் ஆண்டு முதல் 1963 ம் ஆண்டு வரை தீரர் இராசவரோதயம் திருமலையின் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து அமரராஞர். அவர் விட்ட பணியினைத் தொடரும் பொறுப்பை திரு. சு. ம. மாணிக்கராசாவுக்கு திருமலை மக்கள் உவந்தளித்தனர். இனிமேலும் திருகோணமலை தமிழ் பேசும் இனத்தின் தனிப்பெரும் கோட்டையாகவே திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

'எல்லாரும் ஏறி விழுந்த குதிரையிலே சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம்' என்று நாடோடி மொழி உளதே! அதற்கு உவமையாக திருகோணமலையில் திரு. நவரத்தினராஜா ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் நிற்க முற்பட்டுள்ளார்.

### தோற்றவர் பட்டியல்

தமிழரசுக் கட்சியின் கோட்டையான திருகோணமலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு காலும் இடமில்லை, என்பதை திரு. நவரத்தின ராஜா அறியாது போனது வருந்தத்தக்கதே! 1947ம் ஆண்டு காப்டன் கனகசிங்கம் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராகதிருகோணமலைத் தொகுதியிலே குதித்தார். "என்னிடம் ஈ. எஸ். எல். சி. படை இருக்கிறது-பணம் இருக்கிறது. பார்க்கிறேன் ஒருகை' என்று ஆர்ப்பரித்தார். தலைகுப்புற விழுந்தார். அன்றிலிருந்து இன்று வரை அரசியல் பாலைவனத்திலே சிக்கித்தவிக்கிருர். அடுத்து வந்தார் திரு. சிவபாலன்-வன்னியார் நான்என்ருர். வக்காலத்து வாங்கினுர் ஐக்கிய தேசியக்கட்சிக்கு! பெரும் பெரும் சிங்களத் தலைவர்களை எல்லாம் அழைத்து வந்தார். 1947 ம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சியை தோற்கடித்து அரசியல் அரங்கில் புகுந்த திரு. சிவபாலன் அதே ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளஞக 1952ம் ஆண்டு திருமலை மக்கள் முன் தோன்றி தோல்வி கண்டார்.

அடுத்து வந்தார் ஆஞனப்பட்ட திருவாளர் இராஜசிங்கம்- பி.பி. சியில் தமிழ் வளர்த்தவன் தான் தானென்ருர். ஆஞல் திருமலை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு நன்ருகத்தெரியும் அவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் 'சோரநாயகி' என்று. எனவே அவருக்கும் வழமைப் பிரகாரம் பட்டை நாமம் சாத்திஞர்கள்.

**கிழக்குத் தபால்**

திருகோணமலை அரசியலிலே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒதுக்கு இடம் கூடஇல்லை, என்பது பல முறை தெளிவாக்கப்பட்டு விட்டது. எனவே 1960 ம் ஆண்டு நடந்த தேர்தலிலே ஐக்கிய தேசியக்கட்சி தலைகாட்ட முடியவில்லை. ஆயினும் ஆளவந்தவர் கூட்டத்துக்காக ஆலவட்டம் வீசிஞல் மக்கள் உதைத்துக் கலைத்தாலும்-ஆளும் தேவதைகளின் அனுக்கிரகம் இருக்கும் என்ற தத்துவத்தைக் கடைப் பிடித்து ஒரு சிலர் போட்டியிட முன் வந்தனர். புறமுதுகிட்டோடினர்.

### அன்றும் இன்றும்

1963ம் ஆண்டில் திரு. இராஜவரோதயம் அமராகி விட்டதும் திரு. நவரத்தின ராசா இடைத்தேர்தலுக்கு தன்னை தமிழரசுக்கட்சி வேட்பாளஞக நியமிக்கும்படி விண்ணப்பித்தாரென்பதும் வேட்பாளர்களின் தகைமகளை ஆராய்ந்த தமிழரசுக்கட்சி, அமரர் இராஜவரோதயம் இருந்து பொலிவூட்டிய இடத்துக்கு-திருமலை வாழ் தமிழ் பேசும் மக்களின் தளபதியாய் நின்று போரிடுவதற்கு - தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு-திரு நவரத்தினராசாவுக்குத் தகுதியில்லை எனத்தீர்மானித்த தென்பதும் அனைவரும் அறிந்த விஷயமே.

கடந்த நகரசபைத் தேர்தலிலும் திரு. நவரத்தின ராசா குதித்தார். கண்டது பெரும் தோல்விதான்.

அமரர் இராசவரோதயத்தின் மறைவால் திருமலையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இலங்கை வாழ்பேசும் மக்களுக்கு விடுதல் வேண்டும்-தமக்கென ஒரு அரசு வேண்டும்- தமிழுக்கு சிங்களத்துடன் சரியாசனம் வேண்டும்-மலைநாட்டுத் தமிழருக்குக் குடியுரிமை வேண்டும்-திருமலையையும் இதர தமிழ் பகுதிகளையும் சிங்கள பிரதேசங்களாக்கக் கூடாது. என்ற சங்கநாதத்துடன் அன்று தமிழரசு வேட்பாளராக வர முனைந்த திரு. நவரத்தினராசா, இன்றுதாய்த் தமிழை ஒழித்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளஞக-தமிழர் விடுதலைக்கு விரோதியான கட்சியின் வேட்பாளஞக-மலைநாட்டுத்தமிழர் குடியுரிமையைப் பறித்த கட்சியின் தோழஞக - கந்தளாயையும் அல்லையையும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து பறித்தெடுத்தவர்களின் கட்சியின் வேட்பாளஞக-திருமலை மக்கள் முன்வருகின்ருர். முடிவு எதுவாகும் என்பது எல்லோருக்குந் தெரிந்ததுதான். எனவே தான் எல்லோரும் ஏறி விழுந்த குதிரையிலே (ஐ. தே. கட்சி) சக்கடத்தார் ஏறிச்சறுக்கி விழப்போகிருர் என்பதற்காக திரு. நவரத்தினராசாவுக்கு ஏற்கனவே அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி விட்டார்கள் திருமலை அன்பர்கள்.

### அடுத்த வாரம்

மூதூர், கல்குடா தொகுதிகளில் போட்டியிட வந்துள்ளவர்களைப்பற்றி எழுதுகிறேன்

—பாடும் மீன்

---

## 'அறிவாளர்'...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் விபரங்களைத் தருகிறோம்.

விண்ணப்பம் செய்துள்ள ஒருவர் அறிவாளர் கட்சிக்கு விரோதமாக பல்லாண்டு காலம்— அதாவது தமது மாணவப் பருவத்திலிருந்தே எதிர்ப்புக்காட்டியவர்தான். இன்று அறிவாளர் கட்சிக்கு உறுதுணையாக வந்து விட்டார். தட்டிக் கழிக்காமல் அவரையும் சேர்த்துக் கொண்டோம்.

குத்துக்கரண வீரர்களின் தலைவருக்கு பன்னெடுங்காலமாகப் பெரும் கடமைப்பாடுடன் ஒத்துழைப்பு நல்கிய ஒருவரும் விண்ணப்பித்துள்ளார். அவருடைய குருநாதரின் சிபார்சின் பேரில் அவரை அறிவாளர் பட்டியலில் சேர்த்துக் கொண்டாலும், வேருேர் முக்கிய காரணத்துக்காக நாம் அவரை வெளியில் விட்டு வைக்கலாகாது. சில வருடங்கள் ஒரு கிராமச் சங்கத்தின் தலைவராக விருந்தவர் இவர். அச்சங்கத்தின் கணக்கு வழக்குகளே அவருடைய தகுதிகளை அபமானுக்கு வெட்ட வெளிச்சமாக்கி விட்டன. அத்துறையில் அவருடைய 'அறிவு' எமது கட்சிக்கு அருந்துணையாக்குமல்லவா?

கிழக்குப் பகுதியிலிருந்து நமது அறிவாளர் கட்சிக்கு பலர் விண்ணப்பித்திருந்தும் பெரும்பாலானேரின் விண்ணப்பங்களை நாம் பெரும் துக்கத்துடன் நிராகரிக்க வேண்டியேற்பட்டுவிட்டது.

ஒருவர், தான் இதுவரை அரசியல் குத்துக் கரணம் அடிக்கவில்லையாஞலும் பொதுவியலில் பல குத்துக் கரணங்களைப் போட்டுள்ளதாகக் கூறுகிருர். அதற்கு கொழும்பிலுள்ள வை. எம். சி. ஏ. (கிறிஸ்தவ வாலிபர் சங்கம்) முன்றிலைச் சாட்சிக்கு அழைக்கிருர்.

## பிரசாரக் கூட்டம்

இத்திங்கள் 16ம் நாள்சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணியளவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்று உருத்திரபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

தமிழரசு வாலிப முன்னணி உருத்திரபும் கிளைத் தலைவர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

உருத்திரபுரம் 8ம் 10ம் வாய்க்கால் மக்கள் சார்பில் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களுக்குப் பொற்கிளி வழங்கப்படும். திரு. கரையூர் குமரன் பொற்கிளியை வளங்குவார்.

---

இந்த இடத்தில் வைத்து எத்தனையோ ஏமாற்று வித்தைகளைக் காட்டி, தெருவில் விளையாடும் மாயாஜால வித்தைக்காரர்களைவிட அதிகமான அந்தாட்சிகளைப் பெற்றுள்ளாராம். மற்றும்படி ஏதாவது 'சுருட்ட' முடியுமானுலும் தேர்தலின் போது சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடவும் திட்டமிட்டுள்ளாராம். இவருடைய விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டு அப்பாவி ஒருவருக்கு அனுமதி கொடுத்து விட்டோம். அது தவறுதான் என்ருலும் இத்தகைய அப்பாவிகளை நமது அறிவாளர் கட்சியில் சேர்ப்பதனுல் தான் நாம் [illegible] வாய்ப்பு உண்டு.

(மற்றவை பின்னர் தொடரும்)

## நிவாரண உதவியில் பாகுபாடு

### மன்னர், வவுனியாவில் மக்கள் படும் அவதி

(வவுனியா நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட சூருவளியால் மன்னர் வவுனியா பகுதிகள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. மக்களில் 20,000 பேர் மலையகத் தமிழர் ள். இவர்களிற் சிலர் கமத் தொழிலும் சிலர் கூலி வேலையும் செய்து வாழ்க்கை நடத்தி வருபவர்கள். அவர்களது குடிசைகள் யாவும் அழிந்ததோடல்லாது அவர்களது கொஞ்ச நஞ்ச பயிர்களும் சூருவளியால் நாசமாக்கப்பட்டு விட்டன. தங்க விடின்றி, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி இவர்கள் சொல்லொணுத் துன்பம் அனுபவித்து வருகிருர்கள்.

சூருவளியால் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் உதவி அளிக்கிறது என்ற செய்தியை மட்டுமே இவர்கள் கடந்த மூன்று கிழமைகளாகக் கேட்டு வருகிருர்களேயன்றி எதுவித அரசாங்க உதவியும் கிடைக்கப் பெருது தவிக்கின்றனர்.

இவர்களது துயரைத் துடைக்கப் பலர் முயன்றனர். ஆஞல் அவர்கள் "நாடற்றவர்கள்", அவர்களுக்கு எந்த விதமான உதவியும் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டனர் அரசாங்க அதிகாரிகள்.

விடுகளை இழந்த மக்களிற் சிலர் கோவில்களிலும், வேறு மண்டபங்களிலும் தங்கி அவதிப்படுகிருர்கள். அந்த வசதியற்றவர்கள் கைக்கு அகப்பட்ட கந்தைகளால் தங்கள் உடலை மறைக்கக் கூடிய அளவு மறைத்தபடி பனிக் குளிரில் படுத்துறங்குகின்றனர். உண்ண உணவின்றி மாடுகளும் மான்களும் பச்சைப் புல்லையாவது உண்டு வயிறுறுவதைக் கண்டு நாமேன் மனிதராகப் பிறந்தோம் என வருந்தி வாடுகின்றனர்.

[illegible] கள் மட்டுமே இவர்களுக்கு ஒரு சிறிதாவது உதவி கொடுத்துள்ளன. ஆஞல் சோசலிசம் பேசும் 'முற்போக்கு' அரசாங்கமோ அவதிப்படும் அந்த அஞதைகளுக்கு ஆதரவு அளிக்கப்படாதென முடிவு செய்துள்ளது.

நாங்கள் 10ம் நூற்ருண்டில் வாழவில்லை—20ம் நூற்ருண்டில் வாழ்கிறேம்; ஈவிரக்கமற்ற மிருகங்களாக அல்ல நாகரிகம் அடைந்த மக்களாக வாழ்கிறேம் என்பதை இந்தப் பிற்போக்கு அரசாங்கம் மறந்துவிட்டது போலும். பசியால்பரிதவிக்க விட்டுப் படுகொலை செய்ய எத்தனிக்கிறது அரசு. பசிக்குப் பாலின்றித் தவிக்கும் பச்சிளம் குழந்தைகளின் கண்ணீரும், அக் குழந்தைகள் பசியாற்ற முடியாது புலம்பும் தாய்மார்களின் கண்ணீரும், தாயும் சேயும் தவிப்பதைக்கண்டு தானே தவிக்கும் தந்தையினது இரத்தக் கண்ணீர், இன்று அறுக்காது—ஆஞல் நின்று அறுக்கும்—இது நிச்சயம்.

காய்கறி விதைகள்-பூக்கள்

இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும்
அன்றலர்ந்த மலர்கள்—காய்கறி விதைகள்

விநியோகிப்பதில் 23 வருடங்களாகப் பிரசித்திபெற்ற நிலையம்
எஸ். ஏ. பெர்ஞண்டோ

23 ஆண்டுகளாக நம்பிக்கைக்கு பிரசித்தி பெற்று
ஈடிணையற்று விளங்குகிறது.

எல்லோரும், எஸ். ஏ. பெர்ஞண்டோவிடமிருந்து
ஓடர் செய்வதற்குக் காரணம்.
அவர்களது மதிப்பு என்றும் நிலைத்திருப்பதாகும்.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்!

எஸ். ஏ. பெர்ஞண்டோ,
த. பெ. இலக்கம் 16, பழைய பஜார்,
நுவரெலியா.

தொலைபேசி : 283 தந்தி : பாத்திமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பின் வெற்றியைக் குறிக்கும் உயர்ந்த திருநாள் பொங்கல்

தைப்பொங்கல் என்பது தைமாதத்திலே பொங்குதல் எனப் பொருள் படும். மதம், பெருகல், சிறப்பு, அலை, பூரிப்பு, புதுமை என்பன பொங்கலின் மறு பெயர்களாகும். ஒரு வருடத்திதை பகல் அதிகமாயுள்ள பகுதி, இரவு அதிமாயுள்ள பகுதி என இரு பிரிவாகப் பிரிக்கலாம். ஆடித்திங்கள் முதல், மார்கழித் திங்கள் வரை உள்ள பகுதி இரவு அதிகமாயிள்ளது. தைத்திங்கள் முதல், ஆனித் திங்கள் வரை உள்ள பகுதி பகல் அதிகமாயுள்ளது.

ஆடி முதல் மார்கழி வரை உள்ள பகுதியிலே சூரியன் தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். அந்நாளிலே இருளினாலும், பனியினாலும் மக்கள் வாடி வதங்குகின்றனர். தை முதல் நாளாவதும் சூரியன் தெற்குத் திசையை விட்டு, வடக்கு நோக்கிச் செல்கின்றான். இந்நாளிலே பனியினாலும், இருளினாலும் வாடிய மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் அந்நன்னாளையே வெற்றித் திருநாளாகத் தமிழ் மக்கள் கொண்டாடி வருகின்றனர். இதைத்தான் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என நமது ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர்.

தைப்பொங்கல் நமது உழைப்பின் வெற்றியைக் குறிக்கின்றது. இந்நாளிலே வயலிற் புது நெல்லும், இஞ்சியும், மஞ்சளும் விரநது கிடக்கின்றன. வாழையும், கமுகும் பூக்கின்றன; கணவன் இல்லாமல் காத்துக் கொண்டிருந்த இள மங்கை(கள்)யர் திருமணம் செய்து கொள்கின்றனர், மனிதன் புதியவனாக மாறுகிறான். இன்னும் எத்தனையோ விதமான புதுமைகளெல்லாம் நிகழ்கின்றன.

சூரியனையே எதிர்பார்த்திருந்த உழவர்கள் தமது களனிகளிலே விளைந்த புதிய நெல்லையும், சர்க்கரையும் கொண்டு சூரியனைத் தெய்வமாக மதித்துப் பொங்கல் பொங்கிப் படைக்கின்னர். பெரியோர்களும், சிறியோர்களும் எல்லையற்ற ஆனந்தம் அடைகின்றனர்.

வள்ளுவர் பெருமான் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என கூறியுள்ளார். நமது ஆன்றோர்கள் கூட 'உழவற உழுதவன் ஊரிற்பெரியன்' என்றும் கூறியிருக்கின்றனர். ஆம்! உழவுத் தொழிலை நன்றாகச் செய்தவன் ஊரிலே பெரியவனாக இருப்பான். அவனது செல்வம் வற்றாது. இதைத்தான், 'மேழிச் செல்வம் கோடை படாது' என்று

## செல்வி இ. சரஸ்வதி

கூறுகின்றோம். நாட்டிலே செல்வம் பெருகுவதற்கு உழவன் முதலிடத்தைப் பெறுவான். உழவுத்தொழில் செய்தால்தான் ஒரு நாட்டின் அரசன் குடிமக்களைக் காப்பாற்ற முடியும். இதனையே ஔவைப் பிராட்டியார் "வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயர்வான்" என உழவனின் சிறப்பை சிறப்பித்துப் பாடி உள்ளார்.

உழவனுக்கு மழை இன்றியமையாதது. இதனை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே உள்ள செந்தமிழ்க் காவியமான சிலப்பதிகாரம் பின்வரும் பாக்களால் அறிவுறுத்துகின்றது:

"மாமழை போற்றது
மாமழை போற்றதும்,
நாமநீர் வேலியுலகிற்
கவனளி போன்,
மேல் நின்று தான்
சுரத்தலான்"

மழையில் இறைவனது அருளைக் கண்டிருக்கிறார் இளங்கோ அடிகள். மழை இல்லாவிடில் மண்ணுயிர்கள் வாழ்வது கடினம. 'வானம் வறக்கு மேல், வானவர்க்கும் பூசனை செல்லாது' என்பது வள்ளுவர் வாக்கு. எனவே மக்கள் வாழவும், மண் செழிக்கவும் காரணமான மழையைத் தலைவணங்கி, இந்நாளில் நன்றி செலுத்துவோமாக!

தைப்பொங்கலுக்கு அடுத்த நாளில் மாட்டுப் பொங்கல் வருகின்றது. தைத்திங்கள் இரண்டாம் நாளில் மாட்டுப் பொங்கல் விழாவை உழவர் கொண்டாடுவர்.

"ஏறு தழுவுதல்" என்னும் விழாவும் நடைபெறும். கட்டுக் கடங்காத காளைக்ளைக் கட்டி வைத்து அதன் கொம்புகளைக் காளைச் சொந்தக்காரர் கூர்மையாகச் சீவி வைப்பார்கள். "இந்தக் காளையை அடக்குபவனுக்கே என் மகள் உரித்தாவாள்" எனக் காளையின் சொந்தக்காரர் முன்னமே அறிவித்து இருப்பார். மைதானத்திலே நான்கு பக்கமும் பார்வையாளர் சூழ்ந்திருப்பர். காளைகள் அம்மனிதர்களைக் கண்டு மிரண்டு கொண்டிருக்கும். அவ்வேளையிலே மங்கையை மணக்கப் போகும் வாலிபன் வீர நடை போட்டு மைதானத்துக்கு வருவான். காளையின கட்டு அவிழ்க்கப்படும். காளைக்கும் வாலிபனுக்கும் இடையில் கடும் போர் நடக்கும். காளை தனது கூர்மையான கொம்புகளால் வாலிபனைத் தாக்கும். இரத்தம் பீறிட்டுப் பாயும். ஆனால், வாலிபனோ அதை அவதானிக்க மாட்டான். காளையை அடக்குவதிலேயே கவனம் சேலுத்துவான். காளையை அடக்கிவிட்டால் குறிப்பிட்ட கன்னியை அவன் அடைவான்.

இப்படியாகத் தமிழ் மணம் கமழும் இந்த மங்கலப் பொங்கல் நாளில் எல்லோருக்கும் புது வாழ்வையும், புது வெற்றிகளையும் தந்தருளுமாறு வாழ்த்தி வணங்குவோம்!

---

## சகோதரிகள் அனைவருக்கும் எமது பொங்கல் நல் வாழ்த்துக்கள்

—செல்வி அக்கா

---

# மங்கையர் சங்கம்

## நீங்களும் நானும்

சகோதரிகளே!

இவ்வாரத்திலிருந்து மங்கையர் சங்கமும் இன விடுதலைப் போரில் பங்கு கொள்கிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பொங்கல் புதுநாள் தமிழ்பேசும் மக்களுக்கு மங்கல நன்னாளாகும். அந்த மங்கல வேளையிலிருந்தே நாமும் நம்மினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் பொதுத் தேர்தல் களத்திலே புகும் தலைவர்களுக்கு உறுதுணை புரிவோமாக.

இவ்வாரம் செல்வி பூங்கொடி எழுதிய கட்டுரையும், செல்வி இ சரஸ்வதி எழுதிய பொங்கற் கட்டுரையும் இடம் பெறுகிறது. அளவிற் சிறிய அரசியற் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றை நீங்களும் எழுதி அனுப்புங்கள். தகுதி கண்டு பிரசுரிப்போம்.

—செல்வி அக்கா

## பொங்கல்

—தமிழழகி—

கங்குல் விலகிடப்
பொங்கல் புலர்ந்தது
காவியக் காட்சிகள்
எங்கும் மலர்ந்தன
மங்கிய மண்ணதில்
மாட்சிகள் தாவின
மாதவ மெங்கனும்
பண்பினில் மேவின
அங்கங்களின் எழில்
கண்ணைப் பறித்திட
ஆர்த்தத் தமிழரின்
அங்கம் சிலிர்க்குது
தங்கத் தகட்டொளி
துள்ளி யெழுந்தினி
தாழ்வு நமக்கிலே
என்று புகழுது!

---

# மக்கள் வளர்த்த இயக்கம் மாண்டு போக மாட்டாது

## நம்மினத்தின் அல்லல்களை நாமே அகற்றிடுவோம்

அடுக்கடுக்காக அல்லக்களை ஏற்று அவதிப் பட்டுழலுகின்றது தமிழ் பேசும் இனம். ஆள வந்தவர்கள் படிப்படியாக நமது உரிமைகளனைத்தையும் அபகரித்துவிட்டனர். எத்தனையோ ஆசை வார்த்தைகளைக் கூறிக் கூறி எம்மை ஏமாற்றி எம் தொண்டைக்குள் பெரும்பான்மையினரின் மொழியையும் கலையையும் கலைச் சாரத்தையும் பண்பாட்டையும், ஏன் மதத்தையும் கூட அமுக்கிக் கொண்டே வருகின்றனர்.

### 'பூங்கொடி'

துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று இன்பம் காண நாம் இயன்றவரை பாடுபட்டுக் கொண்டே வருகிறோம்.

ஆனால், எமக்குள்ளேயே எத்தனையோ பிளவுகள். பதவி தேடி அலைவோரும் பணத்தைச் சுருட்ட நினைப்போரும், சந்தர்ப்பம் பார்த்துக் காட்டிக் கொடுக்கத் துடிப்போரும் நம்முன் முட்டி மோதிக் கொண்டு நம்மினத்தைச் சின்னாபின்னப்படுத்திக் கொண்டுள்ளனர்.

### சாபத் திட்டா?

இதனை நமது இனத்துக்கு ஏற்பட்ட ஒரு சாபத்திட்டு என்று [illegible] வேறு எவ்வகையில் கூறமுடியும்?

1949-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி உதயமாகிய போது அதனை ஒரு வேடிக்கையாகக் கருதியவர்கள் தான் அதிகமாகக் காணப்பட்டனர். 'குற்றுயிராக கருகிவிடப்போகிறது' என்று கணித்தார்கள். திடமான திட்டம், உறுதியான கொள்கை நேர்மையான போக்கு நிதர்சனமான முடிவு ஆகியவற்றின் துணையுடன் அமைக்கப்பட்ட கட்சியை அவமதித்தவர்களும், கேவலமாகக் கருதியவர்களும், ஏளனமாக எள்ளி நகையாடியவர்களும் திகைத்துப் போகும் வகையில் கட்சி வளர்ந்தது. தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த சக்திகளனைத்தையும் திரட்டிய ஒரு பேரணியாகத் திகழ ஆரம்பித்தது.

பொறுமைக்காரர்கள் கொள்கையை விலை கூறிவிற்பவர்கள், காட்டிக்கொடுக்கும் கயவர்கள் முதலியோர் ஒடி ஒதுங்கி மறைந்து கொண்டனர்.

1961-ம் ஆண்டிலே நடைபெற்ற சத்தியாக்கிரகப் போர் ஒப்புவமையற்ற ஓர் மகத்தான இயக்கமாகியதை உலகமே கண்டு வியந்தது.

தமிழரசுக் கட்சியே தமிழ் பேசும் இனத்தைப் பீடித்துள்ள நோயினைக் கண்டு, அந்நோயினைப் போக்கடிக்கும் மருந்தினையும் கண்டு பரிகாரத்தையும் தேட ஆரம்பித்தது ஆகவே, நோயைத் தீர்த்து தமிழ் பேசும் இனத்தை சீர்படுத்தி வழி நடத்த வல்லது தமிழரசுக் கட்சியே என்பது தெளிவாகிவிட்டது. இத்தகைய மக்களின் இயக்கததை முறியடித்துவிட இனி எந்த சக்தியாலும் முடியவே முடியாது. ஆகவே, நாம் அனைவரும் ஆண் பெண் என்ற பேத

## பேதங்களை மறந்து பணிபுரிய வாரீர்

மின்றி, மூத்தோன் இளையோன் என்பதனை மறந்து, இனசன மத பாகுபாடுகளனைத்தையும் துறந்துதமிழரசுக் கட்சி வெற்றி காண அயராது பாடுபடுவோமாக.

வரப் போகும் பொதுத் தேர்தல் தமிழ் பேசும் இனத்தின் வளம் பெருக்கும் களமாக அமையப் போகிறது.

---


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நீர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, எலும்புகளில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாட்வுவி குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3,00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நீர். 174 செட்டியார் தெரு, கொழும்பு—11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## முன்னுரை

தமிழ் பேசுமினம் தனது வரலாற்றைத் தொடர்ச்சியாக, முழுமையாக, உள்ளதை உள்ளவாறே எழுதி வைக்கவில்லையென்ற குறைபாடு-குற்றச்சாட்டு நீண்ட காலமாக இருந்து வருகிறது. 'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்தகுடி' என்று சொல்லி நாம் பெருமைப்பட்டாலும், நமக்கு ஒரு முறையான வரலாற்றை எழுதிவைக்க நமது முன்னோர்கள் தவறிவிட்டார்கள். காலவெள்ளத்தினால் அழிந்துபோன எண்ணிறந்த ஏடுச்சுவடிகள் நீங்கலாக இன்று எமது கைகளுக்கு கிடைத்திருக்கும் சில இலக்கிய-இலக்கண நூல்களும், அந்நூல்களுக்கு எழுதி வைக்கப்பட்ட உரைகளும், கல்வெட்டுக்கள் - செப்பேடுகள் இவை மட்டுமே தமிழினத்தின் பண்டைய வரலாற்றுப் பெருமையை உணர்த்த துணையாக இருக்கின்றன.

### பொறுப்பு

இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளைகூட ஆதாரபூர்வமாக எழுதி வைக்கப்படவில்லை. இக்குறைபாட்டினை நிகழ்கால-வருங்கால வரலாற்று ஆசிரியர்கள், மாணவர்கள் நீக்கி வைக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த நம்பிக்கை எனக்குண்டு மிக அண்மையில் வெளிவந்த சில வரலாற்று நூல்கள் எனது நம்பிக்கையை அரண் செய்கின்றன. இன்னும், ஐந்நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வருகின்ற தமிழினம் எமது காலத்தை ஒட்டிய, முறையான வரலாறு இல்லையே என்று குறைபட நாம் இடங்கொடுக்கக் கூடாது என்ப



தற்காகவே இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது.

### காரணம்

நான் ஓரளவு வரலாறு படித்தவன் ஆனால், வரலாற்று ஆசிரியன் அல்ல. 'நமது வரலாறு' என்ற தலைப்பில் இலங்கை வாழ் தமிழ் பேசுமினத்தின் விடுதலை இயக்கமாக விளங்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றை அரசியற் கண்ணோட்டத்தோடு எழுத வேண்டுமென்று கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக வாலிப நண்பர்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இக்கட்டுரைத் தொடரை எழுத முன்வந்துள்ளேன். முக்கியமாக கட்சியின் ஆரம்பகால வரலாற்றை, கட்சி தோன்ற வேண்டியிருந்த காரண காரியங்களையும், அதைப் பின்னிப் பிணைந்த நிகழ்ச்சிகளையும் உள்ளது உள்ளவாறு எழுத விழைகிறேன்.

### நம்பிக்கை

மேலும் ஒரு விடயத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இளம் வாலிபர்களை, மாணவர்களை மனதில் வைத்துக் கொண்டே இக்கட்டுரைத் தொடரை எழுதுகிறேன் காரணம் தமிழ் அரசுக் கட்சி தோன்றி இன்று பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன. அன்று 'குறு குறு நடந்து சிறுகை நீட்டி இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்' மழலை பேசி மகிழ்வித்தவர்கள் இன்று வாலிபர்களாக இல்லை வாக்காளர்களாக வளர்ந்து விட்டார்கள்! அது மட்டுமல்ல; நாளை தமிழ் பேசுமினத்தின் தலைவிதியை நிர்ணயிக்கிற மகத்தான பொறுப்பும் அவர்களது கையில இருக்கிறது. அந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்ற அத்தகைய பணிக்கு அவர்களைப் பக்குவப்படுத்த இக்கட்டுரைத் தொடர் பயன்பட வேண்டும், பயன்படுமென்று நம்புகிறேன்.

## 1. ஆரம்பம்

1949ம் ஆண்டு மார்கழித் திங்கள் 18ம் நாள் இந்நாளே இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தோன்றிய நாள். மருதானையில் அப்போது இருந்த அரசாங்கலிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் கட்சியின் ஆரம்பக் கூட்டம் நடைபெற்றது. தந்தை செல்வநாயகம் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். கட்சியின் இலட்சியமும் அடிப்படைக் கொள்கைகளும் அமைப்பு விதிகளும் இக்கூட்டத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டன. இருநூற்றிப்பதினாறு இயங்கும் உறுப்பினர்கள் கட்சியில் சேர்க்கப்பட்டார்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உதயம் இந்த நாட்டு தமிழ்பேசுமினத்தின் அரசியல் வரலாற்றில் முக்கிய திருப்பு முனையாகும். இதன் உண்மையைப் பின் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விளக்குவேன்.

### இலட்சியம்

கட்சியின் ஆரம்பக் கூட்டம் 'கூடினோம்—கலைந்தோம்' என்ற முறையில் நடைபெறவில்லை. தமிழ் பேசும் தேசிய இனத்துக்கு கூட்டாட்சி (சமஷ்டி) குட்பட்ட சுயாட்சி அரசு நிறுவப்படுவதே கட்சியின் தலையான இலட்சியம் எனவும், அந்த அடிப்படைக் குறிக்கோள்—நோக்கத்தை அடைய தமிழ்பேசும் தேசிய இனத்தின் விடுதலை இயக்கமாகக் கட்சி செயற்படுமென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அது மட்டுமல்ல; கட்சியின் முதலாவது தேசிய மாநாடு 1950ம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 18ம் நாளுக்கு முன் கூட்டப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தந்தை செல்வநாயகம் அவர்களுடைய தலைமை உரையின் ஒரு பகுதியை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக விருக்கும் என நினைக்கிறேன் 16 வருடங்களுக்குமுன் அவர் கூறியதாவது:

### அன்று கூறியது

'இரண்டு' ருட சுயாட்சி தமிழ்பேசும் மக்களை தங்களது சொந்த நாட்டிலேயே தாழ்வான ஒரு நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. இந்த அரசாங்கம் தங்களுக்கு சொந்தமானது என்ற உணர்வு அவர்களிடமில்லை. இச் சூழ்நிலையில் நிலைமையைச் சீர்தூக்கி அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டும்.

சமபல பிரதிநிதித்துவ கோரிக்கை விடுக்கப்பட்டு அது தோல்வி கண்டுவிட்டது. எனவே வேறுபரிகாரம் நாம் தேடவேண்டும்.

இரு வேறு மொழி, பண்பாடு, கலாச்சாரம் கொண்ட இனங்களுள் ஏற்படும்போது தலைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று மொழிவாரியாகப் பிரிந்து தனித்தனி சுதந்திர அரசுகள் நிறுவுதல் இதை விட சற்று கடுமையற்ற பரிகாரம் கூட்டாட்சி (சமஷ்டி) அரசியல் அமைப்பின் கீழ் ஒவ்வொரு மொழி பேசுமினங்களுக்கு தனித் தனி சுயாட்சி அரசு நிறுவுதல்

இந்தப் பரிகாரங்கள் வெற்றி பெறுவதற்கு மக்கள் மொழிவாரியாக வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் வாழவேண்டும். உலகத்தின் பல பாகங்களில் கூட்டாட்சி அரசியல் அமைப்பு பெரும்பாலும் வெற்றிபெற்றிருப்பதை அனுபவத்தில் பார்க்கக்கூடியதாக உள்ளது'

தொடர்ந்து பேசிய தந்தை அவர்கள், இன்று நாம் உதாரணத்துக்குச் சுட்டிக் காட்டுகிற கனடா, சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் நடைமுறையில் இருக்கும் கூட்டாட்சி அரசியல் அமைப்பு முறைபற்றியும் விளக்கம் நல்கினார்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் அன்று தெரிவித்த கருத்தினையே இன்றுவரை கட்சியின் கொள்கையாக கொண்டிருப்பது, தீர்க்கமான சிந்தனைக்குப்பின் தெளிவான அடிப்டையில் கட்சி ஆரம்பிக்கப்பட்டதற்கு நல்ல சான்று. அது மட்டுமல்ல, ஒரு அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு அதன் கொள்கையும் கோட்பாடுமே முக்கியம். தனிமனிதர்களல்ல. எடுத்துச் சொல்கிற கொள்கையில் உயிர் இருக்கவேண்டும். எடுத்துச் சொல்கிற முறையில் நேர்மையும் அறமும் பரிணமிக்க வேண்டும். இவற்றை இலக்கணமாக இல்லாத கட்சிகள், அது 'கெட்டிக்காரர்கள்' கையிலிருந்தாலும், நீண்டகாலம் உயிர்வாழ முடியாது. 'தனிப்பெரும் தலைவரது' தமிழ்க்காங்கிரஸ் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு

கட்சியின் ஆரம்பக் கூட்டத்தில் முக்கிய பொறுப்புள்ள பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட தலைவர்களது பெயர்களை இங்கு குறிப்பிட வேண்டுமல்லவா?

### பதவியாளர்கள்

அன்றைய கூட்டத்தில் தலைவராக தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும், துணைத் தலைவர்களாக திரு. ந இ இராசவரோதயம், டாக்டர் வி. சே. பரமநாயகம் அவர்களும், இணைப் பொதுச் செயலாளர்களாக திரு வ. நவரத்தினம், டாக்டர் இ மு வி. நாகநாதன் அவர்களும், இணைப் பொருளாளர்களாக திரு. பி. என். பிள்ளை, டாக்டர் எம். திருவிளங்கம் அவர்களும், சிறப்புக்குழுத் தலைவராக திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களிற் கோப்பாய்க் கோமான், செயல் வீரர், தியாகமாமலை வன்னியசிங்கம், திருமலை தந்த மாமலை இராசவரோதயம், ஆகிய இருவரும் எம் மத்தியில் இன்று இல்லை என்பதை எண்ணும்பொழுது துக்கம் தொண்டையை அடைக்கிறது.

தமிழரசுக்கட்சி 1949ம் ஆண்டு துவக்கப்பட்டாலும் அதற்குரிய வித்து, அதற்கு முந்திய ஆண்டே இடப்பட்டுவிட்டது அந்த சோகமும்-துரோகமும் கலந்த வரலாற்றை அடுத்த கட்டுரையில் காண்போம்.

(வளரும்)

## மக்கள் குரல்

## யார் அறிவிலிகள்?

நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்து அது நமக்கே உரிமையயாம் என்பதுணர்ந்து, 'அந்நாட்டின் விழியாம் மொழியைக் காக்க, தமிழ்ப் பெருமக்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகட்குட்பட்டு, அறநெறி நின்று அறப்போர் செய்த தீவுப் பெண்கள், அறநெறி பிழைத்த அரசுக்கு அறங்கூற வந்த கண்ணகியின் வழித்தோன்றல்களாவர்.

அறப்போர் நடத்திய சாலை, அவர்கள் மொழிந்த வீரச் சொற்களாவன—

அறப்போர் தொடுப்போம், அடிமை விலங்கை அறுப்போம்'' என்ற கூற்றின் பொருளை விளங்காதோர் இருக்க முடியாது

ஆனால், இதை விளங்கிக் கொள்ள முடியாத தமிழ் காங்கிரஸ் பிரமுகரான திரு எஸ். ஆர். கனகநாயகம் கண்ணியத்தை மறந்து, கடமையைக் கைவிட்டு பெண்குலம் தாய்க்குலமென்பதறியாது, பழிக்கஞ்சாது பழி சுமத்தியுள்ளார்

'அறப்போரை', 'அறப்போம்' என்று தீவுப் பகுதிப் பெண்கள் கூறியதாக கயமைத்தனமாகக்கடிந்துரைத்துள்ளார். இ[illegible] தந்திரமும், [illegible] வாய்ந்தவர்களாகத் தங்[illegible]களை கூறிக் கொள்ளும் கூட்டத்தைச் சார்ந்தவரின் கூற்று. 'தனிப் பெரும் தலைவர்' தாசரின் தன்நிகரில்லாக் கண்டு பிடிப்பாகும்.

இத்தகையவர்களுக்கு யார் அறிவிலிகள் என்பனத எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாய்க்குலம் தெள்ளிதிற் புலப்படுத்தும் என்பது வெள்ளிடைமலை.

செல்வி நா. உலகேசுவரி,
செல்வி பு இலட்சுமி,
திருமதி க. தியாகராசா,
திருமதி. க. கன்னியா,
புங்குடுதீவு-3

—

## எமது கடன்

எதிர் வரும் தேர்தலில் எப்படிப்பட்டவர்களை எங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதனை நிர்ணயிப்பதும் அன்னாரை ஊக்குவித்து இழந்த உரிமைகளைப் பெற முயல்வதும் [illegible] மக்களுக்குள் ஒற்று[illegible] செய்து நிற்பதுடன் எங்கள் பிரதிநிதிகளை யாபேரும் ஒரே முகமாகத் திரண்டு நின்று காரியங்களைச் சாதிக்காவிட்டால் நம் சமூகம் முன்னேற வேறு வழியேயில்லை.

தனிப்பட்டவர்களின் ஆற்றலிலும் செல்வாக்கிலும் பார்க்க உறுதியும், நேர்மையும் பழுத்த அனுபவமும், தியாக சிந்தையும் உள்ள தலைவர்களே தேவை. ஒரு அணியாகச் சேர்ந்து செயல்படக்கூடியவர்களை தெரிந்து அனுப்பினால் தான் நமது சந்ததியின் மானமாவது காப்பாற்றப்படலாம். கொள்கை பிசகாது நேர்மைப்பாதையில் மன உறுதியுடன் செல்வோமானால் ஒரு நாள் நாம் விடுதலை அடைவது திண்ணம்.

இதனை நாம் அனைவரும் சிந்தையிற் கொண்டு சமூகம் உய்ய ஆவன செய்யின் தமிழ்ப்பகுதியில் உள்ள மாதோரும் ஒரு குடையின் கீழ் ஒரே குரல் எழுப்புவர். சிறுபான்மை மக்களின் ஏகோபித்த குரலையும், கதந்

(10-ம் பக்கம் பார்க்க)

## ஏனோ இந்தப் போலிப்போர்வை

(1) தமிழ்க்காங்கிரசை ஒரு அரசியற் கட்சியாகத் தேர்தல் அதிகாரிகள் ஏன் கணித்தனர் என்பது விளங்காத புதிராகவுள்ளது ஒரு அரசியற் கட்சிக்குள்ள ஏதாவது யோக்கிய தாபசங்கள் இக் கட்சிக்கு உண்டா என்பதைத் தேர்தல் அலுவலகம் வெளியிடுமா?

(2) ஏதோபதவிக்காக குட்டிக்கரணமடிக்கும் சில 'தலைவர்'களின் போர்வையை ஏன் சில நல்லவர்களும் தூக்கிப்போர்த்து தங்கள் பெயரைப் பழுதாக்கிக் கொள்ள வேண்டும்?

அ. ஜோசப்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1965 சனவரி மாதம் 17-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## யாருடன் பலப்பரீட்சை?

தமிழ்ப்பகுதிகள் சூறாவளியின் கோரத் தாக்குதலுக்கு இரையானதால் ஏற்பட்ட துக்கமும் துயரமும் ஒரு புறம்—பொங்கல் விழாவின் மகிழ்ச்சி மறுபுறம். இத்தகைய சூழ்நிலையிலேயே இவ்வாரம் தேர்தற் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

தமிழரசு இயக்கத்தைப் பொறுத்தவரையில் உரிமைப் போராட்டத்தின் ஓர் அம்சமே பொதுத்தேர்தல். காரணம், பாராளுமன்றமும் தமிழரசுப் பிரதிநிதிகளுக்கு ஒரு போர்க்களமாக இருப்பதே. பாராளுமன்றத்தில் அவர்கள் ஒருகுழுவாக—ஒரு படையாகத் திரண்டு நின்று உரிமைகளுக்காகச் சொற்போர் நடத்தினர்—நடத்துவர்.

பாராளுமன்ற உறுப்பினர்களாயிருந்த தமிழரசுப் பிரதிநிதிகள் அனைவரும் திறமைசாலிகளே. அவர்கள் திறமையில் யாருக்கும் சளைத்தவர்களல்ல. மதிநுட்பத்திலும் யாருக்கும் பின்வாங்கியவர்களல்ல. திறனற்ற கோழைகளாக அவர்கள் என்றுமே நடந்துகொண்டதில்லை. தங்களின் திறமையும் மதிநுட்பத்தையும் பதவிக்காக அடகுவைத்ததுமில்லை.

பாராளுமன்றத்திலாயினுஞ்சரி, வெளியிலாயினுஞ்சரி தமிழ்பேசும் மக்களின் உரிமைப் பிரச்சினையில் தமிழரசுப் பிரதிநிதிகள் சிங்கள வகுப்புவாதிகளுக்குக் கடுகளவுதானும் விட்டுக்கொடுக்கவில்லை. அமைச்சரவையில் இடம் பிடிப்பதற்காக தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளை ஆட்சியாளர்களுக்குத் தானம் செய்யவுமில்லை.

மந்திரிப்பதவியைப் பாதுகாப்பதற்காகத் தமிழ் மக்கள் ஒரு சாராரின் குடியுரிமையைப் பறிப்பதற்கு ஒரு தமிழ் 'தலைவர்' கையை உயத்தினரே, அம்மாதிரியான துரோகங்களைச் செய்யும் திறனும், மதியும் தமிழரசுப் பிரதிநிதிகளிடம் இல்லை என்பது என்னவோ உண்மைதான்!

தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் பாராளுமன்றத்துள் எழுந்தபோதெல்லாம் அவர்கள் கடுமையானபோராட்டங்களை நடத்தியுள்ளனர். பாராளுமன்றத்தில் வழ வழா என்று மணிக்கணக்கில் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி அரட்டை அடிக்காவிட்டாலும் சாங்கோபாங்கமாகவும், தெட்டத் தெளிவாகவும் விஷயங்களை விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். பதவிக்காகவோ தனிப்பட்டவகையில் அரசாங்கத்திடம் சலுகைகளைப் பெறுவதற்காகவோ அவர்கள் எதையும் விட்டுக் கொடுக்கவுமில்லை. அடிபணியவுமில்லை. அவர்கள் என்றுமே அரசியற் சோரம் போனவர்களல்ல. ஏன்?

காரணம், அவர்களிடம் திறமையிருந்தது, நுண்ணறிவு இருந்தது, திறமையையும்அறிவையும் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தும் ஆற்றல் இருந்தது. துணிவு இருந்தது. தியாக உணர்ச்சி இருந்தது. நேர்மை இருந்தது. கட்டுப்பாடு இருந்தது. கண்ணியம் இருந்தது. ஆழ்ந்த அரசியல் அனுபவம் இருந்தது. மொழிப் பற்றும், இனப்பற்றும் தேசப்பற்றும் இருந்தது.

இத்தகைய சிறப்பான குணதிசயங்களைக் கொண்டிருந்ததால்தான் அவர்கள் இறுதிவரை விடாப்பிடியாகபாராளுமன்றத்தில் உரிமைகளுக்காகப் போராடிவந்தார்கள். அவர்களின் உரிமைப்போராட்டம் பாராளுமன்றத்துடன் நின்றுவிடவில்லை. வெளியே மக்களுடனும் தோளோடு தோள் நின்று உலகப் புகழ்பெற்ற மகத்தான உரிமைப் போராட்டங்களையும் நடத்தினார்கள்.

இத்தகைய போராட்டங்களை நடத்தாமல் அவர்களும் தனிப்பெரும் தலைவர் செய்ததைப்போல மந்திரிபதவிகளை ஏற்று சிங்கள அரசியலாரிடம் சரண்புகுந்திருந்தால், ஆட்சியாளர் தம் இனக்கொலையை இலகுவாகஎன்றோ நிறைவேற்றியிருப்பார்கள். தமிழ் மண் முழுவதும் சூறையாடப்பட்டிருக்கும். தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களை வெளியேற்றும் படலம் இதுவரை பூரணமாக நிறைவேறியிருக்கும்.

தமிழ்பேசும் மக்கள் ஓர் இனமாக இன்றும் தலைதூக்கி நின்று உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறதென்றால் அதற்கான காரணம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் தமிழரசார் நடத்திய போராட்டங்களே! இத்தகைய தலைவர்களை ஏதோ 'சோணட'களாகவும், தகுதியற்றவர்களாகவும் கற்பனைசெய்துகொண்டு, தன்னிடம் மட்டுமே திறமையும், மதிநுட்பமும் இருப்பதாக எந்த நபராவது பிதற்றிக்கொண்டு திரிந்தால் அவருக்குப் புத்திபேதலித்துவிட்டதென்றே மக்கள் கருதுவர்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காகச் சுண்டுவிரலைக் கூட உயர்த்தாதவர்கள்—உயர்த்த முடியாதவர்கள் தேர்தல் வந்ததும் திடீரென மேடையில்தோன்றி, 'திறமை, மதிநுட்பம்' என்றெல்லாம் பேசுவது மக்களின் திறமையையும் மதிநுட்பத்தையும் கிண்டல் செய்வதேயன்றி வேறன்று.

இந்த அரசியற் சந்தர்ப்பவாதிகள் தமிழரசுக்கட்சியுடன் பலப்பரீட்சை நடத்துவதற்காக வந்திருக்கிறார்களாம். ஏற்கனவே பரீட்சை நடத்தி, தோல்வி கண்டு புறமுதுகிட்டு ஓடினவர்கள்தானே அவர்கள்? மீண்டும் அவர்களுக்குப் பரீட்சை நடத்தும் நப்பாசை ஏன்?

தேர்தலிற் போட்டியிடுவதற்காக அரங்கத்தில் தோன்றியுள்ள திரு பொன்னம்பலம் 'சமஷ்டி அரசு தமிழினத்துக்குத் தீங்கு விளைவிக்குமாதலின் அதைத் தான் எதிர்ப்பதாகக் கூறினாராம். இக்கூற்றுக்குச் சுடச்சுடப் பதிலடி கொடுத்த தமிழரசுத் தந்தை 'சமஷ்டி அரசியல் அமைப்பு முறை மட்டுமே நமக்கு விமோசனமளிக்கக் கூடியதாகும். அது இல்லாதவரை அடிமைகள் போன்றநிலையிற்தான் நாம் வாழ நேரிடும்' என்று கூறியுள்ளார்.

# எத்தர்களிடம் ஏமாறிவிட இனி நாம் தயாரில்லை

தமிழ் பேசும் இனம் தன்னுடைய துன்பங்களைத் துடைத்தெறிய வேறு எவரையும் நம்பியதில்லை. இனிமேலும் நம்பப் போவதில்லை. தன் கையே தனக்குதவி என்ற தலையான கோட்பாட்டுக்கு ஏற்ப தனக்கான ஓர் அமைப்பைக் கண்டு அறப்போர் தொடுத்து அயராது உழைத்து வருகிறது.

பெரும்பான்மையினத்தவர்களான சிங்கள மக்களின் அபிலாசைகளுக்காகஅமைக்கப்பட்ட எந்த ஒரு 'அகில இலங்கை' அரசியற் கட்சியும் தமிழ்பேசும் சிறுபான்மையினருக்காக ஒரு சிறு அனுதாபமேனும் காட்டப் போவதில்லை என்பது பல முறை நிரூபணமாகி விட்டது.

தேர்தற்களம் நோக்கி அரசியற் கட்சிகளனைத்தும் தாவிக் குதித்தோடும் இவ்வேளையில் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைக் கோருவோரின் தாரதம்மியங்களைஅலசிப்பார்க்க வேண்டியது தமிழ்பேசும்மக்களின் கடமையாகின்றது.

### ஐ. தே. கட்சித் தமிழர்

ஆரம்பத்தில் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி தமிழ்பேசும் இனத்தைக் கருவறுக்கும் திட்டங்களைத் தயாரித்தது. பாம்புக்கும் நோகாமல் பாம்படித்த கம்புக்கும் நோகாமல் தனது திட்டங்களை, வாழைப்பழத்தில் ஊசிஏற்றுவதுபோன்று, நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

அன்று தமிழ்பேசும் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து அனுப்பப்பட்டவர்கள், தங்கள் இனத்தைக் குழிதோண்டிப்புதைக்கும் நோக்குடன் ஐ தே. கட்சியால் தீட்டப்பட்ட சகல திட்டங்களையும் தெரிந்தும் தெரியாததுபோல், கண்மூடி வாய் புதைத்து இருந்துவிட்டார்கள். இனத்துரோகமான இச் செயல்களுக்கு அவர்கள் உடந்தையாக இருந்துவிட்டமைக்குக் காரணம் பதவிப்பித்தே அன்றி வேறு எதுவும் கிடையாது என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே.

கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை நடாத்தத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டபோது அமைச்சரவையில் வீற்றிருந்த தமிழர்கள்வாய்மூடி இருந்தார்கள்.

மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை குடியுரிமைகள் பிடுங்கப்பட்டபொழுது ஒரு வார்த்தைதானும் அதற்கு மாறு கக்கூறுசவர்களும் அமைச்சரவையிலிருந்தனர். தங்கள் சொந்தச் சகோதரர்களின் கண்களைப் பிடுங்குவதற்கு ஒப்பான கைங்கரியத்துக்கு உடந்தையாகவும் அமைச்சரவையில் அன்று தமிழர் பிரதிநிதிகள் இருக்கவே செய்தனர்.

### பாடம் புகட்டினர்

சிங்கக் கொடியினை இந்நாட்டின் தேசியக் கொடியாக்கிய போதும் அமைச்சர்களாக விருந்து அக் கொடிக்கு வணக்கமிட்டவர்களும் இருந்தனர்.

அரசி எலிசபத் இங்குவந்தபோது 'தவறுதலாகவும் தற்செயலாகவும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டபோதும் தமிழ்த் தலைவர்கள் மந்திரி மகுடத்துடன் இருக்கவேசெய்தனர்.

நீதி அமைச்சில் சிங்களம் வெறியாட்டம்ஆடத் தலைப்பட்டபோதுசிறிதும் வாய் பேசாது பதவியில் ஒட்டிக்கொண்டேயிருந்தனர் சிலர்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

1956ம் ஆண்டு களனி மாநாட்டிலே சிங்களம்மட்டும் சட்டம் இயற்றப்படவேண்டும் என்று யு. என். பி. தீர்மானம் நிறைவேற்றும் வரையில் பதவியில் ஒட்டிக்கொண்டேயிருந்தனர் அன்றையத் 'தலைவர்கள்.'

தலைவர்கள் என்று கூறி தம்மினத்தை மாற்றானின் காலடியில் வீழ்த்தி பதவிகளைப் பரிசாகப் பெற்று சொகுசாக வாழ்ந்தவர்களுக்கு தமிழ்பேசும் மக்கள் தகுதியான பாடம் புகட்டினர். மக்கள் மத்தியிலிருந்து ஒதுக்கப்பட்டு இருட்டு மூலைகள் தேடி இதுவரை ஒழித்திருந்தார்கள்.

தேர்தல் என்ற காற்று வீச ஆரம்பித்ததுமே புற்றீசல்களைப் போன்று இன்று தமிழ்பேசும் மக்கள் மத்தியில் தங்கள் வீரப்பிரதாபங்களை விபரிக்க முன்வந்துவிட்டனர்.

அறிவுத் திறனும் மதிநுட்பமும் உள்ளவர்கள் நாங்களே என்று தம்பட்டம் கட்டிக் கொண்டு, மக்கள் கண்களில் மண்ணைத் தூவப்புறப்பட்டுள்ளனர்.

சனநாயகத்தைக் காக்க எங்களுக்கே வாக்களியுங்கள் என்று குரல் கொடுத்து தேர்தலிலிறங்கியிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. அதே குரல் வடக்கிலும் கேட்கிறது. வடக்கில் ஐக்கிய தேசியக் கட்சி நேரடியாகப் போட்டியிடவில்லை. தமிழ் காங்கிரஸ் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் குரலுக்குத் தாளம் போடும் வகையில் குரல் கொடுக்கிறது.

'சனநாயகத்தைக் காக்கும் கட்சிகளுடன் ஒத்துழைக்க வேண்டும்' என்று திரு. பொன்னம்பலம் பட்டவர்த்தனமாகக்கூறி வருவதிலிருந்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஏதோ ஒரு வகை உடன் பாட்டுடன் தான் தேர்தற்களம் புகுந்துள்ளாரோ என்று மக்கள் எண்ணுவதற்கு இடமேற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியல்லாத வேறு எந்த அரசியற் கட்சி பதவிக்கு வந்தாலும் திரு. பொன்னம்பலம் போன்றோர் அமைச்சர் பதவிபெற முடியாது. ஆகவே அவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வக்காலத்து வாங்கினால் ஆச்சரியமில்லை.

### பிரிந்தவர் கூடினர்

யூ. என். பியின் துரோகச் செயல்களனைத்தையும் தெரிந்து அன்று அக்கட்சிக்குக் கொடுத்து வந்த ஒத்துழைப்பை நிறுத்தவதாகக் கூறி யு. என். பி. எதிர்ப்புக் கோஷங்களைக் கிளப்பியவர்கள், மீண்டும் மறைமுகமாக அதே யு. என். பிக்கட்சியை ஆதரிப்பதை, பேசத்தலைப்பட்டுள்ள மர்மத்தைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவார்கள்.

# முற்போக்காளரின் முடக்கு வாதங்கள்

### மீண்டும் ஒற்றுமைக்கிதமா?

தமிழ்பேசும் இனம் இன்று அனுபவிக்கும் அத்தனை இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும் மூலகாரணமாக விருந்த ஐக்கிய தேசியக் கடசியுடன் அன்று ஒத்துப்பாடி ஒத்தாசை புரிந்து கொண்டிருந்தவர்கள் இன்று மாற்றுவேடத்துடன் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தோற்றியுள்ளனர்.

1956ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்குகைக்குள்ளிருந்து வெளியேறிய திரு. பொன்னம்பலமும் சகாக்களும் மீண்டும் அதே குகைக்குள் புக ஆயத்தங்கள் செய்கிறார்களா? அப்படிச் செய்தாலும், அது மக்களுக்கு பேரதிர்ச்சியைத் தராது. ஏனெனில் திரு. பொன்னம்பலத்தைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு எடைபோட்டு வைத்துள்ளனரே!

திரு. பொன்னம்பலத்துக்கு உடந்தையாக பழைய யூ. என். பி. தாசர்களான திரு. வி குமாரசாமி, திரு. வி. நல்லையா போன்றோரும் தேர்தல் முகாமில் குதித்துள்ளனர். இவர்களுக்கு ஏற்ற மதிப்பை அளிக்கும் பணியைத் தமிழ் பேசும் மக்களுக்கே விட்டுவிடுவோம்.

திரு. பொன்னம்பலம் ஆதரிப்பதாகக் கூறப்படும் ஒற்றையாட்சியில் தமிழ்பேசும் மக்களுக்குக் கிடைத்த நன்மைகள் என்னென்ன என்பதை அவர் பகிரங்கமாகக் கூறத் தயாரா?

தமிழ்பேசும் மக்கள் ஜீவாதாரமான உரிமைகளைஇழந்து அரசியல் அனாதைகளாக்கப்பட்டதற்கு அடிப்படைக்காரணம் ஒற்றையாட்சி முறையே. அவர்கள் தனி இனமாக இந்நாட்டில் சிங்களவர்களுடன் சரிநிகர் சமானமாக தலை நிமிர்ந்து வாழவேண்டுமானால் பிரதேச உரிமை பெற்றேயாகவேண்டும். சொந்தப் பிரதேசத்தில் ஆட்சி அதிகாரம் அவர்கள் கைக்குவர வேண்டும். இதற்கு வழிகாட்டக்கூடிய ஒரே ஸ்தாபனம் தமிழரசுக் கட்சியே. தமிழ்பேசும் மக்கள் இக்கட்சியின் கீழ் இன்று ஒற்றுமையாக ஒரே அணியில் திரண்டு நிற்பதற்குக் காரணம் இதுவே. இந்த உண்மையை அறியாது பலப்பரீட்சை நடத்தவந்தவர்களுக்கு இன்னும் [illegible] அந்த படிப்பினையைக் கற்றுக் கொடுக்க நமது மக்கள் தயாராயிருக்கின்றனர்.

### தோல்வியின் ஒலம்

தெற்கிலே நடைபெறும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி - சமசமாசக்கட்சி—கொம்யூனிஸ்டுக் கட்சி தேர்தற் பிரசாரக் கூட்டங்களில் யூ. என். பிக்கும் தமிழரசுக் கட்சிக்கு மிடையே ஒப்பந்தங்கள் இருப்பதாக பிதற்றல்கள் எழுகின்றன. எந்த அரசியற் கட்சியுடனும் தமிழரசுக்கட்சி எதுவிதமான

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் காங்கிரசை எதிர்த்துப் பிரசாரம்

## தீவுப் பகுதி மக்கள் கொடுக்கும் பதிலடி

வடக்—கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் சகல தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கும் எதிராகப் பரந்த அளவில் பிரச்சாரம் ஒன்றை மேற் கொள்ள தீவுபபகுதி வாலிபர்களும் வர்த்தகர்களும் முனைவந்துள்ளனர் என்று செய்தி கிடைத்துள்ளது. தீவுப்பகுதி மக்கள் என்ற அடிப்படையில் ஒன்று பட்டு இப்பிரச்சாரத்தை நடாத்த வேண்டும் என்று வெளியிலுள்ள தீவுப் பகுதியைச் சேர்ந்த பலருக்கு கடிதங்கள் எழுதப்பட்டுள்ளன என்று இவ் வியகத்தைச் சேர்ந்த ஒருவர் நமது நிருபரிடம் கூறினர்.

சென்ற 28-12-64 அன்று யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடை பெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்திய முன்னுள்மூதவை உறுப்பினரும் பிரபல வழக்குரைஞருமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் தீவுப் பகுதி மக்கள் அரசில் அறிவற்றவர்கள் என்றும், கல்வியறிவற்றவர்கள் என்றும் கருத்துப்படப் பேசியுள்ளாராம்.

திரு. கனகநாயகம் அக் கூட்டத்தில் பேசுகையில் 61ம் ஆண்டு நடைபெற்ற அறப்போராட்டத்தில் தீவுப் பகுதி மக்கள் மட்டுமே பங்கு பற்றியதாகவும், இப்போராட்டத்தில் ஊர்வலமாகச் சென்ற தீவுப்பகுதிப் பெண்கள் அறப்போர் என்ற சொல்லை அறப்போய் என்று கூறியதாகவும் பேசியுள்ளாராம்.

திரு. கனகநாயகத்தின் பேச்சு தீவுப்பகுதி மக்களைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது. குறிப்பாக தீவுப்பகுதிப் பெண்கள் திரு. கனகநாயகத்திற்கும் அவர்சார்ந்துள்ள கட்சியினருக்கும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என்று ஒருமனதாக முடிவு செய்துள்ளார்களாம்.

•

யாழ்ப்பாண நகரிலுள்ள பெரும் பாலான வியாபார நிலையங்கள் தீவுப்பகுதியினருக்கே சொந்தமாகும். பெரும் பாலான வியாபார நிலையங்களில் கடமையாற்றுபவர்களும் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிந்ததே. இவர்கள் அனைவரும் தமிழ் காங்கிரசிற்கு எதிரான தீவிர பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார்கள் என்று தெரிகிறது. இவர்களிற் சிலர் சென்ற வாரம் தங்களுக்குள் ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளார்களாம். 'தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கம்' என்ற பெயரில்,

இந்த 'தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பியக்கத்தினரே இப்பொழுது நாடுபூராவும் உள்ள தீவுபபகுதி மக்களுடன் தொடர்பு கொண்டு வருவதாக நமது யாழ்ப்பாண நிருபர் எழுதியுள்ளார்.

கொழும்பு-புறக்கோட்டைப் பகுதியிலும் இவர்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்கள் பெருமளவில் உள்ளன. யாழ்ப்பாண வர்த்தகர்களைப் போன்று இவர்களும் ஒரு தமிழ் காங்கிரஸ் எதிர்பியக்கம் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று திரு. வீரசிங்கம் என்னும் தீவுப்பகுதி இளைஞர் நமது நிருபரிடம் கூறினா

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பியகத்தைச் சேர்ந்தவர்கள் 'திரு கனகநாயகமும் தீவுப் பகுதிபொதுமக்களும்' என்ற தலைப்பில் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளதாகவும் நமது யாழ்ப்பாண நிருபர் அறிவித்துள்ளார்.

'யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருள் வளத்துக்கு காரணமாக உள்ள மக்களை, 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற தமிழ் மரபுக்கு ஏற்ப வாழ்ந்து வரும் மக்களை ஆங்கில மரபிற்கேறப வாழ்ந்தவரும் தமிழ் காங்கிரஸ் பிரமுகரான திரு. கனகநாயகம் கிண்டலும் கேலியுமா செய்கிறார்' என்று கொழும்பில் உள்ள தீவுப் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் ஆத்திரத்துடன் கூறினர்.

[கடந்த இருவாரங்களாக இப்பிரச்சினைபற்றி நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்துகுவிந்துள்ளன. அவற்றில் இரண்டைப் பிரசுரித்துள்ளோம்]

## தமிழ் பகுதிகளுக்கு பிரசாரக் குழு

### கொழும்பிலிருந்து செல்கிறது

தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதற்கென்று கொழும்பிலிருந்து மாணவர்களையும் எழுதுவினைஞர்களையும் கொண்ட குழு ஒன்று சென்ற 9-ம் திகதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்றுள்ளது. இக்குழுவினர் யாழ்ப்பாணம், கிளி நாச்சி, உடுப்பிட்டி ஆகிய தொகுதிகளிலேயே தங்களின் பெரும்பான்மையான நேரத்தைச் செலவிட்டு வருவதாகத் தெரிகிறது.

இக் குழுவினர் இத்திங்கள் 20ம் திகதி கொழும்பு திரும்புவார்கள் என்று தெரிகிறது. பெப்புரவரித் திங்கள் 14ம் நாள் மீண்டும் இக்குழுவினர் வடக்கு நோக்கிச் செல்வார்கள் என்று தெரிகிறது.

வங்கி ஊழியர்களைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணத் தொகுதியில் தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு சி சே. மாட்டினுக்கு ஆதரவாகப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்காக இத் திங்கள் 30ம் திகதி கொழும்பிலிருந்து புறப்படவிருக்கிறது இக் குழுவினர் ஒருவார காலம் யாழ்ப்பாணத்தொகுதியில் நிற்பார்கள் என்று தெரிகிறது

தமிழரசுக்கட்சிக் கொழும்புக் கிளையைச் சேர்ந்த வாலிபர்கள் குழு ஒன்று அடுத்த வாரம் பட்டிருப்புத் தொகுதிக்குச் செல்லலாம். வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாகப்பிரசாரம் மேற்கொள்வதற்காக கொழும்பிலிருந்து எழுதுவினைஞர்கள் குழு பெப்புரவரி திங்கள் நடுப்பகுதியில் செல்லலாம் என்று அறியப்படுகிறது.

மன்னாருக்குச் செல்லும் பிரச்சாரக்குழுவில் முஸ்லிம் இளைஞர்கள் பெருமளவில் இடம் பெறுவார்கள் என்று தெரிகிறது. தமிழ்காங்கிரஸ் எதிர்ப்பியக்கத்தைச் சேர்ந்த கொழும்புவாழ் ஊர்காவற்றுறைத்தொகுதி இளைஞர்கள் திரு. கா பொ. இரத்தினம் அவர்களுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வதற்கு கிளிநொச்சித் தொகுதிக்கு அடுத்தவாரம் செல்லலாம் என்று தெரிகிறது.

## எத்தர்களிடம் ஏமாறிவிட...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தமும் செய்யவில்லை என்பதை தலைவர் தந்தை அவர்கள் கூறியிருந்தும் இக் கூச்சல் ஓயவில்லை.

ஆட்சி எங்கள் கைகளில்லை என்ற ஆணவம் பேரிட்டமையினால் அதிகார வெறிபிடித்து ஆடிய ஆட்சி பீடத்தை, யூ. என். பிக்கட்சி போன்ற எதிர்க் கட்சிகளுடன் தமிழரசுக் கட்சியும் இணைந்து முறியடித்து விட்டதே, என்ற ஒரே எரிவினால் இன்று இவ்விருகட்சிகளும் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளன என்று இந்த இடதுசாரிக் கூட்டணி வீரர்கள கூவத்தலைப்பட்டு விட்டனர்

ஆணவ ஆட்சியைக் கவிழ்க்க அருந்துணையாக நின்றதே தமிழரசுக் கட்சி என்பதனை கிஞ்சிற்றும் சிந்தித்துப் பார்க்காமலே தமிழரசுக் கட்சியை எதிர்த்து கிழக்குமாகாணத்திலே ஏழு இடங்களில் வேட்பாளர்களை ஐ. என. பி. போட்டிக்கு நிறுத்தியுள்ளது இந்த ஒரு சந்தர்ப்பமே முறபோக்காளர்களின் கண்களைத் திறக்கும் என்று நம்புகிறோம். தங்கள் பொய்ப் பிரசாரத்தை இத்துடன் நிறுத்திக்கொள்ளுவார்களாக.

### மிஞ்சியது பஞ்சப் பிணி

சமசமாசக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டரசாங்கத்தில் சேருவதற்கு சிறிது காலத்துக்கு முன்னரே தங்களுடைய சம அந்தஸ்துப் பேச்சை நிறுத்திக் கொண்டன. இந்தியத் தொழிலாளர்களின் இழி நிலையைப் போக்குவோம் என்று கூறியவர்கள், அவர்களை அனாதரவாக விரட்டியடிக்க முற்பட்டு விட்டனர். அவர்களும் அங்கே இலங்கையிலும் செல்வாக்குத் தேட, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப சதுரங்கமாடுபவர்கள். அவர்களிடம் புரட்சி, பசி, பட்டினி என்ற கூப்பாடுகளைத் தவிர வேறு எதையுமே எதிர்பார்க்க முடியாது.

'சுதந்திரக்கட்சிக்கு ஆட்சி நடத்தவும் தெரியுமா? என்று வானுயர வாய் வீச்சு வீசிய டாக்டர் என். எம். பெரேரா கூட்டரசில் சேர்ந்து இந் நாட்டுக்குத் திரட்டித் தந்த—திரண்ட "திரவியத்தின்" நிறையை இன்று உலகமே கண்டு திகைக்கிறது!

பசிப்பிணியைப் பறக்கடிப் போம் என்று பிதற்றியவர்களின் ஆட்சியிலே பஞ்சப் பிணிதான் மிஞ்சிக் கிடக்கிறது. தொழிலாளர்கள் நல வாழ்வுக்குத் துணைதேடுவோம் என்று கூறியவர்கள் கோல் தூக்கப்போய் தொழிலாள வர்க்கமே தேய்ந்து மடிவதைத்தான் காண முடிகிறது.

வாய் வீரர்களே அவர்கள் என்பதும் செயலிற் திறமையற்றவர்கள் என்பதும் புலப் பட்டுவிட்டது.

### மூவரும் ஒருவரே

சமசமாஜிகள் சந்தர்ப்பவாதிகள் என்பதும், கொம்யூனிஸ்டுகள் குலத்தைக் கெடுப்பவர்கள் என்பதும் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்தையே முறியடித்து அழித் தொழிக்கக் கூடியவர்கள் என்பதும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் அறிந்து விட்ட உண்மைகள்.

உறுதியான கொள்கை எனும் உரமிட்டு, உணர்ச்சி எனும் வேலி கட்டி, தியாகமெனும் நீரூற்றி, தமது உரிமைகளைக் காக்கும் கோட்டமாக, கொள்கைத் தோட்டமாக தமிழரசுக் கட்சியை தமிழ் பேசும் மக்கள் வளர்த்து வருகின்றனர். தமிழரசுக் கட்சியே தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்கு வழி வகுக்கும் என்பதனைத் தமிழ் பேசும் மக்கள் எப்போதோ உணர்ந்து கொண்டனர். ஆன காரணத்தினால் பொய்யுரையும், புனை கதைகளும், வகுப்புவாதக் கூச்சலும், வம்புதும்புகளும், வெறட்டுக் கூச்சல்களும் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த முடிவை எதுவுமே செய்ய முடியாது என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுகின்றோம்.

## தென்னிலங்கைத் தமிழர்கள் யாருக்கு வாக்களிப்பது?

### கட்சி விரைவில் முடிவு செய்யும்

வட-கிழக்கு மாகாணத்திற்கு வெளியில் உள்ள தமிழ் பேசும் மக்கள் எதிர்வரும் தேர்தலில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை அடுத்து நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரியசபைக் கூட்டம் முடிவு செய்யும். நடந்து முடிந்த தமிழரசுக் கட்சியின் காரியசபைக் கூட்டத்தில் இப்பிரச்சினைபற்றி ஓரளவு ஆராயப் பட்டதென்றும், அடுத்த காரியசபைக் கூட்டத்தில் இப்பிரச்சினை பற்றி விரிவான அறிக்கை வெளியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

மலைநாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களும், கொழும்பு மற்றும் இதரபகுதிகளிலும் உள்ள தமிழ் பேசும் மக்களும் அடுத்த பொதுத் தேர்தலில் தாங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடத்திற்கு கடிதம் எழுதிய வண்ணம் இருக்கிறார்களாம்.

வட-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதியிலுள்ள தமிழ் பேசும் மக்கள் பெருந்தொகையாக உள்ள தொகுதிகளின் முடிவை நிர்ணயிக்கும் சக்தி படைத்தவர்களாக உள்ளார்கள். எனவே கட்சி இப்பிரச்சினை பற்றி திர்க்கமான ஒரு முடிவை வெளியிட முன்னர் தனிப்பட்ட முறையில் எந்த வேட்பாளருக்கும் தங்களின் வாக்குறுதியைக் கொடுக்கக் கூடாது என்று தமிழரசுக் கட்சி தலைமை நிலையத்தைசேர்ந்த ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

தனிப்பட்ட முறையில் செயற்பட தொடங்கினால் தமிழ் வாக்காளரின் சக்தி சிதறடிக்கப்பட்டு விடுமென்றும் எனவேகட்சியின் முடிவு [illegible] திருத்தும் வண்ணமும் அப் பிரமுகர் கூறியுள்ளார்.

## திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு

இவ்வாண்டு சனவரி 26ம் நாள் முதல் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டில் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்த முடிவு செய்துள்ளது.

இத் திங்கள் 26ம் திகதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் சகல எதிர்க்கட்சியினரும் கலந்து கொள்வார்கள் என்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

சனவரி 26ம் திகதி முதல் இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்க்க திருச்சியில் 17ம் திகதியன்று தமிழ் நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர்களின் மாநாடு ஒன்று நடைபெறும். இம்மாநாட்டில் திருவாளர்கள் சி. ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் பி. டி. ராசன், இரா. நெடுஞ்செழியன், முகம்மது இஸ்மாயில் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவ்வாரச் சிறுகதை

# பொங்கியது யார்?

"விடிந்ததும் பொங்கல் முடிந்தால் வரவும்" தந்தியைக் கண்டவுடன்தான் மறுநாள் பொங்கல் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. தந்தியை மடித்துக் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டான். 'நடந்தது; முடிந்தது.' இனிக்கவலைப்பட்டு என்ன பொருள்? நடக்க வேண்டியதைக் கவனிப்போம். நான் கவலைப்படலாம் இதில் மனைவியையும் பிள்ளைகளையும் ஏன் இந்த வேளை கலந்துகொள்ளச் செய்யவேண்டும் நாளையதிருநாளை எண்ணி இன்பத்தில் மிதந்து கொண்டிருப்பவர்களுடன், நானும் ஒருவனாக இருப்போம். இடிலை நடிப்போம்! என்று அவன் மனம் எண்ணியது. நேராக 'பஸ்'சை நோக்கிப்புறப்பட்டான்.

சப்பதீவுகள் ஒன்றில் பிறந்து வளர்ந்த உழைப்பாளிதான் நல்ல தம்பி. சொந்த ஊரிலேயே இலட்சுமியைத் தனது இல்லத்தரசியாக்கி வாழ்ந்து வந்தான். தனக்கு என்று ஓர் வீடும், தனக்கென்ஞோர் நிலமும் உடைய சுதந்திரி அவன். சோம்பிக்கிடக்கும் பேர்வழி அல்ல, அவன் சுறுசுறுப்பானவன். 'நல்லபிரயாசி' என ஊரார் புகழ்ச்சிக்கு உரியவன்.

வவுனியாவில் அரசாங்கத்தால் நடத்தப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் காணி வழங்கியபோது அதையும் அவன் விடவில்லை. அங்கும் காணி வாங்கி வீடுகட்டி, வயலும் செய்து வந்தான்

'ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்றால் முதலில் அவ்வினம் இருக்கும் இடத்தைப் பறிக்க வேண்டும்.' அடுத்து அவ்வினத்தவர்கள் பேசும் மொழியைப் பறிக்க வேண்டும். இது அரசியல் சாணக்கியம், பாவம், இது அவனுக்கு எப்படித்தெரியப் போகிறது. குதுவாதில்லாமல் அங்குவந்து குடியேறிய மற்ற சிங்கள மக்களுடன் பழகி வாழ்ந்து வந்தான்.

தன் உடலை வருத்தி காட்டை வெட்டிக் களனியாக்கி உழைந்துவந்தான். சொந்தக்காரர் ஒருவரின் கலியாணத்திற்காக ஊருக்கு வந்தவன் அங்கு மாதகாலமாகத் தங்கிவிட்டான். அந்தக் காலக்கெடுவில் தான் அது நடந்தது.

நண்பன் ஒருவனின் அறிவித்தலைத் தொடர்ந்து, கமத்திற்குப் போனான். அங்கு அவன் கண்டகாட்சி அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. அவன் கட்டி உரிமை கொண்டாடிய வீடு அவனுக்கு இல்லை. அவன் பண்படுத்தி வளமாக்கிய நிலம் இன்னொருவர் உடமையாகியது ஆம், நடந்தது இதுதான்.

அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்கள், இவன் இல்லாத வேளை வீட்டை தங்கள் உடமையாக்கினர். காணியின் பயனை அவர்கள் எடுத்துக் கொண்டனர். நல்லதம்பிக்கு ஒன்றுமே புரியவில்லை அவன வயிறு பற்றி எரிந்தது பல காடையர்கள் முன் கேவலம் தனிமையில் எப்படி மோதிக் கொள்ள முடியும். 'ஏன் இப்படிச் செய்தீர்கள்' என்று கேட்கத்திராணி அற்றநிலை.

தன்மையாகப் பணிந்து தன் உரிமையைக் கோரினன். அதற்கு அவர்களிடமிருந்து கிடைத்ததுகிண்டலும் கேலியும் கலந்த வார்த்தைகள். அவனைமேலும் துன்பத்தில் ஆழ்த்தியது. 'அப்பே ஆண்டுவ' பேசும இருக்குமாரர்களல்லவா அவர்கள் நீதி கோரிப் பொலிசாரிடம் சென்றாலும் வெற்றி பெற முடியாது என்பது ஏற்கனவே தெரிந்து போனவிடயம். முன்பு, இன்னொருவருக்கும் இப்படி நடந்தது. பொலிசாரிடம் முறையிட்டபோதும், அரசாங்க அதிபரிடம் விண்ணப்பித்தபோதும் ஏதோ, ஏதோ காரணங்களைச் சுட்டிக் காட்டி, 'அவர்கள் செய்தது சரிதான்' என்ற தீர்ப்பே அளிக்கப்பட்டது இதற்கு மேல் செல்ல விரும்பாத அவன் அப்படியே கைவிட்டு விட்டான். அன்றைய நிலையில் நல்லதம்பியும் அதே மாதிரித்தான் செய்தான்.

இனி ஊர்திரும்புவதுதான் புத்திசாலித்தனம் தாமதித்தால் ஆள் தப்புவதே அருமை. இந்த முடிவு எடுத்த வேளைதான, 'விடிந்ததும் பொங்கல் முடிந்தால் வரவும்' என்ற தந்தியும் வந்தது

'எப்படியும் பொங்கலுக்கு வருவார். ஏதோ அலுவலாக தாமதிக்கிறார்' என ஞாபகப் படுத்தித்தான் மனைவி அந்தந்தியை அனுப்பியிருந்தாள்.

பஸ் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கிய நல்லதம்பி நேராகப பெரிய கடைக்குச் சென்றான். பொங்கலுக்கு வேண்டிய சகல சாமான்களையும் வாங்கிக் கொண்டு வீடு நோக்கி அடுத்த 'பஸ்'சில் ஏறினன்.

நல்லதம்பியைக் கண்டதும் மனைவிக்கு ஆனந்தம் மக்களுக்கு மகிழ்ச்சி. பொங்கற் சாமான்களைக் கண்டால் மனைவி சும்மாவா இருப்பாள்? தனக்குப் பிடித்தவை, ஏற்றவை கிடைக்கும்போது மனைவி அதன் பூரிப்பில், தன் கணவனை எப்படி வரவேற்பாளோ அதே ரீதியில் வரவேற்க இலட்சுமி தவறவில்லை. பட்டாசைக் கண்டால் பிள்ளைகள் சும்மாவா இருப்பார்கள். 'அப்பா, அப்பா' என அவன் மார் மேலும், தோள மேலும் துள்ளி விளையாடினார்கள். ஆனல் நல்லதம்பி மட்டும் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. அவர்களின் மகிழ்ச்சியில் பங்குகொண்ட மாதிரி நடித்துக்கொண்டான். நாளை நல்ல நாள் பெருநாள் அதற்கிடையில் ஏன் தன் மனவேதனையைக் காட்ட வேண்டும் எனச் சும்மா பேசாமல் இருந்து கொண்டான்.

விடிந்தது. அன்று பொங்கற் திருநாள். ஆதவனும் தன் ஒளிக்கரங்களை ஆர்ப்பரித்து மேல் நோக்கி எழுகின்றான் எல்லார் வீட்டிலும் பொங்கல், நல்ல தம்பி வீட்டிலும்தான். 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எல்லாரும் குதூகலிக்கின்றனர். செயற்படுகின்றனர் ஆனல், அவன் வாழ்வின் வழி இருண்டது போன்ற பிரமை.

முற்றம் பெருக்கி, மெழுக்கிட்டு, கோலம் செய்து, புது அடுப்பில், புதுப்பானை வைக்கப்பட்டிருக்கிறது. புத்தாடை அணிந்து, புது மெருகுடன் இலட்சுமி தோற்றமளிக்கிருள். சுறுசுறுப்பாக பொங்கல் வேலைகளைக் கவனிக்கிருள். பானைக்கு மஞ்சள், இஞ்சி இலை கட்டி, பொட்டிட்டு அழகுபடுத்தப்பட்டிருக்கிறது. அடுப்பில் மூட்டிய தீ தன் நாக்கை வளைத்து நீட்டிபானையிலுள்ள பாலை வரைகட்டிச் செய்கிறது.

நிமிடங்கள் செல்லச் செல்ல வரை வளர்ந்து பெருகுகிறது. ஆ! அதோ! பொங்குகிறது. பால் பொங்குகிறது. பிள்ளைகள் பட்டாசை கட்டுக்கட்டாகக் கொளுத்துகிறார்கள். மனைவி பால் அரிசியை எடுத்துக் கணவன்கையில் கொடுக்கிறாள். அவளுக்கு இனம் தெரியாத குதூகலம். பானையில் பால் பொங்கியது எல்லார் இதயத்திலும் இன்பம் பொங்கியது.

ஆனல், நல்லதம்பியின் இதயத்தில் பொங்கியது என்ன? உரிமையை, உடமையை இழந்து ஊமையாக இருக்கின்றேனே என்ற மனக் குமுறல்தான்.

—மணியர்—

# உரிமை எனும் பானையிலே உயர் கொள்கை அரிசியிட்டு

## பொங்கலிட வாரீர்! வாரீர்!

உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லையென்றால் உலை பொங்கித் தான் என்ன பயன்! உரிமைகளற்று கைதிகளைப் போல் உள்ள ஒருவனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி தோன்ற முடியவே முடியாது.

இதே போன்றுதான் இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும இனம் சகல உரிமைகளையும் பறிகொடுத்து விட்டு பரதவித்துக்கொண்டிருக்கிறது.

கோடானுகோடி பொன் கொட்டி வைத்திருந்தாலும் அப்பொக்கிஷத்தை பூரண சுதந்திரத்துடன் அனுபவிக்க உரிமையில்லையென்றால் திரண்டு குவிந்த அத்திரவியத்தால் பயனேற்பட முடியுமா?

வளம் பொருந்திய பூமி, வற்றாத ஜீவநதிகள்; இலக்கிய வளமும் இலக்கணப் பொலிவும் கொண்ட உயர்ந்த மொழி தனியான பண்பு, தன்னிகரில்லாக் கலை ஞானம் எம்மிடம் இருந்தும், நாம் கண்ட பயன் என்ன? குருடனுக்கு முன் வைக்கப்பட்ட குத்துவிளக்குப் போன்றதே அத்தனை வளமும் வசதிகளும, அகிலத்தையே ஆட்டிப்படைக்க வல்ல அறிவைப்பெற்றிருக்கலாம். ஆனல் தலைக்கானை ஒன்றை உருவாக்கும் அதிகாரம் இல்லையென்றால் அறிவுக்குப் பயனேயில்லாது போய்விடுகிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனம் சகல துறைகளிலும் சிறப்புற்றிருந்தும் சீராக வாழ முடியவில்லை. பொன்னுண்டு, பொருளுண்டு பண்ணுண்டு மங்காத சிறப்புடன் வாழும் மாண்புமுண்டு. அத்தனையும் இருந்தும் என்ன?

மாற்றானின் சூழ்ச்சி வலைக்குள் சிக்காதிருக்க முடியவில்லை.

எண்ணிக்கையால் குறைந்துவிட்டோம் என்ற குற்றத்துக்காக இன்று கணணியம் குறைந்தவர்களாக்கப்பட்டுவிட்டோம். சட்டங்கள் பல செய்து நம்மை மட்டப்படுத்தி விட்டார்கள்— ஆளவந்தவர்கள்.

எம்மவரே
தேடிய வினை

ஆளவந்தவர்களின் அடாத செயல்களுக்கும், எம் பால் அவர்கள தொடுக்கும் அடக்குமுறைகளுக்கும் பக்க பலமாக நின்று பாதை அமைத்துக் கொடுத்தவர்கள் எம் முன்னோரே!

'பொன்னான புதுப்பாதை காட்டுகிறோம் வாரீர்' என்று அவர்கள் காட்டிய வழியிலே சென்றோம் நாம். [illegible] கச் சேர்ந்து எப்[illegible]னின் வலைக்குள் அமிழ்த்திவிட்டு சொகுசான வாழ்வும் பதவியும் பட்டங்களும் பரிசாகப் பெற்றுவிட்டுச் சென்றுவிட்டார்கள்,

காலத்துக்குக் காலம் தோன்றித்த மக்கு வேண்டியதைப் பெற்றுக் கொண்டு வந்த சுவடே தெரியாமல் மறைந்து விடுப—காளான

—பரணர்—

களைப் போன்றவர்கள் இன்னும் நம் மத்தியிலே தோன்றத்தான் செய்கிறார்கள். ஏமாற்று வித்தைகளையும் எடுத்துக் காட்டத்தான் பார்க்கிறார்கள்

வேதனை வேகட்டும்

தமிழ் பேசும் இனம் பூரிப்புடன் பொங்கலிடப் புதுமை காண விரும்பினுல் சந்தர்ப்வாதம் புரியும் சமூகக் கர்களையும், சொந்த நலனை தேடி வரும் சோதாக்கும்பலையும் பொங்கற் பானை ஏற்றும் அடுப்புக்கு விறகாக்கி விடவேண்டும். நம் மினத்தின் வேதனைகளை அவ்விறகு [illegible] சேர்த்து எரித்து [illegible] விளைந்த [illegible] உள்ளத்தில் மகிழ்ச்சி அப்போது தான் பொங்கும். உணர்ச்சியும் பொங்கும் அத்துடன் பெருவகையும் பொங்கும். பொங்கும் மங்களமும் எங்கும் தங்கும்.

பசுமையான வேளாண்மைப் பயிருக்குள்ளே தென்படும் களையைப் பிடுங்கி எறிவது போல், கயவர்களைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும்.

விளைந்துவிட்ட நெல்லிலுள்ள பதர்களைப் பறக்கடிக்க வைப்பது போல் தமிழ் பேசும் சமுதாயத்தில் தோன்றிய பதர்களையும் நீக்கிவிட வேண்டும்.

அரிசியுடன் சேர்ந்துள்ள கற்களை எடுத்து வீசுதல் போல் நம் மத்தியிலே காணப்படும் கற்களையும் அப்புறப்படுத்திவிட வேண்டும்.

உரிமை எனும் பானையிலே உயர்ந்த கொள்கை அரிசியிட்டு கொடுமைகளை விறகாக்கி தியாகத் தீயில் வேக வைத்து இலட்சியப் பொங்கல் காண்போம் வாரீர்! வாரீர்!

## மக்கள் குரல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

திரத்தையும் புறக்கணித்த எந்த அரசும் வாழ்ந்துவிட முடியாது. எனவே, இத்தருணத்தைப் பயன்படுத்தி ஒருமித்த குரலை எழுப்ப வாரீர்.

தமிழ் அபிமானி,
மட்டக்குழி.

## அருந்ததியர் ஐக்கிய முன்னணி

இலங்கை வாழ் அருந்ததியர்களின் தொழிற் சங்க உரிமைகளுக்காகப் பாடுபடுவதற்கும், அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குமாக "அருந்ததியர் ஐக்கிய முன்னணி" என்னும் புதியதோர் சங்கம், அருந்ததிய தமிழ் பேசும் மக்களுக்காக இச் சங்கப் பணிமனையில் சென்ற 10-1-65 ஞாயிறு மாலை 4 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அருந்ததிய மக்களின் அரசியல், தொழிற் சங்கப் பிரச்சினைகளையிட்டு ஆட்சியாளர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதே அருந்ததிய ஐக்கிய முன்னணியின் நோக்கமாகும். குறிப்பாக அருந்ததிய மக்களுக்கு செனட்டர் ஒருவரும், சமாதான நீதிபதி ஒருவரும் நியமன பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரும் அருந்ததிய மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதற்காகப் பாடுபடுவதே அருந்ததிய ஐக்கிய முன்னணியின் முக்கிய நோக்கமாகும்.

அருந்ததிய ஐக்கிய முன்னணியின நடப்புவருட உத்தியோகத்தர்கள்:-

தலைவர்: திரு. க மனோகரன் செயலாளர்: திரு ஏ. ஈ மூர்த்தி. துணைத் தலைவர்: திரு எம் பணிபுத்து, துணைப் பொதுச் செயலாளர்: திரு. ப. கடக்கரை, பொருளாளர்: திரு மு. செல்லையா, பொதுசனத் தொடர்பதிகாரி: திரு எஸ். கிருஷ்ணசாமி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கி பற்றிய திறனாய்வுக் கருத்தரங்கு

இலங்கையிலும் தமிழகத்திலுமுள்ள தமிழர்கள் இன்று பெரும்பாலும் தமிழைப் போற்றி வாழும் நிலையை அடைந்துள்ளனர். இலங்கையில் ஆங்கிலத்தை வலிந்து பேசுவது நாகரிகத்தின் அடையாளம் என்று எண்ணுபவர்கள் மிகக் குறைவு. சில 'பெண்மணிகள்' இந்த எண்ணமுடையவர்களாயிருப்பினும் சூழ்நிலை இவர்களை நல்வழிப் படுத்துகிறது.

மலாயாவுக்குச் செல்லும் இலங்கைத் தமிழர்களின்—தமிழார்வம் மிக்கவர்களின்—உள்ளத்தை உறுத்துவது அவர்கள் அங்கு சில தமிழர்களின் வீடுகளில் காணும் ஆங்கில மோகமே. பச்சிளங் குழந்தைகளுக்குத் தாய் தமிழைப் பேசப் பயிற்றுது அரைகுறை ஆங்கிலத்தைக் கற்பிக்கும் மடைமை அங்கு காட்சி அளிக்கிறது. தமிழைக் 'கூலிகளின் தமிழ்' என்று கருதும் எல்லைக்கும் அங்கு சிலர் சென்றுளர். அதனைக் கண்டதும் என் உள்ளத்திலும் துன்பங் குடிகொண்டது. இந்தத் துன்பம் மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் சொல்லுருவம் பெற்றது.

## உள்ளம் திறந்தது

அங்கு என் உள்ளத்தைத் திறந்து இந்தத் துன்பத்தைக் கொட்டவேண்டுமென்று யான் கனவிலும் கருதவில்லை. எனக்கு முன் கருத்தரங்கிலே பேசிய 'தமிழ் நேசன்' ஆசிரியர் திரு. முருகுசுப்பிரமணியன் அவர்கள் கல்கியின் பத்திரிகை உலகப் பணியைப் பற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்ட ஒரு செய்தியே என் உள்ளக் கதவை அகலத் திறந்தது.

யாழ்ப்பாணத் தமிழர்களின் தமிழ் அன்பைக் கல்கி பாராட்டியிருப்பதைக் கல்கியின் பின்வரும் கூற்றினை எடுத்துக் காட்டி விளக்கினார் திரு. சுப்பிரமணியன் அவர்கள்.

'உண்மையான தமிழ் அன்பைக் காணவேண்டுமென்றால், யாழ்ப்பாணத்தில்தான் காண வேண்டும். மற்ற இடங்களில் வசிக்கும் தமிழர்களிடம் தமிழ் அன்பு இல்லாமலில்லை. ஆனால் சில இடங்களில் உள்ள தமிழர்கள் தங்கள் தமிழன்பை ஒளித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். துப்பறியும் நிபுணர்களைக் கொண்டு அதைக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கிறது. இன்னுஞ் சில இடங்களில் வெடிமருந்து வைத்துப் பாறையைப் பிளந்தால் தமிழன்பு சிறு ஊற்றுக மேலே வருகிறது. இன்னும சில இடங்களில் தமிழன்பு வேறு பாஷைகளின் மீது துவேஷமாகப் பரிணமித்துக் கோர தாண்டவம் செய்கிறது. ஆனால் யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத் தமிழர் உள்ள இடங்களிலும் தமிழன்பு வெளிப்படையாக அதனுடைய இனிமையான வடிவத்தில் பொங்கிப் பெருகுவது காணலாம்.'

கல்கியின் இந்தக் கருத்து மலாயாவிலே இலங்கைத் தமிழரின் வீடுகள் சிலவற்றில் நடைபெறும் 'தமிழ் ஒழிப்புச்' செயலைச் சுட்டிக் காட்டுமாறு என்னை உந்திற்று. கல்கியாலே வியக்கப்பட்ட இலங்கைத் தமிழரைச் சேர்ந்த அன்பர்கள் சிலர், மலாயாவிலே தமிழை வீட்டு மொழியாகக் கொள்ளுதற்கு வெட்கப்படுகிறார்கள். தமிழை ஒதுக்கி அதன் இடத்தை ஆங்கிலத்துக்கு நல்கிப் பெருமிதம் அடைகிறார்கள். இஃது என்போன்றுரை வெட்கித் தலைகுனியச் செய்கிறது. இந்த அன்பர்களுடைய உள்ளத்திலே தமிழுக்கு எங்கேனும் இடமுண்டா என்று தோண்டித் தோண்டிப் பார்த்தாலும் காண முடியாது. நானும் ஓர் இலங்கைத் தமிழன் என்ற முறையில் இந்த அன்பர்களைத் தமிழர்களாகத்-தமிழார்வமுடையவர்களாக வாழுமாறு உரிமையால் கேட்டுக் கொள்கிறேன்' என்று எனது உரையிற் குறிப்பிட்டேன். எனது இந்த வேண்டுகோளை அவையினர் பல முறை கைதட்டி வரவேற்றனர்.

அங்கு வாழும் என் நாட்டவர் சிலரிடத்து யான் கண்டு துன்புற்றுக் கல்கியின் புகழுரையால் ஊக்கப்பட்டு எடுத்துக் காட்டிய இந்தக் குறை—தமிழை மதிக்கத் தவறியமை—கருத்தரங்கு முடிந்தபின் எங்கும் காட்டுத் தீப்போலப் பரவிற்று. நான் இவ்வாறு 'குத்திக் காட்டியிருக்கப்படாது' என்று ஒரு முணுமுணுப்புந் தோன்றிற்று. நான் குறிப்பிட்ட குறை சிலருடைய உள்ளத்தைத் தொட்டமை எனக்குப் பெருமகிழ்ச்சியை உண்டாக்கிற்று. நாள் செல்லச் செல்ல 'முணு முணுத்த' அன்பர்களும் உண்மையை உணர்ந்து தமிழைப் போற்றும் பணியில் எனக்கு உறு துணையாயிருந்தார்கள்.

## பல சிறப்புக்கள்

யான் மலாயாவில் இருந்த பொழுது தமிழ் இலக்கிய உலகில் நிகழ்ந்த பெரு நிகழ்ச்சிகளுள்ளே தலைசிறந்தது மலாயாப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 'கல்கி' பற்றிய கருத்தரங்கேயாகும். இக்கருத்தரங்கு பல துறைகளிலே சிறப்பும் முதன்மையும் புதுமையும் வாய்ந்து விளங்கிற்று. இதனால் தமிழ் கூறும் நல்லுலகம்முழுவதின் கவனத்தையும் இது கவர்ந்தது.

ஓர் எழுத்தாளருடைய எழுத்துப் பணிகளின் திறனை முழுமையாகப் பல பேரறிஞர்கள் கூடி முதன் முதல் ஆராய்ந்தது இக் கல்கிக் கருத்தரங்கிலேயே எனலாம். ஒரு பல்கலைக் கழகமும் ஓர் எழுத்தாளர் சங்கமும் சேர்ந்து முதன் முதல் நடத்திய திறனாய்வுக் கருத்தரங்கும் இதுவே. இக்கருத்தரங்கில் உரை ஆற்றியவர்களுக்கு மட்டுமன்றி மலேசியா முழுவதிலுமுள்ள எழுத்தாளர்களுக்கும் கல்கியின் எழுத்துத் திறனை ஆராய்ந்து தங்கள் கருத்துரைகளை எழுத்துருவில் வழங்குதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. எழுத்தாளர்கள் பலர் எழுதி அனுப்பிய கருத்துரைகளின் படிகளும் சொற்பொழிவாளர்களின் பொழிவுகளின் படிகளும் அவையோருக்கு வழங்கப்பட்டன.


## காணுக் காட்சி

1963 அக்ரோபர் 20ஆம் தேதி மலாயாப் பல்கலைக் கழக மண்டபம் என்றுங் காணாத காட்சியைக் கண்டது. மலேசியாவின் பல பகுதிகளிலுமிருந்து வந்த தமிழ் எழுத்தாளர்களும், தமிழ் அன்பர்களும் அம்மண்டபத்தில் குழுமினர்; மண்டபம் நிறைந்து வழிந்தது. மண்டபத்திலேயுள்ள அரங்கிலே பேராசிரியர் தனிநாயக அடிகளார் திருவாளர்கள்: இரா. பாலகிருட்டிணன், முருகு சுப்பிரமணியன், ஆதிநாகப்பன், வை திருநாவுக்கரசு, எம். துரைராஜ் முதலானோர் என்னுடன் அமர்ந்திருந்தனர்.

மலாயா மூதவை உறுப்பினர் ஆதிநாகப்பன் தலைமையில் கல்கிக் கருத்தரங்கு தொடங்கிற்று. ஆதிநாகப்பன் அவர்கள் முன்னர் தமிழ்நேசன் ஏட்டின் ஆசிரியராக இருந்தவர். இப்பொழுது வழக்கறிஞராக விளங்குபவர். தமிழ் ஆர்வமும் சொல்லாற்றலும் நிறைந்தவர். "மலாயாப் பல்கலைக் கழக இந்தியத்துறையும், மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கமும் சேர்ந்து இக் கருத்தரங்கை நடத்துவதால் பெரும் விழிப்பும் புத்துணர்ச்சியும் தமிழ் மக்களுக்கு உண்டாகியிருக்கிறது" என்று தம் தலைமை உரையில் குறிப்பிட்டார்.

இவருடைய தலைமை உரையின் பின் 'தமிழ் நேசன்' ஆசிரியரும் மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான திரு. முருகுசுப்பிரமணியன் அவர்கள் 'கல்கியின் பத்திரிகை உலகப்பணி' எனும் பொருள் பற்றிக் கவர்ச்சி மிக்கதோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

அடுத்து எனது உரை முடிந்தவுடன் கலந்துரையாடல் நிகழ்ந்தது. கலந்துரையாடலிலே அவையிலிருந்த பலர் பங்கு கொண்டனர். கல்கி போன்ற மறுமலர்ச்சி எழுத்தாளர்களை சிறந்த இலக்கிய ஆசிரியர்களாக ஏற்றுக்கொள்ளாதவர்களும் அந்த அவையிலே இருந்தார்கள் என்பது சில அன்பர்களுடைய கருத்துரைகளால் நன்கு புலப்பட்டது. இக் கட்சியினர் உரைத்தவற்றைச் சுருக்கமாக அறிந்து மேற் செல்வோம்.




(9)


# எலக்சன் வருகுதடா....!

—(சம்மாந்துறை, யூ செயின்)—

எலக்சன் வருகுதடா எழுந்திரடா என்மகனே
தலைதூக்கிப் பார்த்திடடா தயங்காமல் எழுந்திரடா

நல்லவர்களைத்திட்டும் நாகரிகம் இல்லாத
பொல்லாத போலிகளும் புலம்பிடுவார் எலக்சனிலே

மாரிக்கு முளைக்கின்ற மழைக்காளான் போலபலர்
காரில் பவனிவந்து கைகூப்பிக் கால்பிடிப்பார்

ஐந்தாண்டுக் கொருமுறையாய் ஆமைதலை நீட்டுதல்போல்
சந்தியிலே வந்துநின்று சண்டமாரு தம்பொழிவார்

ஏலத்தில் எம்மினத்தை எடைபோட்டு விற்றவர்கள்
காலத்தால் அதை மறைத்து கையேந்தி வந்துள்ளார்.

தன்மானம் இல்லாமல் தாய்மொழியைக் கொன்றுவிடும்
தரங்கெட்ட பாவிகளும் தயங்காமல் வந்திடுவார்

சொந்த மதத்தினையே சுண்டங்காய் போல்கருதும்
மந்தகுணம் உடையோர் மக்களுக் கெதற்காக?

கொட்டை எழுத்தினிலே குமுறுகின் றறிக்கைகளை
திட்டங்கள் ஏதுமின்றித் திட்டியேதான் தீட்டிடுவார்

தன்னைத் தலைவனென்றே தன்னிலுள்ள ஊழலென்னும்
புண்ணைப் போக்குதற்காய் புலம்பியே முழங்கிடுவார்

கொள்கை இலட்சியங்கள் கூரான புத்திநுட்பம்
எள்ளளவும் இல்லாதான் எதற்காக இங்கு வந்தான்?

பாராளு மன்றத்துள்ளே பைத்தியத்துக் கென்னவேலை?
யாராய் இருந்தாலும் ஆராய்ந்தனுப்புமடா.






# உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப் படமாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.

# வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

'சுதந்திரன்'

புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தில் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தில் மட்டும் பேசியதேன்?

## தெளிவானசெயற்திட்டமுமில்லை
### உருப்படியான கட்சி அமைப்புமில்லை

திரு. சிவசிதம்பரம் பாராளுமன்றத்திலே ஆங்கிலத்திலேயே பேசுவேன் என அடம்பிடிப்பதற்குக் காரணம், பாராளுமன்ற ஆங்கிலப் பேச்சுக்களை பெருமளவு பிரசுரிக்கும் தின இதழ்கள், தமிழ் பேச்சுக்கள் எவ்வளவு சிறப்பானவையானாலும் மிகச் சுருக்கியே வெளியிடும் என்பதாலேயே என்று கருதலாம். அதிகம் பேசினார் என்ற பெயரைப் பெற்றுக் கொள்வதற்காகவே தமிழ் மொழியில் பேசாமல் ஆங்கிலத்தில் பேசினாரோ என்று மக்கள் கருதக்கூடியதாக அவர் பேசி வந்தார்.

இதே போலத்தான் காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென திரு. சிவசிதம்பரம் கொண்டு வந்த தீர்மானமும்.

காங்கேசன் துறைத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பவர் தந்தை செல்வநாயகம். அவர் தமிழரசுக் கட்சித் தலைவராக இருப்பதோடு தமிழ் பேசும் இனத்தின் மதிப்புக்குரிய தலைவராகவும்விளங்குகிறார்.

அவர் தொகுதியின் அபிவிருத்தி சம்பந்தமாக தமது இச்சைப்படி ஒரு தீர்மானத்தைக் கொடுத்த திரு. சிவசிதம்பரம் தந்தை செல்வநாயகத்திடம்ஒரு வார்த்தை கூட இதைப்பற்றி முன் கூட்டியேபேசவில்லை என்றே தெரிகிறது.

ஆயினும் தமக்கே உரிய பெருந்தன்மையோடு தந்தை செல்வநாயகம்-திரு. சிவசிதம்பரத்தின் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்.

ஆனால் இவ்விடயத்தில் திரு. சிவசிதம்பரம் தான்ஒரு பெரிய சாதனையை நிலைநாட்டி விட்டதாகக் காட்டிக் கொள்ள முடியாமற் போய்விட்டது காரணம் தந்தையவர்கள்தாம்1947ம் ஆண்டிலிருந்து காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்திக்காக வாதாடிய விபரங்களையும் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொன்னார்.

திரு சிவசிதம்பரம் எதுவோ மற்றவர்கள் செய்யாததைத் தான் செய்து தமிழினத்தை காப்பாற்ற பாடுபடுவதாகக் காட்டிக்கொள்ள முயன்றாரென்றே அப்பொழுது கருதப் பட்டது. அவரிடம் திட்டவட்டமான தெளிவான செயற்திட்டமும் இருக்கவில்லை. செயற்பட உருப்படியான ஒரு அமைப்பும் இருந்ததில்லை' தமிழரசுக் கட்சிதான் அவரைக் காப்பாற்றியது. தமிழரசுக்கட்சிப்பாராளுமன்ற உறுப்பினர்கள் தம் இச்சைப்படி விளம்பரத்துக்காக எதுவும் செய்ய அவர்கள் ஒன்றும் கட்டாக்காலிகளல்ல.

ஒரு நாள் கொழும்பில் சில தமிழ் அரசாங்க ஊழியர்கள் திரு. சிவசிதம்பரம், திரு. சிவசுந்தரம் முதலியவர்களுடன் கதைத்துக்

**கரவைச் சோமு**

கொண்டிருந்த வேளை (திரு. சிவசுந்தரம் அப்பொழுது தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறவில்லை) வழமை போல தந்தை செல்வநாயகம் அவர்களைக் குறைகூறி-தந்தையால்எதையும்செய்ய முடியாது-தமிழினத்தின் தலைவனாக இருக்கக்கூடிய தகுதி திரு. சிவசிதம்பரத்துக்கே உண்டு என அவர் முன்னிலையிலே கூறினாராம். திரு. சிவசிதம்பரம் இவற்றைக்கேட்டுக் கொண்டு மௌனமாகவே இருந்தாராம். தன்னடக்கத்துக்காகத்தானும் எதையும் மறுத்துரைக்கவில்லையாம்.

திரு. சிவசுந்தரம் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிய வேளை நடந்த ஒரு நிகழ்ச்சி, திரு. சிவசுந்தரம் கட்சியை விட்டு வெளியேற திரு. சிவசிதம்பரம் உடந்தையாயிருந்தாரோ என்று எண்ண இடமளித்தது.

திரு. சிவசுந்தரத்தின் விலகல் தெரியவரவே ஒரு தமிழரசு அபிமானி திரு. சிவசிதம்பரத்தை தொடர்பு கொண்டு திரு. சிவசுந்தரத்தின் ராஜினாமா பற்றி கதைத்த பொழுது அவர் கூறியதாக கூறப்படும் வார்த்தைகள் அவரது எண்ணத்தை தெளிவாகக்காட்டி விட்டன.

திரு. சிவசிதம்பரம் ஆங்கிலத்தில் கூறியதாகச் சொல்லப்படும் வார்த்தைகள் "I asked him not to be hasty" என்பனவாகும். அவரை அவசரப்படவேண்டாம் எனக் கூறியிருந்தேன் என்பது தான் இவ்வார்த்தைகளின் தமிழாக்கம். அவர் இப்படிக் கூறியது உண்மையானால், சமயம் வரும் பொழுது கட்சிக்குச் சமாதி கட்டுவோம். ஆனால் அவசரப்பட்டு காரியத்தை கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதானே அதன் பொருள் என்று மக்கள் கேட்பதில் தவறில்லை.

தமிழரசுக் கட்சியினர் போதிய அளவு கவனமாக இருந்தமையால் திரு. சிவசிதம்பரத்தின் காரியம் கைகூடவில்லை. திரு. சிவசிதம்பரத்தின் திட்டங்களுக்கும் தமிழரசுத் தலைவர்கள் தடுப்புக் காவலிருந்த சமயம் இவர் மட்டும் சுதந்திரமாக, தாம் விரும்பியதைச் செய்ய அரசாங்கம் தடை சொல்லாமல் விட்டதற்கும் திரு. சிவசிதம்பரத்தின் பழைய அரசியற் கொள்கைகளுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்ற ஐயம் எழுவது இயற்கை. காலம் உண்மையை ஒரு நாள் காட்டும்.

உடுப்பிட்டித் தொகுதி மக்கள் இதர தமிழ் பேசும் மக்களுடன் உள்ளம் ஒன்றிய தோழமையோடு - விடுதலைப் படையில் ஒன்றாக நின்றுழைக்கக்கூடிய தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. ஜெயக்கொடியை அமோகமாக வெற்றியீட்ட வைப்பதன் மூலம் தரிக்குணத்தை இந்த நாவிலத்திலிருந்து, தமிழ் மண்ணிலிருந்து நிச்சயமாகப் புதைத்து விடுவார்களாக.

---

**வட மாகாணப் புதினம்**

# இரத்தினம்-மாட்டின் வெற்றி நிச்சயம்

மார்ச் மாதம் 22ம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் நாட்டின் பல பாகங்களிலும் இத்திங்கள் 11ம் நாள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. வட மாகாணத்திலுள்ள மொத்தம் 13 தொகுதிகளுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்களும் மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தாக்கல் செய்யப்பட்டன. மொத்தம் 13 தொகுதிகளிலும், 50 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ இயக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சியொன்றே 13 தொகுதிகளிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. நீண்டகாலமாக மக்கள் அரங்கிலிருந்து ஒதுங்கி வாழ்ந்த தமிழ்காங்கிரஸ் கட்சி 12 தொகுதிகளில் தனது வேட்பாளர்களை இழுத்து வந்து நிறுத்தியுள்ளது. சுதந்திரக் கட்சியுடன் சங்கமித்துள்ள சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும் 7 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இவற்றை விட புரட்சிவாத சமசமாஜக்கட்சி, சீனச்சார்புடைய கம்யூனிஸ்டுக்கட்சி, அடங்காத்தமிழர் முன்னணி ஆகிய கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. யாழ்ப்பாண முன்னாள் பிரதிநிதி உட்பட அறுவர் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்கள்.

### சிவசுந்தரம் பின்வாங்கினார்

நீளிநொச்சித் தொகுதியில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடவிருந்த முன்னாள் பிரதிநிதி திரு. அ. சிவசுந்தரம் கடைசி நேரத்தில் வெற்றிகரமாகப் பின்வாங்கியுள்ளார். இவரின் இடத்தை நிரப்ப 'மாவலிகங்கையைத் திருப்பும் மாவீரரும்' முன்னாள் அடிப்படை உரிமைகள் முன்னணித் தலைவருமான திரு. வி. குமாரசாமி முன்வந்துள்ளார். திரு. சிவசுந்தரம் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்த சுதந்திர ஐக்கிய தமிழர்கட்சியை சாகடித்து தமிழ் காங்கிரசில் இணைந்தார். திரு. குமாரசாமி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்த அடிப்படை உரிமைக் கட்சியைச் சாகடித்து இன்று தமிழ்க் காங்கிரசில் இணைந்துள்ளார்.

### தேர்தலிலும் போராட்டம்

தமிழரசுக்கட்சி வேட்பாளராக [illegible] தொகுதி [illegible] பொ. இரத்தினம் அவர்கள், வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும்பொழுதே உரிமைப் போராட்டத்தையும் ஆரம்பித்துள்ளார்.



திரு. பி. சே. மாட்டின்

தேர்தல்பற்றிய விசேட அரசாங்க வர்த்தகமானிப் பிரதிகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே வேட்பாளர்களுக்கு வழங்கப் பட்டன. இதை திரு. கா. பொ. இரத்தினம் ஆட்சேபித்து தமக்கு தமிழில் அரசாங்க வர்த்தகமானிப்பிரதி கொடுக்க வேண்டுமென்று கூறினார்.

திரு. இரத்தினத்தின் வேண்டுகோளை மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி தமிழ் வர்த்தமானி பெற்றுக் கொடுக்க முயல்வதாக தேர்தல் அதிகாரி வாக்களித்துள்ளார்.

தேர்தல் முகவர்களை நியமிக்கும் பத்திரங்களும் தமிழில் இருக்க வேண்டுமென்று திரு. இரத்தினம் கோரியுள்ளார். அத்துடன் திரு. இரத்தினம் தமது வேட்பாளர் நியமனப்பத்திரத்தையும் தமிழ் மொழியிலேயே நிரப்பிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

### யாழ்ப்பாணக்கூட்டம்

வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவதற்கு முதல்நாள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாபெரும் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற மிகப் பெரிய கூட்டம் இதுஎன்று, கூட்டங்கள்தோறும் கடலைவிக்கும் ஏழைவியாபாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஆறு ஊர்வலங்கள் நகரின் நுழைவாயில்களிலிருந்து புறப்பட்டு கூட்ட மைதானத்தை வந்தடைந்தன. ஒவ்வொருஊர்வலத்திலும் எண்ணாயிரத்திற்குக் குறையாத மக்கள் கலந்துகொண்டனர். பெண்களும் பெருந்தொகையினராகக் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக கொழும்புத் துறையிலிருந்து யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. பி. சே. மாட்டின் தலைமையில் வந்த ஊர்வலத்தில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பெண்கள் கலந்துகொண்டனர். இவ்வூர்வலம் வந்த பாதைகள் எல்லாம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு சில இடங்களில் சிகரங்களும் கட்டப்பட்டிருந்தன. இக் கூட்டம் திரு. மாட்டினின் வெற்றியை உறுதிப்படுத்திவிட்டது என்றே கூறவேண்டும்.

[இக் கூட்டம்பற்றிய செய்தியைச் சேகரிப்பதற்கு கொழும்புத் தினசரிகள் விசேட நிருபர்களை அனுப்பியிருந்தபோதும் முடிவில் எத்தகைய செய்திகளையும் வெளியிடாது இருட்டடிப்புச் செய்துவிட்டன]

—சங்கிலியன்

---


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திருப்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலுக்கு முன்னரே மஞ்சி விரட்டு

## ராஜேந்திரன் வைத்தார்

பொங்கலை அடுத்துத் தான் மாட்டுப் பொங்கலிட்டு, மஞ்சிவிரட்டும் வைப்பது வழக்கம். ஆனால் இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் தைப் பொங்கலுக்கு இரு வாரங்களுக்கு முன்பாகவே மஞ்சிவிரட்டு வைத்துவிட்டார்.

இம் மஞ்சிவிரட்டுக்காக தஞ்சாவூரிலிருந்து 5 காளைகளைக் கொண்டுவந்திருந்தார்கள். இவற்றை சண்டிக்கட்டும் முண்டாசுமாக நின்ற ராஜேந்திரன் எவருடைய துணையுமின்றி அடக்கி விட்டார்.

பொதுவாக இப்படிப்பட்ட காட்சிகளில் பிரதான நடிகரின் உருவ அமைப்பை ஒத்த ஒரு துணை நடிகரை விட்டே காட்சிகளை எடுப்பதுண்டு. ஆனால் காட்சி தத்ரூபமாக இருக்கவேண்டுமென்பதால் ராஜேந்திரனே முன்வந்து காளையை அடக்கி விட்டார்.

பாரதமாதா நிறுவனத்தினர் தயாரிக்கும் 'பழநி' படத்துக்காக இக் காட்சி வெங்கடேசுவரா சினிட்டோனில் படமாக்கப்பட்டது. தொடர்ந்து இக்காட்சி 4 நாட்கள் சுடப்பட்டது.

### 13 பிள்ளைகளின் அப்பா

'பலபீமா...பலபீமா உங்கள் பலத்தைக் கொஞ்சம் காட்டலாமா?' என்றொரு குரல் எழுகிறது. நமக்குப் பழக்கப்பட்ட நாகேஷின் குரல்தான் அது. காளைகளை அடக்குவதற்கு முன்பாக நாகேஷின் கதாகாலட்சேபம் ஆரம்பமாகிறது.

ஒல்லியான அந்த உருவத்துக்கு 'பழநி' கதை அமைப்பாளர்கள் 13 குழந்தைகளைக் கொடுத்துவிடுகிறார்கள். நமக்கு பல படங்களில் அறிமுகமான துடுக்குத் தனமான இளம் நடிகர் மாஸ்டர் தசரதனும் நாகேஷின் மகனாக நடிக்கிறார். 'நானும் ஒரு பெண்' படத்தில் எம். ஆர். ராதாவின் மகனாக



வந்து மளிகைக் கடை வைத்திருந்த நாகேஷை ஆட்டிப் படைக்குமே ஒரு வால், அது தான் இந்த தசரதன்.

சோலைமலை கதை வசனம் எழுதியுள்ள 'பழநி'யை பீம்சிங் டைரக்ட் செய்கிறார்.

### சிவாஜியின் விருந்து

மஞ்சிவிரட்டுக்காகக்காளைகளைக் கொண்டுவந்த தஞ்சாவூரைச்சேர்ந்த 14 விவசாயிகளுக்கும் படப்பிடிப்புமுடிந்ததும் தமது இல்லத்தில் சிவாஜிகணேசன் விருந்து ஒன்று வைத்தார். அவர்களுக்கு வேட்டி சட்டைகளும் கொடுக்கப்பட்டன.

# ஆண் உடையில் ஆனந்தி

## இளவரசனைக் கண்டு பிடிக்க இளவரசி சூழ்ச்சி

அந்த அழகான மாளிகையின் எழிலான இளவரசி ஆனந்திக்கும் அவளுடைய அன்புத் தோழிக்கும் பெரிய வாக்கு வாதம் ஏற்பட்டு விட்டது. அந்தப் புரத்துக்குச் சொந்தமான வசந்த மண்டபத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்த பிரதாபன்என்ற புதுக் காவற்காரனையிட்டே இவர்கள் வம்பளந்து கொண்டிருந்தனர்.

"நமது வசந்த மண்டபத்தைக் காவல் புரிந்து கொண்டிருக்கும்பிரதாபன் உண்மையில் காவற்காரன்தானா அல்லது ஒரு இளவரசனா?" என்று இளவரசி ஆனந்தி தனது தோழியிடம் கேட்கிறாள். தோழியும் சந்தேகப்படுகிறாள். இருவருமே மாறுவேடத்தில் சென்று பரிசோதிக்கத் திட்டமிடுகின்றனர்.


பெரிய கொள்ளைக்காரர்களைப் போல் இருவரும் வேடமணிந்து கொண்டு வசந்த மண்டபத்தை அடைந்தார்கள். பிரதாபனின் நண்பனான அழகேசன் பயந்து நடுங்கினான். பிரதாபனோ துணிவுடன் இருவரையும் கைது செய்ததோடு வேடத்தையும் கலைக்கிறான்.

பிரதாபன் உண்மையிலேயே வீரம் பொருந்திய இளவரசன்தான் என்பது ருசுவாகிறது.

தனலட்சுமி தியேட்டர்சின் 'கல்யாண மண்டபம்' படத்துக்கான இக் காட்சி சாரதா ஸ்டுடியோவில் சுடப்பட்டது. பிரதாபனாக ஆனந்தனும், ஆனந்தியாக கே. ஆர். விஜயாவும், அழகேசனாக நாகேஷும், தோழியாக மனோரமாவும் தோன்றுகின்றனர்.

### மா. ரா. டைரக்டராகிறார்

'கல்யாண மண்டபம்' படத்தின் கதை வசனத்தை எழுதிய திரு. ம. ராமச்சந்திரனே இப்படத்தை டைரக்ட் செய்கிறார். ஒரு அரசாங்க ஊழியராக விருந்தவரான திரு. ம. ரா. பல நாடகங்களை எழுதியிருக்கிறார். பத்மா பிலிம்ஸ் தயாரித்த "அன்புக்கோர் அண்ணி" படத்தின் கதை வசனத்தை எழுதியவர் இவரே. இதுவே இவருடைய முதல் திரைப் படமாகும். அப்படத்தை டைரக்ட் செய்த டி. ஆர். ரகுநாத் அவர்களின் தூண்டுதலே இன்று திரு. ம. ரா. வை டைரக்டராக்கியது.



சினிமாஸ் திரைகளுக்கு அடுத்து வரவிருக்கிறது 'கற்பகம்'. உள்ளத்தை உருகவைக்கும் உணர்ச்சிக்கட்டங்கள் நிறைந்த இச் சித்திரம் தமிழ் நாட்டின் இரசிகர்களை வெகுவாக ஈர்த்தது. ஜெமினி கணேசன், கே. ஆர். விஜயா, மாஸ்டர் கமலஹாசன் ஆகியோர் தோன்றும் ஒரு உணர்ச்சியான கட்டம் இது.

# திருநீலகண்டராக சவுந்தரராஜன்

பட்டினத்தாராகவும், அருணகிரிநாதராகவும் தோன்றி இரசிகர்களின் பாராட்டுதல்களை அமோகமாகப் பெற்றுவிட்ட பிரபல பின்னணி பாடகர் டி. எம். சவுந்தரராஜன் திருநீலகண்டராக நடிக்கிறார்.

முன்பு தியாகராஜபாகவதர் திருநீலகண்டராகத் தோன்றி வெற்றியீட்டியது தெரிந்ததே.

ஆரெம்ஜி பிக்சர்ஸ் இப்படத்தை தயாரிக்கிறார்கள். இப்படத்துக்கு கவிஞர் கண்ணதாசன் பாடல்களை எழுதியுள்ளார். விஸ்வநாதன் ராமமூர்த்தி இசை அமைக்கின்றனர்.

இப்படத்தின் ஆரம்ப விழா அண்மையில் நடந்தது. சிவாஜிகணேசன் படத்தைத் தொடக்கி வைத்தார். சவுந்தரராஜனுடன் கே. ஆர். விஜயா, நகேஷ், சச்சு முதலானோரும் இப்படத்தில் நடிப்பர். ஏ. டி. கிருஷ்ணசாமி கதை வசனத்தை எழுதி டைரக்ட் செய்கிறார்.





# பரமபிதா தயாராகாது

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், சரோஜாதேவி முதலியோரை பிரதான பாகங்களில் வைத்து சரவணா பிலிம்ஸ் தயாரித்து வந்த 'பரமபிதா' வர்ணப் படப் பிடிப்புகள் யாவும் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது. இதற்கான காரணங்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

# நடு இரவில் ...!

'பொம்மை' படத்தை வெளியிட்டு வெற்றி கண்ட டைரக்டர் கே. பாலச்சந்தர் 'நடு இரவில்' என்ற ஒரு மர்மப் படத்தை ஜனவரி 18ல் தொடக்குகிறார். இப் படத்தில் சௌகார் ஜானகியுடன் நாடகமேடை நடிகரானசுந்தர்ராஜன் தோன்றுவார். இதற்கான கதையை பாலச்சந்திரனே எழுதி டைரக்ட் செய்கிறார். வசனம், பாடல்களை வித்வான் வே. இலட்சுமணன் எழுதுகிறார்.

நடக்கவிருப்பவை

# கலையரங்கத்தின் நாட்டியக் கச்சேரி

கொட்டாஞ்சேனை கலையரங்கத்தினரால் 23-ம் திகதி சனிக்கிழமை மாலை கொழும்பு மேட்டுத்தெருவிலுள்ள மோடி கலாகேந்திர மண்டபத்தில் ஒரு நாட்டியக் கச்சேரி நடைபெறுகிறது. இந் நிகழ்ச்சியில் வரும் லாபம் புயல் நிவாரண நிதிக்குக் கொடுக்கப்படும். மோடி தம்பதிகள் இவ்விழாவுக்குத் தலைமை தாங்குகின்றனர்.

எமது விமர்சனம்

# கல்யாணியின் கணவன்

ஆற்றுவெள்ளத்தில் அடியுண்டு சென்றஅழகியான கல்யாணியை காப்பாற்றுகிறான் கதிரேசன் என்ற விவசாயியான இளைஞன்; படித்துப் பட்டம் பெற்ற அந்த இலட்சிய இளைஞனுக்கும் கல்யாணிக்கும் காதல் அரும்புகிறது.

பணக்காரத் தந்தையின் உதவியால் தன்காதலனுக்கு நல்ல பதவியையும் வாங்கிக் கொடுத்துவிடுகிறாள். காதல் பன்மடங்காகப் பெருகுகிறது. கல்யாணியின் அத்தான்—அசட்டு சிகாமணி—அவனும் கல்யாணியை மணக்க விரும்புகிறான். ஆனால் கல்யாணியின் தந்தையான விஸ்வநாதன் கதிரேசனுக்கே தன் மகளைக் கொடுக்க மூகூர்த்தமும் வைத்துவிடுகிறார்.

இதற்கிடையில், காதலர்களுக்குள் ஒரு அநாமதேயக் கடிதம் பிரிவினையை ஏற்படுத்துகிறது. அத்துடன் கதிரேசன் கொலைக்குற்றச் சாட்டப்பட்டு தலைமறைவாகவேண்டியேற்படுகிறது. இச்சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் காரணகர்த்தாவாக விருப்பவர் சோமையா என்பவர். சோமையா நல்லவராகவே தோன்றி இறுதியில் இத்தனை அனர்த்தங்களையும் விளைவிக்கிறார். ஆனால் அதற்கும் ஒரு காரணத்தை இறுதி வரை கதாசிரியர் மர்மமாகவே வைத்திருக்கிறார்.

இப்படியான ஒரு கதை அமைப்பை வைத்து கல்யாணியின் கணவன் படம் நகருகிறது. எப்போதாவது ஒன்றிரண்டுதரமான தமிழ்ப்





படங்களைத் தயாரித்துத் தரும் பட்சிராஜா ஸ்டுடியோஸ் நல்லமுறையில் இப் படத்தைத் தயாரித்துள்ளனர். கதிரேசனாகசிவாஜியும், கல்யாணியாக சரோஜாதேவியும், சோமையாவாக ராதாவும் தோன்றுகின்றனர். ரி. ஆர். ராமச்சந்திரன், ரங்கராவ் ஆகியோரும் இப் படத்தில் நடித்துள்ளனர்.

சிவாஜியும் சரோஜாதேவியும் சந்தர்ப்பத்தைப் பன்யபடுத்திக்கொண்டு இரசிகர்களின் உள்ளத்தைப் பிழிந்தெடுக்கிறார்கள். கோயமுத்தூர் மேட்டுப்பாளையம் காட்சிகள் கண்களுக்கு கவர்ச்சியை ஊட்டுகின்றன.

கவிஞரின் பாடல்கள் கனகச்சிதமாகவுள்ளன. அதற்கேற்ப சுப்பையாநாயுடுவின் இசை மெருகூட்டுகின்றது.

[illegible] நகைச்சுவையும் சிறப்பாக அமைந்துள்ளது இப்படத்தில்.



என்டர் டெயின் மன்ட்ஸ் திரைகளில் ஓடிக் கொண்டிருக்கும் 'சுயாவின் இரகசியம்' என்ற சிங்களப் படத்தில் ஒரு உருக்கமான கட்டம். இப்படத்தை பிரபல தென் இந்திய இயக்குநர் ப. நீலகண்டன் டைரக்ட் செய்திருக்கிறார். இசை டி. ஆர். பாப்பாவினுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்க்கலைமணி கா. பொ. இரத்தினம்



இலங்கையில் விரல்விட்டுக் கணக்கிடக்கூடிய தமிழ் பேரறிஞர்களுள் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களும் ஒருவர். தமிழ் கற்பதே இழுக்கு என்று ஆங்கில மோகத்தில் ஊறிக் கிடந்த தமிழ் மக்கள் மத்தியில் தூய தமிழ் கற்றறிந்து பண்டிதரகி, தன் முயற்சியினலே மேலை நாட்டு இலக்கியங்களையும் கற்று இலங்கை தமிழ் ஆசிரியர் சமூகத்துக்கே சிறப்பும் மேன்மையும் பெற்றுத் தந்தார்..

பண்டிதர் இரத்தினம் அவர்கள் இளமையிலேயே தமிழ் இலக்கியங்களையும் புராணங்களையும் கசடறக் கற்றுக்கொண்டார். தமது பத்தொன்பதாவது வயதிலேயே பண்டிதர் பட்டமும் பெற்று தமிழாசாளுகி ட்டபின்னர், கல்வியின் பால் இயல்பாக ஏற்பட்ட நாட்டம் அவரை ஆங்கில நுகர்ச்சிக்கு வழி அமைத்தது. எக் கல்லூரிக்கும் செல்லாது, 1943-ல் அதாவது 29-ம் வயதில் லண்டன் பல்கலைக் கழகத்து கலைக்குமரன் (B. A., Hons) பட்டமும் பெற்றுர்.

இலங்கை அரசின் புலமைப் பரிசில் பெற்று தமிழகம் சென்று தமிழகத்து தலை சிறந்த தமிழறிஞர்களின் உதவியுடன் தமிழாராய்ந்தார். வித்துவான், பி ஓ எல்., பட்டங்களையும் பெற்றுர்.

திருக்குறளைப் பரப்ப தமிழ் மறைக் கழகத்தை யும், தெருவெல்லாம் தமிழ் முழக்க எல்லாம் தமிழ் இயக்கத்தையும் கண்ட திரு இரத்தினம் அவர்கள் அரச கரும மொழித் திணைக்களத்தின் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராகவும் பணிபுரிந்துவிட்டு இன்று தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் அந்தஸ்தை உயர்த்தப் பாடுபட்டு வருகிறுர்.

மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பணி புரியும் வாய்ப்பு பண்டிதர் அவர்களுக்குக் கிடைத்தது. அப்போதுதான் 'தமிழ் சுந்த மணி'ரும் பிறந்தது. 1956ம் ஆண்டில் புது தில்லியில் தமிழ் முழக்கமிட பண்டிதர் அவர்கள் சென்று திரும்பினர். 1960-ல் மொஸ்கோவில் தமிழின் பெருமையை எடுத்தியம்பினர்.

தமிழகத்துத் தமிழறிஞர்கள் மத்தியிலும் பெரு மதிப்பும் புகழும் கொண்டு திகழும் வித்துவான் பண்டிதர், செந்தமிழ்க் கலைமணி கா. பொ இரத்தினம் அவர்கள் இன்று கிளிநொச்சி தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுகிறுர். தமிழ் பேராசானுன பண்டிதர் அவர்கள் இலங்கை பாராளுமன்றத்தில் தமிழ் முழக்கம் செய்யும் நல் வாய்ப்பை கிளி நொச்சி மக்கள் அளித்துப் பெருமை கொள்வார்களாக!

# பொங்கட்டும் செங்குருதி புடைக்கட்டும் நரம்புகள்

— மலைவேல் —

உதிரத்தை உழைப்பாக்கி நானிலத்தின் நலிவைப் போக்கிடக் கடும் பாடுபடும் காளைகள் களி கொள்ள ஒரு நாள்! அதுதான் பொங்கற் திருநாள்! ஊரெல்லாம் கொண்டாடும், உலகெல்லாம் கொண்டாடும் ஓர் உயரிய பொன்னுள் பொங்கல் நன்னுள்.

ஆனல், உரிமையிழந்து, பெருமையிழந்து ஏன் உன்னையே இழந்து நிற்கும் மலையகத் தோழனே, நீ என்ன செய்யப் போகிறுய்? ஊராடும் ஆட்டத்திலே உனது பங்கையும் சேர்க்கப்போகிறுயா? சற்றே சிந்தித்துப் பார்! காலமெல்லாம் உழைத்தாய், உருக்குலைந்ததைத் தவிர வேறென்ன பலனைக் கண்டாய்? காட்டை நாடாக்கினுய், நாட்டை கவின் மிகு சோலையாக மாற்றினுய்! பார், இன்று! நாடுண்டா உனக்கு? வீடுண்டா? மொழியை 'விழி' என்று கூறுவர். உனது மொழியின் நிலையைப் பார் இன்று! இந்நிலையில் நீ பொங்கல் கொண்டாடி பூரித்தால் மட்டும் போதுமா? ஆட்சிகொண்டிருக்கும் அரசின் அதிகாரத்தால் இன்றோ நாளையோ நீ நாடுகடத்தப்படவிருக்கிறுய்!

நீ நடந்து வந்த பாதையை—கடந்து வந்த கரடு, முரடுகளை கணக்கெடுத்துத் திருப்பிப் பார்! உன் காலடி பட்ட இடமெல்லாம் இன்று பொன் விளையும் பூமியாக காட்சி தருகின்றதே. இதற்காகவா நீ நாடு கடத்தப்பட வேண்டும்? 'தேயிலைச் செடியில் மாசி கிடைக்கும்' என்று ஏய்த்துக் கூட்டி வந்தான் உனது கங்காணி! 'இந் நாட்டின் ஆட்சியை உனக்கே சொந்த மாக்குகின்றேன் என்று உயர் குரலெழுப்பி, உன்னை எந்த இடத்திலும் ஏய்த்துப் பிழைத்த எத்தர்கள் கூட்டம் எத்தனை! இத்தனைக்கும் பிறகுமா நீ நாடு கடத்தப்பட வேண்டும்? இது அரசியற் சட்டப்! நாட்டின் ஆட்சிக்கு எதிராக புரட்சிக் குரல் எழுப்பினுயா? அல்லது ஆட்சியைக் கவிழ்க்க அந்தரங்கத்தில் செயல் புரிந்தாயா? பிறகு ஏன் நீ நாடு கடத்தப்பட வேண்டும்? இந்த அநியாயத்தைத் தகர்த்தெறிய கேவலம் பேச்சளவிலேனும் 'உயிர் கொடுக்கவும் தயங்கேன்' என்று குரல் கொடுக்க உன் சமூகத்தில் எத்தனை பேர் தயார்?

### வரலாறு தெரியுமா?

அநியாய ஆட்சிக்கு அணையாய் அமைந்திருக்கும் அட்டூழியக் கருத்துக்கள் அறுபட வேண்டும்! அதற்காக நீ செயற்பட வேண்டும்! மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமானின் பண்பினை இரத்தத்தில் இரண்டறக் கலந்து வாழ்ந்தநீயா இன்று வெறுறவனுல் ஏற்படுத்தப்பட்ட வெங் கொடுமைச் சாக்காட்டில் விழுந்துபடப் போகின்றுய்? கங்கை கொண்டான் உன் மூதாதை? கடாரம் கொண்டான் உன் முப்பாட்டன்! இழித்துப் பேசிய காரணத்துக்காக கனக, விசயர் தலையில் கல்லேற்றி அழைத்து வந்தானே, உனது பாட்டன் என் மகன் புறமுதுகிட்டான் என்று கேட்டவுடன் அவனைப் பெற்ற வயிறை அறுத்தெறிவேன்; பாலூற்றிய மார்பினைப் பியர்த்தெறிவேன் என்று வீரக் குரல் எழுப்பினுளாமே உனது பாட்டி, கேட்டியா? கேவலம் ஒரு பெண்! இவையெல்லாம் சட்டுக் கதையாகத்தான் இருக்க வேண்டும் என்று மாற்றுன் கூறுவதைத்தான் நீ இன்று விரும்புகிறுயா? பாரடா, உன் தரங்கெட்ட தனத்தால் உன் பரம்பரைக்கே வரும் இழுக்கை!




### குருதி பொங்கட்டும்

இந்தப் பொங்கல் பெருநாளில் பூரிப்பு உனக்குக் கிட்ட வேண்டுமானுல், வருகின்ற இந்தப் பொங்கலிலே உன் வீட்டில் சர்க்கரையும், பாலும் கலந்த பச்சரிசி பொங்கினுல் மட்டும் போதாது. உன் உடலில் மானமும், வீரமும் கலந்த குருதியும் பொங்க வேண்டும்! பொங்கும் அந்தக் குருதியால் உன் இரத்த நரம்புகள் புடைத்துத் தெறிக்க வேண்டும். இன்று வரும் இந்த வேகம் உன் உரிமைகள் உன்னை அடையும் வரை தணியாது தழல் கொட்டட்டும்! அதன் மூலம் இந்தத் தரணி உன்னை யார் என்று அறியட்டும்!!

# அழகு சுடும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியை அணுகும்படி உன்னிடம் சொனனேன் அல்லவா? அப்படி நாம் அந்த மனச்சாட்சியை அணுகும் போது, ஊமைப்பிறவி எடுத்துள்ள பல உண்மைகள், நமக்கு மட்டும் கேட்கக் கூடியதாக வாய்திறந்து பேசுவதை நாம் கேட்கலாம்! என்னைப் பொறுத்தமட்டில் பல சந்தர்ப்பங்களில் நான் அப்படி என் மனச்சாட்சியை நெருங்கியதுண்டு. அப்பொழுதெல்லாம் அது பேசிய பேச்சுக்களை யாருக்கும் வெளிப்படுத்தாமல் என் மனத்துள்ளேயே ஊறப் போட்டு வைத்தது கிடையாது. அதனுல்தான் சமூகம் என்னை அப்படி நோக்குகின்றதோ என்னவோ?

'என்னைப்பற்றிய சங்கதி இருக்கட்டும் உன் விடயத்துக்கு வருவோம் சரோ! நீ எப்போதாவது உன் மனச்சாட்சியை நெருங்கி, ஊமைப் பிறவி எடுத்துள்ள பல உண்மைகளை அதன் வாயாலேயே கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றதா?'



# மலையகத் தமிழரின் புயல் நிவாரண உதவி

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சமீபத்தில் இயற்கையின் கோரப் பசிக்கு இலக்காகிய மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டு இலங்கைத் தொழிலாளர் கழகப் பொதுச் செயலாளர் திரு செ. கலியபெருமாள் வேண்டிக்கொண்டதற்கிணங்க, உடனடியாக கடந்த 4-1-65ல் மஸ்கெலியா இ. தொ. க கிளைக் காரியாலயத்தில் கழக முக்கியஸ்தர்களைக் கொண்ட ஓர் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் கழக அங்கத்தவர்கள் இருக்கும் தோட்டங்களில் உள்ள வீடுதோறும் சென்று அரிசியும் இதர பொருட்களும் சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. நிதி திரட்டுவதற்கென ஒரு குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது

மேற்படி குழுவில் மஸ்கெலியா அலுவலகப் பொறுப்பாளர் திரு. எஸ் சாமிநாதன், மாவட்டச் செயலாளர் திரு வை. கருப்பையா, லக்ஸபான தோட்டத்து வாலிப முன்னணியைச் சேர்ந்த திரு. எஸ் கே கந்தசாமி திரு எஸ் முத்தையா திரு எஸ் எல் கணபதி, திரு சலமன், (செச்சுமிதோட்டம்) திரு ச சுப்பிரமணியன், ஆகியோர்கள் தங்களின் அலுவல்களைக்கூட பின்போட்டு விட்டுத் தொடர்ந்து 7 நாட்கள் நிதி திரட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள்.

இந்நிதியைக் கூடிய விரைவில் இ. தொ. கழகப் பொதுச் செயலாளரிடம் சேர்ப்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது. இ. தொ. கழகமும் தமிழரசுக்கட்சியும் இதுபற்றி தோட்டத் தொழிலாளரிடையே துண்டுப்பிரசுரமொன்று விநியோகித்துள்ளன.

### செந்தமிழ் மன்றம்

அளவத்துகொட செந்தமிழ் மன்றத்தின் நடப்பு ஆண்டு பதவியாளர்கள்:

தலைவர்: மு. செ மு மூசின், துணைத்தலைவர்: சி சின்னத்தம்பி, செயலாளர்: ஞா. கனகராசன், துணைச்செயலாளர்: மீ க. செயினுலாப்தீன், பொருளாளர்: ச தங்கராசா, துணைப்பொருளாளர்: மு. பாலையா, அமைப்பாளர்: க பாலையா, துணை அமைப்பாளர்: ம. இராசமணி, நிர்வாகச் செயலாளர்: ந முருகையா, துணை நிர்வாகச்செயலாளர்: மா. வேலு.

செயற்குழு:-

மு. இராமையா, [illegible] வேலு, ச. தங்கராசு, பா. [illegible]

### வெளியீட்டு விழா

இலங்கை வானெலித் தமிழ் நாடகப் பகுதித் தலைவர் திரு. எஸ். சண்முகநாதன் எழுதிய "பரியாரி பாமர்" என்னும் நாடக நூலும், திரு. வ. கந்தவனம் அவர்களின் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றும் இவ்வாரம் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெறும் பொங்கல் விழாவில் வெளியிடப்படும்.

பலம், மீ. சா. சமீன், இ. சிவக்கொழுந்து.

அடுத்த ஆண்டு மத்தியில் தமிழ் விழா ஒன்றை மாத்தளையில் நடாத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

# சொல்லின் செல்வர் செ. இராசதுரை



1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ம் திகதி மாலை மட்டக்களப்பு மைதானத்திலே புதிய ஒரு குரல் எழுந்தது. ஒலிபெருக்கியின் முன்னே ஒல்லியான சின்னஞ் சிறிய உருவம் ஒன்று தென்பட்டது. கனல் கக்கும் தமிழ்ச் சொற்களை உதிர்த்துக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ் சிறிய உருவம் அன்றிலிருந்து இலங்கையின் அரசியல் வானிலே ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டது.

முதலாவது பாராளுமன்றத்தில் மட்டக்களப்பு பிரதிநிதியாகச் சென்றிருந்த ஜனுப் சின்னலெப்பை அவர்கள் தேசியக்கொடியாக சிங்கக்கொடியிருக்க வேண்டும் என்று வாக்களித்துவிட்டு வந்தார். அவருடைய கூற்றை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் கூட்டத்தில் தான் அந்தச் சிறிய உருவம் முதன் முதலில் தோன்றி சிம்மகர்ச்சனை செய்தது.

அடுத்தநாள் பெப்ரவரி 4. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டதாகப் பெரும்பான்மை மக்களான சிங்களவர்கள் கொண்டாடிய அதே தினம் தமிழ்பேசும் இனத்துக்குக் கரிநாள்தான். அதே வேளையில் தன தளைகளை அறுக்க, போராடக் கூடிய படையில் சேர்ந்து பணிபுரிய வல்ல ஒரு தலைவன் கிடைத்துவிட்டான் என்று தமிழன்னை உளம் குளிர்ந்தாள். அன்று முதல் திரு. செல்லையா இராசதுரை இன்று தமிழரசுக்கட்சியின் தலைவர்களுள் ஒருவராக, வடக்கையும், கிழக்கையும் மலைநாட்டையும் இணைக்கும் ஓர் இரும்புப் பாலமாகத் திகழ்வதில ஆச்சரியமில்லை.

'சொல்லின் செல்வர்' என்று தமிழகமும் ஈழமும் போற்ற தெள்ளுதமிழ் நடைக்கு புதிய சிறப்பு அளித்தவர் திரு. இராசதுரை. மாணவப் பருவத்திலேயே அடங்காத தமிழார்வத்தால் உந்தப்பட்டு 'லங்கா முரசு' என்ற மாத சஞ்சிகையை வெளியிட்டார். திரு. இராசதுரை தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலான 'சுதந்திரன்' இதழின் துணை ஆசிரியராகவும் சில ஆண்டுகள் பணிபுரிந்தவர். பேச்சோடும் எழுத்தோடும் நின்றுவிடாது திறமையான செயலும் புரியவல்லார் என்பதை தமிழரசுக் கட்சியில் இணைந்து அவர் ஆற்றிய தொண்டுகள், நடாத்திய போராட்டங்கள் நாட்டுக்கு எடுத்துக் கூறுகின்றன.

1956ம் ஆண்டுத் தேர்தலிலும், 1960ம் ஆண்டு மார்ச் மாதம், ஜூலை மாதம் ஆகிய பொதுத் தேர்தல்களிலும் மட்டக்களப்பு மக்கள் தங்கள் பிரதிநிதியாக திரு. இராசதுரையையே பெரும்பான்மையான வாக்குகளால் தெரிவு செய்தார்கள். இம்முறையும் தமிழரசுக்கட்சி வேட்பாளராக மட்டக்களப்பில் தேர்தலிற் போட்டியிடும் திரு. இராசதுரை வெற்றிபெறுவார் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உழவை உயர்த்தும் பொங்கற் பெருநாள்

நவாலியூர் த. பரமலிங்கம்

தை திருநாள் தமிழர் பெருநாள்! தை முதல்நாள் உழவர் உயர் நாள்!

பொங்கற் திருநாள் வந்ததும், அன்றைய தினம் அதிகாலையிலேயே பளளிகொண்டெழுந்து, பரவசத்தோடு நீராடி, நீறிட்டுப் புத்தாடையும் தரித்து, கோவிலுக்குச் சென்று பூசையைக் கண்டனுபவித்துப் புதுத் தென்போடு, எல்லோரும் காணப்படுவார்கள்.

பெண்கள், பூச்சூடி பொட்டிட்டு மஞ்சள் தேய்த்து, எப்படித் தங்களைத் தாங்களே அலங்காரம் செய்து கொள்கிறார்களோ; அதேபோற் தாம் வாழும் இல்லத்தையும் சுத்தப்படுத்தி 'வெண்கட்டி'த் தூளால், அழகழகாகக் கோலமிட்டு அலங்கரிப்பார்கள்.

சிறுவர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு தமக்குப் பெற்றோர், வாங்கிக் கொடுத்த பட்டாசுகளையும், பூந்திரிகளையும் கொழுத்திப் பூரித்துப் பெரும் ஆனந்தம் அடைவார்கள்.

ஆண்களோ, பொங்கலுக்கு வேண்டிய பொருட்களை முதல் நாளே, அருகிலுள்ள பட்டணத்துக்குச் சென்று வாங்கி வந்திருப்பார்கள். அத்தோடு, பெண்களுக்கான சேலை வகைகளையும், சிறுவர்களுக்கான சட்டைத் துணிகளையும் பட்டாசு, பூந்திரிபோன்றவைகளையும் அவரவர்களுக்கேற்றாற்போல், தெரிவுசெய்து கொள்வார்கள். அன்றைய தினம், ஒவ்வொரு தமிழரும் மகிழ்ச்சியோடு காணப்படும் இன்ப தினமாகும்!

இல்லந்தோறும் இன்புற்றிருக்கும் உழவர் பெருமக்கள் உயர்வுபெறும் ஓர் நாள் இந்நாள். உழைப்பவர், ஓய்வடையும் நாள் பொங்கற் பெருநாள். உழவர் பெருமக்களின, உயர்வைக் குறிப்பதே தைப் பொங்கலின் இலட்சியமாகும். வள்ளுவப் பெருந்தகை உழவை; உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்-மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்லுவர்! என்று எத்தகைய உயர்வாகக் கூறுகிறார் பார்த்தீர்களா? உழவுத் தொழில் உயர்வானது; உய்விப்பது.

வாழையடி, வாழையாகத் தமிழினம் கொண்டாடி வரும் இத் தைப்பொங்கற் பண்டிகை வந்ததும், ஒவ்வொரு தமிழரது நெஞ்சங்களும் பொங்கி; மகிழ்ச்சி பெருகி வாய்நிறைய 'பொங்கலோ பொங்கல்!' என்று கூறிப் பூரிப்படைவார்கள். அப்படிக் கூறி ஓய்வதற்குள் மறுவர், 'எங்கும் பொங்கி வரும் பொங்கல்!' எனக்கூறி தமக்குற்ற மகிழ்ச்சியையும், பரிமாறிக் கொள்வார்கள்.

ஆனால்...அப்படித் தமிழினம், கொண்டாடிப் பூரிப்படைந்த காலமோ...கடந்து விட்டது! இப்போதெல்லாம், தமிழினம் அப்படிக் கொண்டாடிக் களிப்பதற்குத் தயங்கத்தான் வேண்டியிருக்கிறது. எனெனில், ஆட்சி பீடமேறிய பெரும்பான்மையினர் தமிழினத்திற்குச் செய்யும் இடர்ப்பாடுகள் தாம் அவைக்குக் காரணம். போதாதற்குப் பொருட்களின் விலைகளில் இரட்டிப்பு இந்நிலையில், பண்டிகைகளைச் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும், கொண்டாடுவதென்றால் எங்ஙனம் இயலும்?

ஆட்சிபீடத்தவர்கள்தாம் எம்மை இன்னல்களுக்குள்ளாக்குகிறார்கள் என்று பார்த்தால், இயற்கை அன்னை கூடவா எம்மை இந்நிலையில் பழி தீர்த்துக் கொள்ளவேண்டும்?

விதைத்த வேளாண்மைகளை விருத்தியடையச் செய்யாத இயற்கை அன்னை, எப்படியோ தேட்டத்தைப் பெற்று வளர்ந்து முத்துக்களாக நெல்லு மணிகளைக் காட்டித் தலை சாய்த்து, அங்கொன்று இங்கொன்றாக நின்ற அறுவடைப் பயிர்களையுமல்லவா அடித்துச்சென்று அவதிக்குள்ளாக்கி விட்டாள்...அப்பப்பா! தமிழினத்துக்கு, இன்னல்களோ மலிந்துவிட்டது. மகிழ்ச்சி என்பது தளர்ந்து விட்டது. எனினும் தமிழினம் தயங்கப் போவதில்லை!

இயற்கை அன்னையின் கொந்தளிப்பால், தைப் பொங்கலைப் பொங்குவதற்கான நெல்லரிசியைப் பெறுவது, பெரும் சோதனையாகி விட்டது. அந் நிலையையே, இம்முறை பொங்கற் பண்டிகை எமக்களித்துச் சோதனை செய்கிறது போலும்...இருப்பினும், நாம்—எமது தமிழினம், சிறிதும் கலங்காமல் காரியத்திலீடுபட்டு, நிலைமையைச் சீர்ப்படுத்திக் கொள்வதோடு-தைப் பொங்கற்பண்டிகையையும், வழமையைப் போல் கொண்டாடித்தோல்விகளை வெற்றிப் படிகளாக்கி, தமிழினத்திற்கோர் உயர்ச்சி பெற்று வாழ்வோமாக!

# பொங்குவது பாலல்ல

—சு. பிதா—

களைந்த மேகங்கள்
இசைந்து கூடின், பலன்
விளைந்த பயிர்கள்
மிதந்து நீந்தின், தவிர
சிதைந்த வீடுகள்
சழன்ற கூரைகள், ஆயிரம்
பிளந்த நிலமதில்
விழுந்த உயிர்கள், பல்நூறு
கிளர்ந்த கடலில்
கலந்த மீனவர், கணக்கில
வளர்ந்த சமுதாயம்
முறிந்தநிலையில் தொகையில்
குறைந்த தமிழர்
இல்லம் உள்ளம், யாவிலும்
உவந்து பொங்குவது
பாலல்ல இரத்தக் கண்ணீர்

அன்பார்ந்த மருமக்களே,

வணக்கம். உங்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள். உங்களுக்கு பொங்கற் பரிசாக ஒரு போட்டியை ஆரம்பிக்கலாம் என்று எண்ணியுள்ளேன்.

நீங்கள் பள்ளியில் சேர்ந்த நாள் முதல் உங்கள் வகுப்பில் எத்தனையோ சுவையான சம்பவங்கள் நடந்திருக்கக் கூடும். அவற்றைக் கண்டோ, கேட்டோ நீங்கள் வயிறு குலுங்கச் சிரித்திருக்கலாம். அந்தச் சம்பவங்களை நினைவுபடுத்தி எழுதியனுப்புங்கள்.

பிரசுரிக்கப்படும் நல்ல சம்பவத்திற்கு பரிசு வழங்கப்படும். அது பற்றிப் பின்னர் விரிவாக அறிவிப்பேன்.

சம்பவங்கள் அனைத்தும் தாளின் ஒரு பக்கத்தில் 200 சொற்களுக்கு மேற்படாமலும் 120 சொற்களுக்குக் குறையாமலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். 'வகுப்பில் நடந்த சம்பவம்' என்று கட்டுரையை அனுப்பும் கடித உறையின் இடது பக்கத்தில் குறிப்பிட வேண்டும். 25-2-64க்குள் உங்கள் கட்டுரைகளை அனுப்பி வைக்க வேண்டும்.

நிற்க. மாமாவுக்கு அனுப்பும் சகல கடிதங்களுக்கும் தமிழிலேயே முகவரி எழுத வேண்டும். பொங்கற் புது நாளுடன் ஆங்கில முகவரியுடன் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது என்பதை நினைவு படுத்த விரும்புகின்றேன்.

அன்புள்ள

வளர்மதி மாமா

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(30)

—அன்ரனி பெர்ணண்டோ, கிரிலப்பனை—

## பால் குடிக்க பசு வேண்டாம் இனி

பால் குடிப்பதென்றால் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை. பசுப் பாலையும் ஆட்டுப் பாலையும் பலரும் விரும்பிக் குடிக்கின்றனர். பால் பருகுவதால் நமது உடல் கொழு கொழுவென்று வளர்கிறது. பள்ளிப் பாலர்கள் நன்கு வளர வேண்டும் என்பதற்காகவே பள்ளிக்கூடங்களிலும் பால் கொடுக்கிறார்கள்.

பசு பால் தருகிறது. ஆடும் பால் தருகிறது. இவை பாலை எங்கிருந்து பெறுகின்றன? புல்லையும் இலைகளையும் தின்று அவற்றைத் தானே நமக்குப் பாலாக்கித் தருகின்றன. புல்லும் இலைகளும் பாலாக மாறுவது எப்படியென்று இலண்டன் மாநகர அறிவர்கள் கூட்டமொன்று யோசித்துப் பார்த்தது. ஆராய்ச்சிகள் செய்து அது எப்படியென்பதை அவர்கள் கண்டு பிடித்தும் விட்டார்கள் அதனால், இப்போது இலைகளிலிருந்து பாலை நேரே பெறுவதற்கு முடிகிறது.

பசு மாடுகளும் ஆடுகளும் எல்லா இலைவகைகளையும் தின்பதில்லை அல்லவா? அவை தின்னாத இலைகளில் இருந்தும் பால் எடுக்க முடியும். இலைகளிலிருந்து நேரடியாகக் கிடைக்கும் பால் மிகுந்த சத்துள்ள பாலாக இருக்கிறது. பசுக்கள் தின்னும் இலைகளில் உள்ள சிவசத்துக்களில் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே அவை தரும் பாலில் கலந்திருக்கிறதென்று அறிவர்கள் கண்டு பிடித்துள்ளனர். இலைகளிலிருந்து நேரடியாகப் பெறும் பாலில் ஐந்தில் நாலு பங்கு சிவசத்துக்கள் இருக்கிறதாக அவர்கள் கூறுகிறனர். அதனால்தான் இலைகளிலிருந்து கிடைக்கும் பால் சிறந்தது.

இந்தப் புதிய பால், பசுப் பாலைப் போலவே இருக்கிறது. இதையும் போத்தல்களில் ஊற்றி விற்க முடியும். மாவாக்கிப் புட்டிகளில் அடைக்கவும் முடியும் தயிர், மோர், வெண்ணெய் எல்லாம் தயாரிக்கவும் முடியும். எனவே இனிமேல் மனிதர்கள் பால் குடிக்கப் பசுவை நம்பவேண்டியதில்லை. பார்த்த பக்கமெல்லாம் பச்சைப் பசேலென்று செடிகளில் நிறைந்து கிடக்கும் இலைகள் இருக்கும் வரை நமக்கு வேண்டிய அளவு பால் கிடைக்கும் என்பதில் சந்தேகமென்ன.

பசுக்களுக்குக் கூட இந்தச் செய்தி மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஏனென்றால், மனிதர்கள் பசுக்களை வீடுகளில் கட்டி வைத்து வளர்த்து கன்றுக்குரிய பாலையும் எடுத்துக்கொள்கிறார்கள். இந்தவழக்கம் இனி ஒழிந்தது விடும். பசுக்களும் ஆடுகளும் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழ முடியும் தானே!

# புயல் 2

ரூகிற்கன்னி

நீந்தமிழர் தலைநகராம் திருமலையில் மார்கழித் திங்கள் இருபத்திரண்டாம் நாள மழையுடன் மலர்ந்தது. அன்று முழுவதும் ஒரே தூற்றல் மழையாகவே இருந்தது. சூரியனையே காணோம். மழையையும் நோக்காது எதிர்வரும் நத்தார் பண்டிகையையிட்டு மக்கள் வேண்டிய ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர். இப்படியொரு புயல் வருமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

மாலை நேரமாகியது, மழை சற்று பலமாகவே பெய்தது, அத்துடன் கூடக் காற்றும் வீசியது. நேரம் செல்லச் செல்ல மழையைவிடக் காற்றின் வேகமும் பலமும் கூடியது. காற்று ஓ...!வென்று பேரிரைச்சலுடன் வீச ஆரம்பித்தது எந்தத் திசையிலிருந்து வீசுகிறதென்று அறிய முடியாதபடி பலபக்கமும் சுழன்று சுழன்று வீசியது. அந்தச் சுழிக்காற்று பல அடிகளுக்குக் கடல் நீரை எழுப்பிற்று. காற்றின் வேகம் கூடக்கூடக் கடலில் கொந்தளிப்பும் கூடியது. கடலிரைச்சல் காற்றின் ஓலத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது.

எங்கும் பேய் இருட்டு. வெளியில் எதுவுமே தெரியவில்லை. சத்தங்களை மட்டுமே கேட்கமுடிந்தது. சடார் படாரென மரங்கள் முறிந்து விழும் சத்தங்கள். பக்கத்திலிருந்த வீட்டின் தகரங்கள் சடசடவெனக் காற்றில் பறந்தன. சற்று நேரத்தில் அந்த வீடு சலார் எனத் தரையைத் தஞ்சமடைந்தது. வீட்டிலிருந்த இரண்டு குடும்பங்கள் சிறு சிறு காயத்துடனும் ஓலத்துடனும் எங்கள் வீட்டில் தஞ்சமடைந்தனர். எல்லோரும் நின்றும் இருந்தும் தூங்கிகொண்டிருந்தோம்.

மனதில் ஒருவித விபரிக்க முடியாத உணர்ச்சி, ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். எந்தவீடும்-நகராண்மைக் கழகத்தைத் தவிர-தப்பியிருக்கவில்லை: வீடுகளிலுள்ள ஓடுகளெல்லாம் பறந்து கிடந்தன. தகரங்களெல்லாம் கடதாசிபோல் வளைத்தெறியப் பட்டிருந்தன. துறைமுக வீதியின் பாதி கடலால் கொள்ளப்பட்டிருந்தது. வள்ளங்களும் சாமான் ஏற்றி இறக்கும் 'லேட்டர்'களும் சேதமடைந்து கரை சேர்ந்திருந்தன.

வீடிழந்தவர், பொருளிழந்தவர், உயிரிழந்தவர், விதியை நொந்தவர் போன்றோரின் சோகக்குரல்எங்கும் ஒலித்தது.

திருமலையில் அண்மையில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்களினாலும், சத்தியாக்கிரகங்களினாலும் ஏற்படவிருந்த தமிழ்—சிங்களவர் பிரளயத்தை மாற்றுவதற்கு இது ஒரு வழியாக இருந்தது. சதிக்குப்பல்களும், ஆணவக்காரர்களும் மலிந்துவிட்ட மலையை அழித்து நீதி நேர்மையை ஏற்படுத்தச் சூறாவளியும், மாசுநீக்கத் திருமழையும் ஏற்பட்டது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது. இது ஏற்பட்டும் இங்குள்ளோரின் ஆணவம் இன்னும் ஒடுங்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

# பொங்கலோ பொங்கல்

—செட்டிநகர் மதியரசு—

பொங்க லப்பா பொங்கல்!
புதுமை யான பொங்கல்!
பண்டை நாளைப் பொங்கல்!
பண்பு மிக்க பொங்கல்!

இன்ப மான பொங்கல்!
இதயம் மகிழும் பொங்கல்!
துன்பம் துடைக்கும் பொங்கல்!
துணிவைத் தரும் பொங்கல்!

வழங்கும் வையகப் பொங்கல்!
வனப்பு மிக்க பொங்கல்!
காளை யரின் பொங்கல்!
களிப்பு மிக்க பொங்கல்!

தமிழர் வாழ்வில் பொங்கல்!
தரணி யாழும் பொங்கல்!
இனிய பசும் பொங்கல்!
இன்ப முடைய பொங்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரைவில் எதிர்பாருங்கள்!** **சிலோன் எண்டெர்டெயின்மெண்ட் திரைகளில்!**

காதல் மன்னன் ஜெமினி கணேசன் — நடிகையர் திலகம் சாவித்திரி
மற்றும் தலைசிறந்த நடிகர்கள் நடிக்கும்

கலாசித்ராவின் **ஆயிரம் ரூபாய்**

தயாரிப்பு : சின்ன அண்ணாமலை
கதை—வசனம்—டைரக்ஷன் : கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

| | | |
|---|---|---|
| முருகன் ஜிந்துப்பிட்டி<br>புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், அஞ்சலிதேவி<br>நடித்த<br>**சக்கரவர்த்தி திருமகள்**<br>தினசரி: 2, 6, 9-30, ஞாயிறு: 10, 2, 6, 9-30 | ராணி யாழ்ப்பாணம்<br>எம் ஜி. ஆர், — சரோஜாதேவி<br>நடிக்கும்<br>**தாயைக் காத்த தனயன்**<br>தினசரி: 6-30, 9-30<br>சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30, 9-30 | ராஜேஸ்வரா மட்டக்களப்பு<br>எம். ஜி. ஆர், — பானுமதி<br>நடிக்கும்<br>**மலைக்கள்ளன்**<br>தினசரி: 6-30, 9-30<br>சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30, 9-30 |
| செண்ட்ரல் மன்னார்<br>4வது வெற்றி மாதம்!<br>சிவாஜி கணேசன்—தேவிகா—நம்பியார்<br>நடிக்கும்<br>**அன்னை இல்லம்**<br>தினசரி: 6-30, 9-30<br>சனி, ஞாயிறு: 2-30, 6-30, 9-30 | செண்ட்ரல் பருத்தித்துறை<br>அசோகன்—என். டி. ராமராவ்<br>நடிக்கும்<br>**சம்பூர்ண மகா பாரதம்**<br>தினசரி: 6-30, 9-30<br>சனி: 10-30, 6-30 9-30<br>ஞாயிறு: 10, 6 30, 9-30 | லிபேர்ட்டி ஹட்டன்<br>கல்யாண்குமார் — எம். ஆர். ராதா<br>நடிக்கும்<br>**கடவுளைக் கண்டேன்**<br>தினசரி: 6-30, 9-30<br>ஞாயிறு: 10-30, 2-30, 6-30, 9-30 |

**அகில இலங்கை எங்கும் 4வது மகத்தான வெற்றி வாரம்!**

ஜீவராணி—ரவீந்திர ருபசேன—ஆனந்த ஜயரத்ன—லினடி சில்வா—சாந்திய குமாரி—விஜிதா மல்லிகா—எல். எம். பெரேரா நடித்த

**சுயாகே ரஹச (சுயாவின் ரகசியம்)**




**விரைவில் வருகிறது**
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
மற்றும்
7 திரைகளில்!
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, சௌகார் ஜானகி, நாகேஷ் நடித்த



**அல்லி**

**மகிழ்வூட்டும் 3-வது வாரம்!**
எல்பின்ஸ்டன் (மருதானை)
ரெக்ஸ் (வெள்ளவத்தை)
வின்சர் (யாழ்ப்பாணம்)
வேலஸ் (கண்டி)
ரீகல் (நுவரெலியா)
தாஜ்மஹால் (மாத்தளை)
கிங்ஸ் (பதுளை)



சிவாஜி கணேசன்—சரோஜாதேவி—ராதா—ரங்கராவ்—ராமராவ்
நடித்த

**கல்யாணியின் கணவன்**





**புகழூட்டும் 4-வது வாரம்**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**விஜயா** (மட்டக்களப்பு) **விஜிதா** (அட்டன்) **விஜிதா** (மலைகலியா)

ஆகிய திரைகளில்!

ஒப்பாரும் மிக்காருமில்லாத உயர்ந்த வீரனுய்த் திகழ்ந்து
ஓங்கு புகழுடன் மாண்ட வள்ளலின் வரலாறு

சிவாஜி கணேசன்—அசோகன்—ராமராவ்—முத்துராமன்
சாவித்திரி—தேவிகா—எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த

பத்மினி பிக்சர்ஸ் **கர்ணன்** (ஈஸ்ட்மான் கலர்)


இப் பத்திரிகை ... கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஜனவரி மாதம் 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org